ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-௭௱௫ புரட்டாசித்திங்கள் 1928௵ செப்டம்பர்௴—அக்டோபர்௴	பரல் ௯

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாெருவ னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.

அப்பர்.

உரை:

'என்னைச் சேர்ந்தவர்களில் யாரும் எனக்கு இனியவர்களா யில்லை; ஆனால் என்னைவிட இனியராயிருக்கும் ஒருவர் என்னுள்ளே இருக்கின்றார். அவரியாரென்றால், அவரே என்னுள் உயிர்வளிவடிவாய் நின்று வெளிவந்து உள்நுழைந்து என்னகத்தையே பொருந்தி நிற்குந் திருவின்னம்பர்ச் சிவபெருமான்.'

'என்னிலும் இனியான்' என்பது இறைவனைக் குறிக்கின்றமையால் 'என்னிலாரு மெனக்கினியாரில்லை' யென்பது, அவ்விறைவனும் 'என்னில்' என்னும் உயிரும் நீங்கலாக, ஏனையவாயுள்ள மலக் கருவிகளைக் குறித் துணர்த்தும். அவையாவன: ஓருயிர் உடல் நிலைக்கு (சகல நிலைக்கு) வந்ததன் பின்னர்ப் பொருந்தும் பொறிபுலன்கள் நெஞ்ச நினைப்புகள் முதலான அகப்புறக் கருவிகளும் அருவினைச் சுற்றங்களுமா மென்க. மனைவி மக்கள் முதலான உறவினரையும் ஈண்டே அடக்கிக் கொள்க. என்னை? இவ்வுறவினரையும் மலப் பொருள்களோடு கூட்டியே அப்பர் பெருமான் 'உரைதளர்ந்து உடலார் நடுங்காமுன' மென்று திருநல்லம் தேவாரத்தில் 'உடலார்' என்று அருளுகின்றமையானும், இவரோடொப்பவே மாணிக்கவாசகப் பெருமானும் 'எந்தை யெந்தாய்

சுற்றமற்று மெல்லா மென்னுடைய பந்தம்' என்று சுற்றத்தாரைப் பந்தப் பொருள்களாகவே அருளிச்செய்கின்றமையானு மென்பது. உடல் நிலையில் தன்னைச்சூழ்ந்து வினைச்சுற்றங்களாய் நிற்கும் இப் பொறி புலன்கள் யாவுந் தன்னைத் தீவினைக்கே இழுத்துச் சேரு நீரவாயிருப்பக் காண்டலின், 'என்னிலாரு மெனக்கினியாரில்லை' யென்றார். 'ஆரும்' யாரு மென்பதன் திரிபு. 'என்னினும் மினியா' னென்றார், தன்னினும் பேரறிவு பேரினிமைத் தன்மைகளால் இறைவன் நிறைந்தவ னாதலி னென்பது.

இனி இறைவ னிருப்புக்கு 'உயிர்ப்பைக்' காட்டினார், இறைவன் எஞ்ஞான்றுந் தன்னுள் இனியனாய் உயிர்க்குயிரா யிருந்து உயிரளித்தலான். 'என்னுளே நிற்கும்' என்றார், பிரிவின்மையை யுணர்த்துதற்கு. திருவின்னம்பர் - ஒரு திருப்பதி.

பரணரும் அவர்காலத்துப் புலவரும்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A., M. L.]

கடைச்சங்கத்தார் காலத்துச் சிறந்து விளங்கிய பெரும்புலவர் மூவருள்ளும் முற்பட்டவர் பரணராவார். இவர் அகநானூற்றுள் ஏறக்குறைய ௩௪-பாடல்களும், புறத்துள் கரு-பாடல்களும் பாடியுள்ளார். நற்றிணையிலும், குறுந்தொகையிலும் இவர் பாட்டுக்களுள்ளன. பதிற்றுப்பத்தில் ரு-ம் பத்து இவராற் பாடப்பெற்றது. இவர் இன்ன ஊரார், இன்ன குலத்தாரென்று தெளிவாய் விளங்கவில்லை. பதினோராந் திருமுறையில் சிவபெருமான் திருவந்தாதி யொன்று இவர் பாடியதென்ப. நெடுங்கழுத்துப் பரணர், வன் பரணர் என்பவர் இவரின் வேறானவர். பரணி நாளிற் பிறந்தமையால் இப்பெயர் வந்ததென்று கூறுவாரு முளர். செங்குட்டுவனை இவர் பாடியிருப்பதால் இவர் அவர்கள் காலத்தவரென்பது தெளிவு. உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியின் ஆயுதச் சிறப்பையும் படைச் சிறப்பையும் உவமை நயந்தோன்றப் புறம் ௪-ற் பாடியுள்ளார்.

> "தாயில் தூவாக் குழவி போல,
> ஓவாது கூஉநின் உடற்றியோர் நாடே"

என்றது காண்க.

குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பல் தடக்கைப் பெருநற்கிள்ளியும் போர்செய்து வீழ்ந்து இறந்தவிடத்துப் பரணர் பாடிய பாட்டுப் புறம் சுந - வது. அதனுள் நால்வகைச் சேனையும் செயலற்றிறந்த இரக்கமான நிலையை எடுத்துரைத்

தார். அதிகமான் நெடுமானஞ்சியைப் பரணர் தமக்கு முன் பாடியதாக ஔவையார் புறம் ௯௯-ற் கூறியுள்ளார். செங்குட்டுவனது போர்க்களத்தை ஏர்க்களத்திற்கு உவமித்து இவர் பாடிய பாட்டுப் புறம் ௩௬௯. தழும்பன் என்பவனைப்பற்றிப் புறம் ௩௪௮-லும், தித்தன் என்னும் சோழனைப்பற்றி ௩௫௨-லும் இவர் குறித்துள்ளமையால், அவர்கள் இவர் காலத்திற்கு முற்பட்டவர்களென்று கருத இடமுண்டு.

வையாவிக்கோப் பெரும்பேகனை இவர்பாடிய புறம் ௧௪௧-வது பாட்டுப் பாணாற்றுப்படையாகவும் புலவராற்றுப்படையாகவு மிருக்கிறது. அப்பாட்டிற் பேகனென்பான் மறுமை நோக்காது வறுமை நோக்கி ஈயும் வண்மையுடையவனென்றும், புறம் ௧௪௨-ல் அவன் கொடை மடம் படுதலல்லது படை மடம் படானென்றும் பாடினர். அவன் மயிலுக்குக் குளிர் நீங்குதற் பொருட்டுப் போர்வை கொடுத்தவனென்பது புறம் ௧௪௫-வது பாட்டாலும், ௧௪௧-வது பாட்டாலும் விளங்குகின்றது. பேகனால் கைவிடப்பட்ட கண்ணகி யென்பவளை அவன் மீண்டும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் அவனைப் புறம் ௧௪௪-வது ௧௪௫-வது பாட்டுகளில் இவர் வேண்டியுள்ளார்.

தித்தனைப்பற்றி அகம் ௬, ௧௨௨-லும், செழியன் கூடற் போரைப்பற்றி அகம் ௧௧௬-லும், பசும்பூட் பாண்டியனைப்பற்றி ௧௬௨-லும், கரிகால்வளவனைப்பற்றி ௧௨௫-லும், அவன் வேளிர் பதினொருவரை வெண்ணிப் பறந்தலையில் வென்றதைப்பற்றி ௨௪௬-லும், மாந்தன் பொறையன் கடுங்கோவைப்பற்றி ௧௪௨-லும், செங்குட்டுவனைப்பற்றி ௨௧௨-லும் பாடியிருப்பதால் இவர் காலத்துப் பெருவேந்தர்களுள் இவராற் பாடப்பெறாதாரில்லை. கரிகால் வளவன் மகளாகிய ஆதிமந்தி தன் கணவனாகிய ஆட்டனத்தியென்னும் சேர அரசனைக் காவிரிப் புதுப்புனல் விழாக் கொண்டாடும் கழார்ப் பெருந்துறையில் தப்பவிட்டு வருந்திக் கடற்கரைக்குச் சென்று மருதியென்பவளது உதவியால் அவனைக் கண்டு மீட்டுவந்த கதையினை அகம் ௭௬, ௨௨௨, ௨௩௬-ம் செய்யுட்களில் இவர் குறித்துள்ளார்.

குறுநில மன்னருள் சோழன் வீரனாகிய மத்தியென்பவனை அகம் ௬-வது பாட்டிலும், பரிசிலர்க்கு யானையும் நன்கலனும் அளிக்கும் அஃதை யென்பவனை அகம் ௭௬-வது பாட்டிலும், கழுவுள் என்பவனை ௧௩௫-வது பாட்டிலும், நன்னனை ௧௫௨, ௨௫௮, ௨௦௮-ம் பாட்டுக்களிலும், பொதியிற் றலைவனாகிய திதியனை ௩௨௨-ம் பாட்டிலும், சோழன் படைத் தலைவனாகிய பழை

யன் என்பவனை ௩௨௬-லும், கோசரால் கண்களையப்பட்ட அன்னி யென்பவன் கதையை ௨௯௨-லும், ஆய் எயினன் மிஞிலி என்பவருக்குள் நடந்த போரினை ௧௪௮-லும், எவ்வி நீடூர்க்கிழவோன் என்பவனை ௨௬௬-லும், வல்லன் கிழான் என்பவனை ௩௫௬-லும் பாணன் ஆரியப் பொருநன் என்பவர்களை ௩௮௬-லும் குறித்துரைத்தனர்.

ஆரியரைப்பற்றி ௨௭௬-௩௦௬ என்பவைகளிற் பேசியுள்ளார். கொல்லி மலையிலுள்ள கடவுள் எழுதிய பாவையைப்பற்றி அகம் ௬௨-லும், கவிரமலையிலுள்ள சூர்மகளைப்பற்றி ௧௯௮-லும் பாடியிருக்கிறார். ஆலமுற்றம் என்னுமிடம் சிவனார்க்கு உரியது என்று கூறிய அகம் ௧௮௧-ல் அவரை,

"நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றங் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மண மகளிர்
கைசெய் பாவை துறைக்க ணிறுக்கும்"

என்றது காண்க. ஆனைகளை மிகுதியாகவுடைய ஆயைப்பற்றி அகம் ௧௫௨-லும், பிற விடங்களிலுங் குறித்துள்ளார். இவர் மருதம் குறிஞ்சி பாலை யென்னும் முத்திணையையுமே மிகுதியாகப் பாடியுள்ளார். அக்காலத்தில் இரவலர்க்கு ஆம்பல் இலையில் சுடு சோற்றினை இனிய புளிப்புடைய பிரம்பின் பழங்களோடு கலந்து விடியற் காலத்தில் இடுவதை அகம் ௯௬-ல் குறித்தமை காண்க. இவர் செங்குட்டுவனைப் பாடி உம்பற்காட்டு வரும்படியையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றனர்.

இவரோடு ஒரு காலத்தவரான **கழாஅத் தலையார்** என்னும் புலவர் குடக்கோ நெடுஞ்சேரலாதன் பொருது வீழ்ந்திறந்ததைக் கண்டு நெஞ்சம் வருந்திப் பாடிய பாடல் புறம், ௬௨. போர்க்களத்தில் பருந்தும் பேயும் பொருந்துவதைப் பற்றியும், பல்வேறு மொழிகள் பேசும் படைகள் துணைபுரிவதைப் பற்றியும் இப் பாட்டினுள் இயம்பினர். இறந்த வீரரின் பெண்டிர் 'பச்சிலையைத் தின்னாது குளிர் நீரில் முழுகாது கிடந்தனர்' என்றமையால், அங்ஙனஞ் செய்தல் அக்காலத்துக் கைம்மை வழக்கமென்று தெரிகிறது. மேலும் அப்பெண்டிர் போர்க்களத்திற் சென்று தங்கணவருடன் உயிர் விடுங் கற்புடையராய்த் திகழ்ந்தன ரென்றும் விளங்குகின்றது. அவர் புறம் ௩௬௫-ல் பெருஞ்சேரலாதன் கரிகாலனொடு பொருது வடக்கிருந்தானைக் கையறு நிலையாகப் பாடினார். ௩௬௮-லும் உயிர் போகாது

போர்க்களத்தில் கிடந்து வருந்துபவனைப்பற்றி இரங்கிப் பாடினது காண்க. இவர் பாடிய பாடல்கள் மிகுதியுங் கையுறு நிலையே. இருங்கோவேள் என்பவன் இவரை அவமதித்ததாகப் புறம் உ௱௨-ல் கபிலர் கூறுவதால், இப்புலவர் கபிலர்க்கு முற் பட்டவரென்பது தெளிவு.

உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியையும் பேகனையும் பெருங்குன்றூர்கிழார் என்னும் புலவரொருவர் பாடியுள்ளார். அப்புலவரும் சேரமான் இளஞ்சேரலிரும்பொறையைப் பதிற் றுப்பத்திற் பாடிய பெருங்குன்றூர் கிழாரும் ஒருவரேயென் னில், இவர் பரணர்க்குப்பின் வந்தவராய்ப் பேகன் காலத்திலே மிகவும் இளைஞராயிருந்து நெடுங்கால மிருந்திருக்கவேண்டும். இவரைப்பற்றிப்பின் ஆராய்வோம். அவ்வாறே அரிசில் கிழாரும் நீண்ட ஆயுளுடையராயிருந்திருத்தல் வேண்டும். வன்பரணர் என்பவர் பரணருக்குப் பிற்பட்டவர். அவரும் பேகனைப் பாடி யுள்ளார். நெடுங்கழுத்துப் பரணரென்பவர் வேத்தியல் என்னுந் துறையைப் புறம் உ௬௪-ற் பாடினர். இவர் பாடிய வேந்தன் இன்னுரென்று விளங்கவில்லை. இவர் பாடிய பாட்டினுள் பரணரை நோக்கித் தூய வெள்ளிய ஆடையுடுத்துப் பறவைகள் போல் ஆரவாரம் செய்தலை யொழித்தல் வேண்டுமென்றும், பண்ணுகிய இரங்கற் பண்ணைப் பாடுவதால் போர்க்களத்தை விட்டு நரிகளை ஓட்டலாமென்றுங் கூறியது காண்க.

செங்குட்டுவன் காலத்தோடு ஒத்த காலத்தவனுகிய கரி கால் வளவனது அம்மானுகிய இரும்பிடர்த்தலையா ரென்பவர் கருங்கை யொள்வாட்பெரும்பெயர் வழுதி யென்னும் பாண்டி யனது வீரத்தையும், இரவலர்க்குக் குறிப்பறிந்து கொடுக்கும் அவன் வண்மையையும் புறம் ௩-வது பாட்டில் பாடியுள்ளார். அப்பாட்டினுள் 'பெருங்கையானை இரும்பிடர்த்தலையிருந்து' என்றமையால் இவருக்கு இப்பெயர் வந்தது போலும். செங் குட்டுவனது முன்னோனுய்க் கரிகால்வளவனோடு பொருது புறப் புண் நாணி வடக்கிருந்த பெருஞ் சேரலாதனைப் போர் நடந்த இடமாகிய வெண்ணியிலிருந்த புலமை மிக்க குயத்தியாரொருவர் புகழ்ந்து பாடிய பாட்டுப் புறம் ௬௬. இதனுள் கரிகாலன் கடற் போர்செய்வதில் வல்லவனென்றும், வெற்றியடைந்த அவனைப் பார்க்கிலும் வடக்கிருந்த சேரலாதனே சிறந்தவனென்றும் புல வர் பாடினது காண்க.

கரிகாற்பெரு வளத்தானைப் பாடிய மற்றொரு புலவர் கருங் குழலாதனுரென்பவர். அவர் புறம் எ-வது பாட்டில் அவனது

வண்மையையும் எழிலையும் வீரத்தையும் நாட்டு வளத்தையும் இனிதெடுத்து இயம்பினார். புறம் ௨௨௪-ல் அவன் பாணரைப் பாதுகாத்தமையும் வேதவேள்வி முடித்தமையுங்கூறி, அவன் இறந்தமையால் முதுவை மகளிரெல்லாம் அணி களைந்தனரென்றும் உலகமே இரங்கத்தக்கதென்றும் உரைத்தார்.

கரிகாலனைப் பட்டினப் பாலையிற் பாடினவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். இவர் அவனிடம் பதினாறு நூறாயிரம் பொன் பரிசிலாகப் பெற்றார். பொருநராற்றுப் படையிலும் இவன் கதை கூறப்பட்டுள்ளது. இவனால் வெண்ணியில் வெல்லப்பட்ட பாண்டியன், கருங்கை யொள்வாள் வழுதிக்குப் பிற்பட்டவனாதல் வேண்டும். குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவளவனும் கரிகாலனும் ஒருவரே யென்றால், பெருந் திருமாவளவனைப் பாடிய புலவர்களும் கரிகால் வளவன் காலத்தவரே யாவர். அகம் ௧௪௧-ல் கரிகாலனைப் பாடிய நக்கீரர் பெருந்திருமாவளவனுக்குப்பின் நெடுங்கால மிருந்திருக்கவேண்டும். அல்லது அவர் தலையாலங் கானத்து நெடுஞ்செழியனைப் பாடிய நக்கீரரின் வேறானவர்.

பெருந்திருமாவளவனைப் பாடிய பெரும் புலவர் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார். காரிக் கண்ணனாரென்பது கருங் குருவியின் கண்போன்ற கண்ணையுடையவரென்று பொருள்படும். இவர் குலத்தால் வணிகர். அகத்துள்ளுங் குறுந்தொகையுள்ளும் இவர் பாடியிருந்தாலும் புறநானூற்றினுள்ளேயே இவர் பாடல்கள் மிகுதியுங் காணப்படுகின்றன. அகம் ௱௭-ல் தேக்கிலையில் வடுகர் தயிர்ச்சோறுண்ணும் வழக்கத்தை இவர் குறித்தது காண்க. அவரைக் 'கல்லா நீண்மொழிக் கதநாய் வடுக' ரென்றார். புறம் ௫௮-ல் இப்புலவர் பெருந்திருமாவளவனும் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது அவர்களை நோக்கி இருவரும் ஒற்றுமையுடையராயிருக்க வேண்டுமென்றும், புறங்கூறுவார் சொற்கேட்டுத் தம்முள் பகை கொள்ளக்கூடாதென்றும் ஒற்றுமையால் இருவரும் நாடுகள் பலவற்றைவென்று எல்லா மலைச்சிகரங்களிலும் புலிப்பொறியையுங் கயற்பொறியையும் பொறிக்கவேண்டுமென்றுங் கூறியது மிகவும் அழகாயிருக்கின்றது. புறம் ௫௭-ல் நன்மாறனை நோக்கிப் பகைவர் நாட்டுக் காவல் மரங்களை வெட்டுதல் கூடாதென்று இவர் வற்புறுத்துவதால், அவை அக்காலத்தே மிகப் புனிதமாகக் கருதப்பட்டனவென்று தெரிகிறது.

பெருந்திருமா வளவனைப் பாடிய மற்றொரு புலவர் உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்பவர். இவர் புறம் ௬௰-ல்

வளவனைக் கடற்கரையிலிருந்து உப்புச் சுமைதாங்கி மலைக்கேகும் வலிய பகட்டிற்கு உவமித்தார். தாமோதரனென்ற பெயரால் இவரைத் திருமால் சமயத்தவரென்ப.

அவனைப் பாடிய மற்றொரு புலவர் கோனாட்டு எரிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனாரென்பவர். இவர் குட்டுவன் கோதையையும் (புறம் ருச) இலவந்திகை நலங்கிள்ளி சேட்சென்னியையும் பாடியிருப்பதால் அம்மன்னர் திருமாவளவன் காலத்தவராயிருக்கலாம். இவர் குறுநில மன்னர்களாகிய ஏனாதி திருக்கிள்ளியைப் புறம் ௧௬எ-லும், ஈர்ந்தூர்கிழான் தோயன் மாறனைப் புறம் ௧௮௰-லும், ஏனாதி திருக்குட்டுவனைப் புறம் ௩௯௪-லும் பாடியுள்ளார். பரிசில் நீட்டித்ததற்காகப் பெருந்திருமாவளவனை இவர் கடிந்து பாடிய புறம் ௧௯௭-ம் பாட்டில் அறிவில்லாதவருடைய செல்வத்தைப் பார்க்கிலும் நல்லறிவாளரது வறுமையைத் தாம் உவப்பதாகக் கூறியுள்ளார்.

> "மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்து
> முணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம்
> நல்லறி வுடையோர் நல்குர
> வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே"

என்றது காண்க. பரணர் பாடிய அஃதையின் சிறப்பை வெள்ளெருக்கிலையார் என்பவர் புறம் உ௩௩-ம் பாட்டினுட் குறித்துள்ளார். அவர் எவ்வியைப் பாடிய இரண்டு பாட்டுகளும் அவன் இறந்தபின் பாடப்பட்டவைகளே. புறம் உ௩௪-ல் எவ்வியின் மனைவி யானையடியளவு மெழுகிய சிறிய இடத்தின் கண்ணே புல்மேல் அவனுக்குப் பிண்டம் வைத்தலைக் குறித்திருப்பது மிகவும் பரிதாபத்தை உண்டாக்கக் கூடியது.

பாணர் பாடிய பசும்பூட் பாண்டியன் தலையாலங் கானத்து நெடுஞ்செழியன் அல்லன். மதுரைக் கணக்காயனாரும் (அகம் ௩௩௮), நக்கீரரும் (அகம் உ௫௩) அவனைப் பிற்காலத்தே தமது பாட்டிற் குறித்தனர். அகம் உ௩௧-ல் அவனைப் பாடிய மதுரை ஈழத்துப் பூதன் றேவனார் எக்காலத்தவரென்று விளங்கவில்லை. அவர் விலங்கின் குறிப்புகளை அறிவதில் மிக வல்லவர்போலும். அகம் ௮௮-ல் தினைக்கதிரைத் தின்ன வரும் பன்றி பல்லிக்குறி (சகுனம்) பார்த்துவரு மென்றும், அசுணமா வண்டின் ஒலியை யாழோசையோ வென்று கருதுவதாகவும் கூறினது காண்க. ஆரியரைப்பற்றி இம்மென்கீரனார் என்னும் புலவர் அகம் ௩௯௮-ல் பாடியிருக்கின்றார். இவர் குறிஞ்சி பாடுவதில் வல்ல

வர். இவர் தலைவி இம்மென்று அலமரா நிற்பதாகச் செப்பின மையான், இம்மென் என்ற அடைமொழி இவர் பெயருக்கு ஏற்பட்டது.

சோழர் வல்லத்துப் புறங்காட்டில் ஆரியப்படை வென்றதைப் பாலைக் கொட்டிலார் என்னும் புலவர் அகம் ௩௩௬-ல் பாடியுள்ளார். இவர்பாடிய பாட்டில் சேரிப்பரத்தை இற்பரத்தையை இகழ்ந்துகூறிய பகுதி மிகவும் நகைச்சுவை விளக்கவல்லது. யானையின் இரக்கத்தினாலே பாகன் பிழைத்திருப்பதுபோலத் தான் விழவின்கண் வாராமையால் இற்பரத்தை பிழைத்திருப்பதாகச் சேரிப்பரத்தை பேசினாள். அகம் ௧௫௨-ல் அவர் பாடிய பாட்டினுள் மோரியர் வரலாறுங் கூறப்படுகின்றது. இந்த ஆய் பொதியமலைக்குத் தலைவனான ஆய் அண்டிரனின் வேறாவன்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய னென்பவன் செங்குட்டுவன் காலத்தவனே. அவன் புறத்துள் பாடிய பாட்டில் கல்வியின் பெருமையையும் மிகவும் அழகாக விளக்கினன். இவனுக்கு முன்னோ பின்னோ நம்பி நெடுஞ்செழியன் என்னும் அரசன் ஆண்டனன். அவனது சிறப்பைப் பேரெயின் முறுவலா ரென்னும் புலவர் புறம் ௨௩௯-ல் நயமிகப் பாடியுள்ளார். அப்பாட்டினால் உலகத்திலுள்ள எல்லாவகை யின்பங்களையும் அவன் நுகர்ந்தனன் எனவும், பல்வகை மக்களிடத்து அவரவர் தகுதிக்கேற்ப நடக்குந் தன்மையும் வண்மையுமுடையனா யிருந்தனனெனவும், இனி அவனுக்கு யாது நேரினு மதுபற்றிக் கவலையில்லை யெனவுங் கூறினார்.

"வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தா னிரப்பறியல
னிரந்தோர்க்கு மறுப்பறியலன்"

என்ற அடிகளால் அவனது தகுதியை விளக்கினது காண்க. இப்புலவர் பெயரால் இவர் சோழநாட்டிலுள்ள பேரெயிலென்னு மிடத்தில் வாழ்ந்தவ ரென்ப. முப்புரமெரித்த சிவபெருமானது திருப்பெயரை உடையவ ரென்றுங் கூறுப.

வஞ்சி நகரத்தி லரசுசெய்த மாந்தரன் பொறையன் கடுங்கோவைப் பரணர் அகத்துள் பாடியுள்ளார். இக்குடும்பத்தைச் சார்ந்த பாலைபாடிய பெருங் கடுங்கோ வென்பவர் அகநானூற்றுள்ளும் புறநானூற்றுள்ளும் சிலபாடல்கள் பாடியுள்ளார். இவர்

பாடல்கள் நற்றிணையிலும் உள்ளன. கலித்தொகையில் முதலாவதாகிய பாலைக்கலி இவர் பாடியது. இவர் யாண்டும் பாலையைப் பாடியுள்ளார். இவரைப் பேய்மகள் இளவெயினி யென்னும் பெண்புலவர் புறநானூற்றுப் பதினோராம் பாட்டிற் பாடினர். பேய் மகள் என்றது பேய்த் தெய்வத்தை வழிபட்டுவருவதால் அவள் ஆவேசம் உற்றவளென்பது கருத்து. எயினி யென்றதால் எயினர் மரபினள் இவள் என்பது தெளிவு. இவள் பாடிய பாட்டினுள் மங்கையர்கள் மணற்பாவை செய்து அதற்குப் பூக் கொய்து சாத்துதலும், ஆற்று நீரிற் பாய்ந்து விளையாடுதலும் அரசர்கள் பாணருக்கும் விறலியர்க்கும் முறையே பொன்னணி கலமும் வெள்ளி நாராற் றொடுத்த பொற்றாமரைப் பூவும் பரி சாகக் கொடுப்பதுங் கூறப்பட்டது.

பெருங்கடுங்கோவின் தம்பி மருதம் பாடுவதிற் சிறந்தவர். இவர் அகத்துட் பாடிய ௯௬-ம் பாட்டில் அஃதையென்னும் பெண்ணின் றந்தையாகிய சோழன் சேரபாண்டியரைப் பருவூ ரென்னுமிடத்திற் பொருது வென்றானென்றுங் கூறியுள்ளார். அகம் ௧௭௬-ல் மருத நிலக் கருப்பொருளாகிய தாமரை முதலிய வற்றை மிகவும் அழகாகப் புனைந்துரைத்தார்.

"கழைகண் டன்ன தூம்புடைத் திரள்கால்
களிற்றுச்செவி யன்ன பாசடை மருங்கிற்
கழுநிவந் தன்ன கொழுமுகை யிடையிடை
முறுவன் முகத்திற் பன்மலர் தயங்கப்
பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து"

என்றது காண்க. இப்பாட்டினுள் 'புல்லுளைக்குடுமிப் புதல்வர்' என்றதால் அக் காலத்தில் குழந்தைகளுக்கு அழகிய சிறுகுடுமி வைப்பது வழக்கமென்று தெரிகின்றது.

குடக்கோ நெடுஞ் சேரலாதன் புதல்வன் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்துப் பாடியவர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார். இவர் அணிகலனுக்காக ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரங் காணமும் பெற்று அரசன் பக்கத்திருக்கும் சிறப்பும் அடைந்தார். இவள் பாடல்கள் புறநானூற்றிலும் குறுந்தொகையிலும் உள்ளன. குறுந்தொகையில் ௨௧௰-ம் பாட்டில் "விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'' என்று காக்கையைச் சிறப்பித்துப் பாடினமையாற் காக்கை பாடினியார் என்ற பெயர் பெற்றனர். வீரத்தாயொருத்தி தன் மகன் போர்க்குப் பின் வாங்கினானென்று கேள்

விப்பட்டு அங்ஙனம் அவன் செய்தால் தனது மார்பினைத் துணிப்பதாக வஞ்சினங்கூறிக் கையிற்கொண்ட வாளோடு போர்க்களத்திற் சென்று தன் மகன் போரிற்பட்டு வீழ்ந்து கிடந்ததைக்கண்டு பெற்ற போழ்திலும் மிக உவந்ததாகப் புறம் உ௭௮-ல் இவர் பாடியுள்ளார்.

"செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

தொண்டர்படை

[இலங்கை, திருவாளர் சே. சின்னத்தம்பி யவர்கள்]

(௩௭௭-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறாவதாகத் தொண்டர்கட்கு அறிவுடைமை வேண்டும். மேற்குறித்த பண்புகட்கெல்லாம் ஊற்றாய் உள்ளதும் இஃதே. தொண்டெனும் செம்பொருள் உருக்கொண்டொளிரும் இடமும் அறிவுளமே யாம். அறிவு நிலவா உள்ளத்தில் தொண்டு அரும்புதல் ஒரு பொழுதும் முடியாதென்க. "அறிவுடையாரெல்லா முடையர், அறிவிலார் என்னுடையரேனுமிலர்" என்பது பொய்யா மொழி. வாழ்வுப் பேறுகளுளெல்லாம் மிக்க உயர்வுடையது அறிவே யாகலினன்றோ? 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்ற பெருமொழியும் எழுந்ததென்றுணர்க. அறிவுடையார்க்கு இல்லாத தொன்றில்லை; அவர்கட்கு எல்லாமுண்டு. அன்பு உண்டு; அருள் உண்டு; இன்பம் உண்டு; செல்வம் உண்டு; இனி அவர்க்கு வேண்டியன தாம் யாவை? அறிவுடையானே செல்வருட் பெருஞ் செல்வன். அறிவே நிறைவு; அஃதே நினைத்த வெல்லாம் அளிக்கும் நிறை நிதி. இத்தகைய சீர் நிதியாளனுக்குக் குறைதான் யாண்டுளது. அவனே தன்னல விழைவில்லாப் பிறர் நல உழைப்பாளன்; தனக்கென ஒன்றும் வேண்டாத் தகைசால் திருவாளன்; பிறர்க்குப் பயன்பட வாழக்கூடிய செம்மையாளன் இவனே யென்க. ஆகையால் தொண்டர்களெல்லாம் பிற பண்புகளோடு இப்பண்பையும் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். இக்காலத்தில் மக்களறிவை அளந்து கூறுங் குறிகள் பல நிலவுகின்றன. B. A. என்றும், M. A. என்றும் இன்னும் பலப்பல

வாக மக்களது அறிவை அளந்து கூறுகின்றார்கள். ஆயின் உண்மை அறிவானது இவைபோன்ற அளவைகளில் அடங்கும் நீர்மையதன்று. எடுத்துக் காட்டாக, நம் காந்திப் பெருந்தகை யின் அறிவை நோக்குவோம். பெருமானின் பெருகொளி ஞானத்தை, உணர்வுத் திரளமுதத்தை, தெள்ளொளிப் பெருக்கை எவ்வளவை கொண்டு அளக்க முடியும்? கூறுங்கள். அவரை B.A. என்பதா; M.A. என்பதா; இளம்புலவன் என்பதா; முதிர்புலவன் என்பதா; Doctor என்பதா; பண்டிதர் என்பதா; அவர் இவை யொன்றிலும் அடங்குகின்றாரில்லை. இப்பட்டங் களையெல்லாம் வீறி நிற்கின்றது அவரது அறிவு. அவர்பட்டப் பாடங்களை எழுத்தெழுத்தாகப் படித்துத் தேர்வுகளிற்றேறிய வோர் புகழ்பெறும் பண்டிதனுமல்லர்; இயற்கை யன்னையின் மடிமீதிருந்து இறவாத இன்ப அன்புப் பெருஞானத்தைப் பருகிய செம்மல் நம் அடிகள் என்றுணர்க. பட்டப் பாடங்களில் பதக்கம் பெற்ற பண்டிதர்களெல்லாம் அறிவுடையார்களாவ தில்லை. பட்டக்கல்வி வேறு; அறிவுக்கல்வி வேறு. உண்மைக் கல்வியின் பயனாகிய தெளிவைத், திண்ணிய அறிவை விழைந் தார் அனைவரும் இயற்கையெனும் திருவளர் கழகம் புகுந்து, வாய்மையெனும் நல்லாசிரியரை நண்ணி அன்பெனும் தெய்வத் திருநூலை நவிலுதல் வேண்டும். இந்நூலை இம்முறையிற் கற் றார்க்கேயன்றிப் பிறர்க்குத் தெளிவெனும் தூய அறிவு கிடைக் காது. இப்பெரும் கழகம் புகுந்து நிறை பயனெய்திய நம் பண்டைப் புலவர்கள் அருளிய மறை நூல்களைப் பட்டங் கருதாது பயில்வோரிடத்தும் தூயஅறிவு அரும்புதல்கூடும். ஆயின் இவ்வரும்பானது உலகமெனும் கழகத்திற்றான் மலர் நிலை எய் தும். ஆகையால் தொண்டர்கள் நம் நாட்டுக் கலைமாச் செல் வர்கள் தேடிவைத்த பழம் பாடற் கருவூலம் புகுந்து ஆண்டுள்ள நூல்களையெல்லாம் நிரம்ப ஆய்தல் வேண்டும். இவ்வாராய்ச்சி யின் பயன் தொண்டெனும் தூய அறிவாகத் தொண்டருள்ளத் தில் அரும்பி மிளிரும். பின் பணி உலகில் இறைவனுடன் இரண் டறக் கலக்கும் மலர் நிலை யெய்தும். இஃதே மனிதப் பிறவியின் விழுமிய பேறு. இப்பெரும் பேற்றைத் தரவல்ல அறிவைத் தொண்டர்களெல்லாம் விரும்பிப் பெறல்வேண்டும்.

உண்மை அறிவைப் பெற்ற ஒருவனே உண்மை மகன். உண்மையறிவே மக்களுள்ளத்தில் ஆண்மையெனும் உயர் பெரும் பண்பையும் விளைக்கவல்லது. இக்காலத்தில் ஆண்மை யெனும் வீரப்பண்பு நம்நாட்டில் இல்லாதொழிந்ததற்குக் கார ணம் உண்மை யறிவு பரப்பப்படாது கரக்கப்பட்டிருந்ததே யென்க. நம் பழந்தமிழ் நாட்டில் உண்மை அறிவு நிரம்பப் பரந்

திருந்தது. அதன் பயனாக மக்கட் பண்புகளுள் உயர்ந்தன வாகிய வீரம், ஈகை, இரக்கம், பிறர் நலவிழைவு முதலிய சால்புகள் நிறைந்து எங்கும் உருண்டு கொண்டிருந்தன. இப்பொழுது அடிமைச் சோர்வில் நாடு உறங்கிக் கிடக்கின்றது. இம் மயக்கத்தினின்றும் தெளிந்து உய்தற்குரிய ஊக்கத்தையும் வீரத்தையும் அளிக்கவல்ல உயர் அறிவே நாட்டில் ஊட்டல்படல் வேண்டும். ஆயின் இக்காலக் கல்வி முறைகளோ நாட்டுக்கு மேன்மேலும் கேடு சூழும் தன்மையில் வகுக்கப்பட்டிருக்கின்றன. நம் நாட்டு வரலாற்றையும், நம் நாட்டு மொழி நூல்களையும், நம் நாட்டுச் சமயத்தையும் கற்கச் செய்யாது இளைஞர்களையெல்லாம் பிற நாட்டு வரலாறுகளையும் பிறமொழி இலக்கியங்களையும் விரும்பிக் கற்கும் முறைகளில் ஈர்த்துவிட்ட நம் நாட்டறிஞர் தம் புன்மை மிகவும் இரங்கத்தக்கது. தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ் நூல்களைப்பற்றியும், நினைக்கும்போதெல்லாம் அருவருப்பும் வெட்கமும், பிற நாடுகளைப்பற்றியும் பிற மொழி நூல்களைப் பற்றியும உன்னும்போதெல்லாம் உவகையும் விம்மிதமும் நம் நாட்டு இளைஞர்கள் உள்ளத்தில் முளைக்கின்றன. இந்நிலைக்கு என் மனம் உருகுகின்றது. தாயைக் கொலை செய்தற்குச் சேயைப் பண்படுத்தினாற்போன்று நம் நாட்டு இளைஞர்கட்கு நச்சுக்கல்வி யூட்டப்படுகின்றது. தாயைக் கொல்ல நினைத்த இவ் விளங்காளைகளெல்லாம் தங்களையே கொன்றுவிடுகின்றார்கள். தமிழ் நாடு எனக்குப் பெரியதோர் அச்சம் ஊட்டும் தற்கொலைக் காட்சியே அளிக்கின்றது. எங்கும் வீண் பூசலும் கொலைக் குரலுமாகவே நம் நாட்டில் இருக்கின்றன. இத்துணைப் போராட்டமும் கொலையும் பிற நாடுகளில் அறவே இல்லை. சமய உலகில் கொலை; இலக்கிய உலகில் கொலை; வியாபார உலகில் கொலை; எங்கும் கொலை. தெய்வத்தமிழகம் கொலைக்களமாக மாறிவிட்டது. தமிழ் மக்கள் மனம் கரிந்து கிடக்கின்றது. தமிழ் நாடு முழுவதும் இருளில் மூழ்கிக்கிடக்கின்றது. இக் கொலையிருள் நீங்கிக் கலையின்பப் பேரொளி பிறக்கும் நாள்தான் எந்நாளோ அறியேம்! ஆண்டவனே! சம்பந்தப் பெருந்தகையைக் கொலை செய்து விட்டார்கள்! மணிவாசகனார்மீது அம்புகள் பல தொடுத்து நிற்கின்றார்கள். சுந்தரரைப் பெரும் பொய்யனெனக் கொடுந்தீயிற் பொரிக்கின்றார்கள். சேக்கிழார் செல்வனைச் செந்தீயிற் சுடுகின்றார்கள்! என்ன கொடுமை! கொடுமை ‘சுயமரியாதை’ எனும் வெறி கொண்டார் ஒரு சிலர் செய்து வரும் கொலைக் காட்சியைக் காண என் கண்கள் மறுக்கின்றன. என்னுள்ளம் நடுங்கித் தளர்கின்றது. இக் கொலைஞர்களை எத்தனை காலம் எதிர்க்காது வாளா விடுவது? இவர்களைத் திருத்தும் நெறியும் உண்டோ அறியேம். ஆண்டவனே! இவர்

களை நல்வழி நிறுத்தும் பேற்றை விரைவில் நல்குதல் வேண்டும். இன்றேல் நம்நாடு மிக விரைவில் குழப்பப் பெருங்குழியில் விழுந் துணங்கும் என்பதற்குத் தடையேயில்லை. அத்தகைய வீழ்ச்சி யின் முற்குறிகள் பல அறிஞர் கண்களுக்குப் புலப்படுகின்றன. நாட்டில் நல்லறிவின்மையே இக்கலக்கங்களுக்கும் சீர்கேடுகளுக் கும் முழுமுதற் காரணம். ஆகையால் நாட்டிற்கு நல்லறிவு தெருட்டித் திருத்தங்கள் விளைக்க விரும்பும் இப்படைக்குரியார் அனைவரும் நல்லறிவுடைச் செல்வர்களாயிருத்தல் வேண்டும். நம் பழைய நூல்களை யெல்லாம் நடுநிலை பிறழாது ஆராய்ந்து உண்மைதேர வல்லவர்களாக நம் தொண்டர்கள் இருந்தால் ஒழிய அவர்களது ஆராய்ச்சிக் கருத்துக்களையும் கொள்கைகளை யும் இளம் மாணவர் உலகும் பிறவும் ஏற்றுக் கொள்ளமாட்டா வென்பதை நாம் நன்றாய் மனதிற் பதித்துக்கொள்ளல் வேண் டும். நம்நாட்டு நூல்களையும் அயல் நாட்டு நூல்களையும் நிரம்பக் கற்றுத் தெளிந்து காலத்திற்கேற்ற புதுக்கருத்துக்களையும் ஒழுக் கங்களையும் நாட்டில் இயக்கவல்ல பேரறிவாளர்க்கே படை யுரிமை அளிக்கப்படும் என்றுணர்க. பழையனவெல்லாம்கழிதல் வேண்டும், புதியனவெல்லாம் புகுதல்வேண்டும் என்பது அறி யாமை. பழையனவாயினென், புதியனவாயினென், சால்புடை யனவே நாட்டில் நிலவுதல்வேண்டும். நாட்டை வளம்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுள் இச் சால்புடை உணர்வைப் பரப்புதலே முதன்மையுடையது. சால்புணரும் பெற்றி அறி வுடையார்க்கே உரியது. நாட்டிற்கு நன்மையளிக்கவல்ல சால்பு களையெல்லாம் தேர்ந்தெடுத்துக் காட்டுதற்கும் நல்லறிவு மிக மிக இன்றியமையாதது. எல்லாவாற்றானும் தொண்டர்தம் அறிவு மிக உயர்வுடையதாக இருத்தல் வேண்டும்.

இதுவரையும், தமிழ்நாடு வீழ் நிலை யெய்தியிருப்பதாகவும், வடநாடு பிற நாடுகளெல்லாம் உயர் நிலை யடைந்திருப்பதாக வும், நம் நாடும் அயல் நாடுகளைப்போல் உயர்நிலை யடைதல் வேண்டுமென்றும், இவ்வுயர்வைக் கூட்டவல்லதோர் தொண்டர் கூட்டம் 'தொண்டர் படை' யெனும் வீரப் பெயருடன் அமைக் கப் பெறல் வேண்டுமென்றும், இப்படைக்குரியார் தம் தகவு கள் இவையா மென்றும் என் சிற்றறிவுக் கெட்டியவாறு குறிக் கப்பட்டன. இனி இப்படையைச் சீருடன் கொண்டியக்கவல்ல தலைவர் யார் என்பதைப்பற்றியும், போர்முறைகளைப் பற்றியும், போர் நிகழ்த்தப்படவேண்டிய துறைகளைப் பற்றியும் அடுத்து வரும் இதழ்களிற் சுட்டுவாம். (தொடரும்)

சைவசமயத்தின் நெருக்கடியான நிலை

[மறைமலையடிகள்]

சைவசமயமானது இருவேறுவகைப்பட்ட மக்கட்கூட்டத்தின் நடுவே அகப்பட்டுக் கொண்டு, ஒரு கூட்டத்தினர் ஒரு புறத்தும் மற்றொரு கூட்டத்தினர் மற்றொரு புறத்துமாக நெருக்க, அந்நெருக்கடியில் நின்றும் பிழைத்தோட வழி காணாது நசுங்கி உயிர்துறக்கும் நிலையில் நின்றுதத்தளிக்கின்றது. அவ்விருவேறு கூட்டத்தினரில் ஒரு பகுதியார் தம்மைச் சைவர் எனவுந் தாமே சைவசமயத்தின் உண்மையை முற்றும் உணர்ந்து அதனைப் பாதுகாப்பவரெனவுங் கூறிக்கொள்ளுவோர் ஆவர்; மற்றவரோ, இச்சைவக்குழுவினர் கூறுவனவே சைவசமயக்கோட்பாடுகளாகுமெனப் பிறழ உணர்ந்து, அக் கோட்பாடுகள் தமிழர் முன்னேற்றத்திற்கு இடந்தராமல் அதற்குக் கேடுபயப்பனவாயிருத்தலால், அவைதம்மை வேரோடுகளையக்கடவேமென மடிகட்டி நிற்பவர் ஆவர். இவ்விருவேறு வகுப்பினருஞ் சைவசமயத்தின் உண்மைகளை ஆராய்ந்து அறிந்தவர் அல்லர்; அவ்வவருந் தத்தமக்கு வேண்டுவன சிலவற்றைச் சைவநூல்களிலிருந்து பொறுக்கியெடுத்துக்கொண்டு, அவைதாமே சைவம் என்பாரும், அவைதாமே தமிழர் முன்னேற்றத்திற்குத் தடையாவன என்பாருமாய்த் தம்முள் இகலிச் சைவ உண்மைகள் சிறிதும் அறியாப் பொதுமக்களைத் திகைப்புறச் செய்கின்றனர். சைவத்தின் உண்மைகளோ ஒரு பேழையிற் பொதிந்துவைத்தமணிக்கோவைகள்போல் என்றும் மங்காது மிளிரும் மாட்சியுடையன; மற்று, அம்மணிப்பேழை மேற் சேர்ந்து அதனை மூடியிருக்குங் குப்பைக்குவியல்களோ மிகவும் அருவருக்கத்தக்க தாழ்ச்சியுடையன. அடியிற்புதைந்த அம்மணிக்கோவைகளை விட்டு, அவற்றின்மேற் குவிந்த குப்பைகளையே பெரிது பாராட்டிப் பாதுகாப்பார்போற், சைவவுண்மைகளைக் கைவிட்டு அவற்றை மறைத்து அவற்றின் மேற் குவிந்து கிடக்குஞ் சைவமல்லாக் கோட்பாடுகளையே சைவமென விடாப்பிடியாய்க் கைக்கொண்டு நிற்கும் போலிச்சைவர்களே, சைவசமயத்தை ஆராய்ந்து பாராத பிறர் அதனை இகழ்ந்து ஒழிப்பதற்கு இடஞ்செய்து வருகின்றனர். ஆகவே, சைவசமயத்திற்குத் தீங்கு இழைப்போரிற் சைவப்பெயர் புனைந்துநிற்கும் போலிச்சைவர்களே முதற்பகைவராவர். மற்றை வகுப்பினரோ சைவசமய உண்மைகளை ஆராயமாட்டாராய்ப் போலிச்சைவர் கோட்பாடுகளையே சைவமென நம்பி இகழ்பவராதலால், அவரது பகைமை அத்துணை மிகுதியாக

அஞ்சற்பால தன்று; ஏனென்றால், இவர்கள் சீர்திருத்த நெறியிற் செல்பவர்களாயிருத்தலால், உண்மைச்சைவக்கோட்பாடுகளை உணருங்காலத்து இவர்கள் அவற்றிற்குமாறாய் நின்ற நிலையை விட்டு ஒருமை யுறுதலுங்கூடும். மற்றுப், போலிச்சைவர்களோ சைவமல்லாதவற்றையே சைவமாக இறுகப்பற்றி எவ்வகைச் சீர்திருத்தத்திற்கும் உடம்படாதவராகலின், அவர் உண்மைச் சைவத்தோடு ஒட்டி வருவரென்பது கனவினுங் கருதற்பால தன்று. இங்ஙனஞ் சைவசமயக் கோட்பாடுகள் அல்லாதவற்றையே சைவசமயமெனக்கொண்டு ஒழுகும் போலிச்சைவர்களின் ஆரவாரம் மிகுந்திருக்குங்காறும், உண்மைச்சைவந் தலையெடாது; அதனாற் புறச்சமயத்தார் சைவசமயக்கோட்பாடுகள் இவையேயெனப் பிழைபட நினைந்து அவற்றையும் அவற்றோடு உடன்வைத்து உண்மைச்சைவத்தையும் இகழ்ந்துரைக்கும் இகழ்ச்சியுரைகளுங் கிளையாதிரா. ஆகவே, உண்மைச்சைவக்கோட்பாடு இவையென்பதும், அவை யல்லாத போலிச்சைவக்கோட்பாடுகள் இவையென்பதும் இங்கே சிறிது பகுத்துக்காட்டுவாம்.

சைவசமயம் என்பது தென்றமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கே உரித்தான கடவுட்கொள்கை யாகும். காணவுங் கருதவும்படாத அருவநிலையிலுள்ள முழுமுதற்கடவுள் உயர்ந்த அன்பும் அறிவும் உடைய பெரியார் சிலர்க்கு அருள் புரிதல் வேண்டி அவர்தங் காட்சிக்குங் கருத்துக்கும் எளியவனாய்ச் சிவந்த ஒளி வடிவிற் றோன்றி அவரை ஆண்டுகொண்ட வகைமையிலிருந்து, அத்துணை யணுக்கமாய் வந்த அச்சிவந்த திருவுருவத்தையே தமிழ்ச்சான்றோர் அவற்குச் சிறந்த இலக்கணமாய்வைத்துச் 'சிவன்' என்னும் பெயரால் அவனை வணங்கி வருகின்றனர். தீயும் நீரும் ஒருங்கு இயைந்தாலன்றி இவ்வுலகமும் இவ்வுலகத்து நிகழ்ச்சிகளும் நிலைபெறாவாகலான், தீயின் செந்நிறத்தை ஒப்பதான ஓர் ஆண்வடிவம் நீரின் நீல நிறத்தை ஒப்பதான ஒரு பெண்வடிவம் ஒருங்கு இயைந்த ஓர் அருமைத் திருவுருவமே கடவுளுக்கு உண்மைவடிவாதல் வேண்டுமென்பது பண்டைக்காலந்தொட்டு வந்த தமிழ்ச்சான்றோர் கொள்கையாகும். சேயொளிவடிவிற் 'சேயோன்', 'சிவன்' எனவுங், கருநீலவடிவில் 'மாயோள்', 'மாயோன்' எனவும் முழுமுதற் கடவுள் வழங்கப்பட்டு வரலாயிற்று. பிறப்பு இறப்புக்களுக்கு வித்தான இருவினையும், அவ்இருவினைக்கு வித்தான அறியாமையும் இறைவன் உடையன் அல்லாமையால், அவன் என்றும் விளங்கிய அறிவினனேயே இருப்பனெனக் கடவுளுண்மையியல்பையுந் தமிழ்ச்சான்றோர் நன்கறிந்திருந்தனர்.

இங்ஙனம் அவர்கள் கடவுள் நிலையை நன்குணர்ந்தாற் போலவே, கடவுள் அல்லாத சிற்றுயிர்களின் இயல்பையுந் தெளிய அறிந்து நின்றனர்; சிற்றுயிர்கள் அறிவுடையவாயினும் அவற்றின் அறிவு மாசுபொதிந்திருத்தலால் உடம்புகளின் துணையாலன்றி அது விளங்கப்பெறாமையும், அவ்வாறு அது விளங்கப் பெறுமிடத்தும் புல் மரம் முதலிய உடம்புகளில் ஓரறிவும், நத்தை கிளிஞ்சில் முதலிய உடம்புகளில் ஈரறிவும், சிதல் எறும்பு முதலிய உடம்புகளில் மூவறிவும், நண்டு தும்பி முதலிய உடம்புகளில் நாலறிவும், விலங்கு பறவை முதலிய உடம்புகளில் ஐயறிவும், மக்கள் உடம்புகளில் ஆறறிவும் படிப்படியே சிறிது சிறிதா விளங்கப் பெறுதலும், ஒரு பிறவியிற் கொல்லாமை ஊனுண்ணாமை பொய்யாமை முதலான நல்வினை செய்து தன்னறிவையும் அன்பையும் வளரச்செய்த ஓருயிர் மறுபிறவியில் அதனினுஞ்சிறந்த ஒரு பிறவியைப்பெற்று அறிவும் ஆற்றலும் மிக்குவிளங்கப் பெறுதலும், அவ்வாறு எடுத்த பிறவியில் நல்வினையைச் செய்யாத உயிர் அடுத்த பிறவியிற் பின்னும் இழிந்த உடம்பைப் பெறுதலும், பிறவிகடோறும் அறிவையும் அன்பையும் வளரச்செய்த உயிர் இறுதியிற் கடவுளின் அருளை முற்றப் பெற்றுப் பிறவியும் மாசுந் தீர்ந்து கடவுளின் அருளொளியிற் கலந்து பேரின்பத்தி லிருத்தலும் ஆகிய அச்சிற்றுயிர் நிகழ்ச்சிகளை யெல்லாம் ஐயந் திரிபற ஆராய்ந்து கண்டனர்.

இனி, ஆறறிவுடைய மக்கட்பிறவியெடுத்த உயிர்கள் தாம் பெற்ற இவ்அரிய பிறவியிலேயே விரைந்து தூயராய் இறைவன் திருவருளின்பத்தைப் பெறுதற்கு இன்றியமையாது செயற்பாலன: தம் மனமொழி மெய்கள் ஒன்றிேனான்று முரணாமல் தமக்கும் பிறர்க்கும் பிறவுயிர்க்கும் நலம் பயப்பனவற்றையே ஒருமுகமாய் நாடி நிற்குமாறு பழகுதலும், துன்பத்திற்கு இடனின்றி இன்பத்தையே ஓவாது தருங் கல்வி கேள்விகளினுந் தவமுயற்சியினுந் தமது அறிவை நிலைப்பித்தலும் இறைவன்றன் பேரருட்டிறத்தை நினைந்து நினைந்துருகுதலும் ஆமென்பதூஉந் தமிழ்ப் பேரறிஞர் கண்டறிந்ததாகும்.

இக்கோட்பாடுகள் முற்றும், இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறாண்டுகட்கு முன்னெழுந்த பண்டைத் தமிழ்ப் பெரும் பனுவலாகிய தொல்காப்பியத்திலிருந்து, அதன் வழிவந்த திருக்குறள், திருவாசகம், திருமந்திரம், தேவாரம், சிவஞான போதம் முதலான தனிச் செந்தமிழ்நூல்களிலெல்லாம் முன்னொடு பின் சிறிதும் மாறின்றிக் காணப்படும்.

(தொடரும்)

திருவள்ளுவர் - ஓர் மர நூல் பேராசிரியர்

[மதுரை அ. மா. முத்தைய நாட்டாரவர்கள்]

(௩௩௮-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்து

திருவள்ளுவர், நீத்தார் பெருமையைக்கூறிப்பின், நீத்தற் கேது கூறுமுகத்தான், ஐந்தைக் காப்பதினிலக்கணமும், ஐந்தை யவித்தலினிலக்கணமும்; ஐந்தின் வகை தெரிதலினிலக்கணமும் கூறுகின்றார். இங்ஙனம் கூறுமுறையில், ஐந்தைக்காப்பானொரு வனுக்கு ஒரு வித்தை உவமானமாகக் கூறுகின்றார்.

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்;
வரனென்னும் வைப்புக்கோர் வித்து"

இக் குறட்குப் பரிமேலழகியார் "திண்மை யென்னும் தோட்டியால், பொறிகளாகிய யானையைந்தனையும் தத்தம் புலன்கண் மேற் செல்லாமற் காப்பான், எல்லா நிலத்திற்கும் மிக்கதென்று சொல்லப்படும், வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம்" என்றுபொருள் கூறுகின்றார். ஆனால் மணக்குடவர் "அறிவாகிய தோட்டியானே பொறியாகிய யானையைந்தினையும் புலன்களிற் செல்லாமல் மீட்பவன் மேலாகிய விடத்தேயாதற்கு இவ்விடத்தே யிருப்பதொரு வித்து" என்று பொருள் கூறுகின்றார். இருவர் பொருளும் காட்டும் சிறு வேறுபாடுகளைக் குறிப்பது இக் கட்டுரையின் நோக்கமன்று. ஆனால் இக்குறளில் ஆசிரியர், ஓரறிவுயிரெனக் கீழ்மையாய்க் கொள்ளப்படும் ஒரு வித்தை ஆறறிவுடைய ஒருவனுடன் உவமானமாகக் காட்டுதல், மிகவும் வியப்புடைத்தாகையால் அஃதில் ஆசிரியர் காட்டிய சில நுணுகிய பொருள்களை யாராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். அந்நோக்கங்கொண்டு, மேல்காட்டிய இருவருரைகளையும் ஒரு சிறிதாராய்ந்து மேற்செல்வாம். மேற்காட்டிய உரைகளில், பொறிகள் தத்தம் புலன்கண்மேல், செல்லாமல், காப்பவன் அன்றி மீட்பவனெனப்பொருள் காணப்படுகின்றன. ஆனால் ஆசிரியர் ஐந்துமெனப் பொதுப்படக் கூறினரேயன்றி ஐம்பொறிகளென்று காட்டவில்லை. அன்றியும் ஒருவன்பால் காணப்படுவதுபோல், எடுத்துக் காட்டிய வித்தினிடம் ஐம்பொறிகள் காணப்படவில்லை. ஆதலின் ஐந்துமென்றது ஐம்பொறிகளைக் குறிப்பதன்றென்பதும், இரண்டிற்கும் பொதுவாய்க் காணப்படும்,ஐம்புலன்களையே குறிக்குமென்பதும் நன்கு விளங்குகின்றது. வித்தி

னுள்ள மூலம் ஐம்புல வுணர்ச்சியுடையதாக விருந்தும், வித்தினொடுங்கி நிற்றலால் ஐம்புல வுணர்ச்சி காக்கப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே ஒருவனும், ஐந்து புலன்கள்வழி புறஞ்சென்று அலையாமல், உரனென்னும் தோட்டியால் காத்தல்வேண்டுமென்பதைக் குறிக்கின்றது.

பின்னும் பொறிகளோ, புறமறிய, உடல்கள்மாட்டுச் சிறப்புற்றிருக்கும் உறுப்புக்களாகும். இவ்வுறுப்புக்களே, புறமறியா, தன்னையுமறியா, தன்வழி புறமறியுமொன்றையு மறியா. காட்டாக, ஒரு அறைக்குளுள்ள ஒருவன் அங்கிருந்தே, கண்ணாடியில் தாக்கி மாறுபட்டு உள்சென்ற கதிரின்வழி, கதிரவனைக் காணலாம். அக்கால் கண்ணாடி, கதிரவனையும, தன்வழி கதிரவனைப் பார்ப்போனையு மறியாது. கண்ணாடியன்றி, அறையிலுள்ளவனும், கதிரவனைக் காணான். அஃதேபோல் பொறிகள் புறமறியா. நிற்க, பல்லுயிர்த் தொகுதியில், எல்லாவுயிரும், ஐம்பொறிகளோடு கூடியவை யல்ல. சில வுயிர் உடலையே பொறிகளாகக்கொண்டன; சில, ஒன்று இரண்டு; மூன்று நான்கு ஐந்து உறுப்புக்களைச் சிறப்புறப்பெற்றன. ஆயினுமெல்லா வுயிரும புறமறியும். புறம் ஐம்பூதத்தாலாக்கப்பட்டு, ஐம்புல வுணர்ச்சி வயப்படும். ஆதலின் சில வுயிர் ஒன்றின்வழி ஐந்தையுமறியும்; இரண்டின் வழி ஐந்தையுமறியும்; மூன்றின் வழி ஐந்தையுமறியும்; நான்கின்வழி ஐந்தையுமறியும்; ஐந்தின்வழி ஐந்தையுமறியும்; உடல் வழியே ஐந்தையுமறியும். காட்டாக, வித்து முளைத்தபின், சிறப்புற்ற பொறிகளன்றிப் புறமறியுமென்றோம்; 'அமீயோபா' என்னும் சூக்குமமே உடலாகவுடையதும், சிறிதைப் பெரிதாய்க்காட்டும் கண்ணாடியால் காணக்கூடியதுமான, ஒரு சிறு விலங்கு,தன் உடலாலே ஐந்தையுமறியும். இக்குறிப்புக்களால் சிறப்புற்ற பொறிகள்கொண்டே புறமறிய வேண்டுமென்பது காணப்படவில்லை. ஆனல் புறமறியுமாற்றல், சிறப்புற்ற உடற்கேற்ப வேறுபட்டிருக்கலாம். ஆகையால், பொறிகளின்வழி, புறமறிவது, ஒன்று உண்டென விளங்குகின்றது.

நிற்க மக்கள்பாலும், பொறிகள், சொப்பனதானத்தில், புறமறியா; அன்றி ஒரு பொறி ஒரு விடயத்தையன்றி மற்றொரு விடயத்தை யறியாது. இஃதுணர்ந்தும், பொறிகளே புறமறியுமென்னில், ஒருயிர், பொதுவில் நடாத்தும் ஒன்றற்று, பல்வகைப்பட்ட வாட்சிக்கிடனாய் நிலைதடுமாறும். இங்ஙனம் பலவாறு ஆராயுங்கால் பொறிகளே தாங்கள் புறமறியாவென்றும், இயங்காவென்றும், காணக்கிடப்பதுடன், இவைகளுக்குப் புறம்பாய், உடன் மன்னி, ஒன்று உண்டெனத் தோன்றும்.

அன்றிப் புலன்கள் புறமறியுமென்னில் அறியா, புலன்கள் சத்தபரிச ரூபரச கந்தங்களாகிய உணர்ச்சியே. ஒரு புலன் மற்றொரு புலனையறியாது. இவ்வைந்து புலன்களையும் ஒரே காலத்தில், ஏற்று உணர்ந்து அதற்கேற்றவாறு நடாத்துமாற்றலுடைய தொன்று புலன்களின் புறம்பாயிருத்தல் வேண்டும். காட்டாக, தட்டாத்தி பூச்சியின் புழு, பக்குவமடைந்த காலையில், தன்புற வுறுப்புகளனைத்தையும் துறந்து, சூக்கும வடிவாய் ஒடுங்கி யோகத்தினின்று (pupa stage) புது உருவமாகிய தட்டாத்திபூச்சி வடிவம் கொள்ளும் நிலையிலிருக்கும்பொழுது, அது பல வுணர்ச்சியுடைய உயிர் வகையாயிருந்தும், ஒருணர்வுமற்றிருக்கிறது. பின் பக்குவம் வந்தகாலை வெடித்துக்கிளம்பி, புறமுணர்ந்து உலகியலின்பமனுபவிக்கின்றது. புலன்களே யுணர்ந்தறியுமென்னில் இவ்வுயிர்கள்மாட்டு அவைகள் ஒடுங்கிய நிலையில் விளங்குறாதென்னை? நிற்க சூக்குமமே யறியுமென்னில் அதுவும் அறியாது. என்னையெனில், சூக்குமத்தில் கண்டன ஸ்தூலத்தில் மாறுபாடின்றிக் காணப்படல் வேண்டும். சூக்குமத்தின் விரிவே ஸ்தூலமாதலின் அங்ஙனம் கண்டிலம். காட்டாக, திதியை (proto plasm) வெளியிலெடுத்து அதை இறக்காது வளர்க்க ரசாயன முறைப்படி வேண்டியன செய்தும்அஃதுஇறக்கின்றது. அந்நிலையில் சூக்குமமே இயங்கவும்,புறமறியவும் கூடவில்லை.பின்னும் ரசாயன முறைப்படி பூதாதிகளால், சூக்குமம் செய்தகாலையிலும் அஃது எவ்விதத்திலும் ஒத்திருப்பினும், உயிரொன்றே காணவில்லை. சூக்குமமுணருமெனில், உயிர் நீங்கிய மற்றெல்லாம் சரியாயிருகக அதுவுணர வேண்டும். நிற்க,சூக்குமம் பஞ்சபூதத்தாலாயது பஞ்சபூதத்தாலாயது அசத்தேயாகும். அசத்தே அசத்தையுணருமெனில் ஒவ்வாது. இதுபோன்ற மற்றவாதாரங்கள் கொண்டுமாராயின், புலன்களும் சூக்கமமும், தாங்களே யியங்கவும் அறியவும் இயலாதென்பது வெளிப்படை. ஆனால் இவைகளின் வழியறிவது உயிரேயாகும். உயிர் இவை கணக்கிடையில் அணுவினுக்கணுவாயீடுபட்டு நிகழ்ந்து வருதலினாலும் தொடர்பின் காரணமாய் முதிர்வுற்ற வினை வலிமிக்கு இவைகளில் மிக்கு ஈடுபட்டு உயிர் தன்னொளிகுன்றி, இவைகள் மயம் காணுறும்படி செய்தற்குத் துணையாய் நிற்றலினாலும், உணர்ச்சியனைத்தும் புலன்பொறிகளறிவதாய்க் காணப்படுகின்றது. இதுகாறும் கூறியவாற்றால், பொறிகளும் புலன்களும் தாங்களே யியங்கவும் அறியவும் ஆற்றலற்றனவென்பது வெளிப்படை. அஃதவ்வாறாக மேற்கூறிய உரைகள இரண்டும் பொறிகளும் புலன்களும் தாங்களே யியங்கவும் அறியவும் கூடுமென உருவகம் செய்த தெங்ஙனம்? ஒருகால் உயிர் முன்னிலையில் கருவிகளே பொறிகள் வழி புறமறியுமென்னும் மதம் தழுவிக் கூறியுள்ளார்கள் என்னில், இம்

மதம் திருவள்ளுவர் கருத்துக்கு மாறுபட்டதுடன், 'நம் சைவ மதத்திற்கும் நூன்ஞாற்கும் மாறுபட்டதெனவுணரவும் இஃதை ஆசிரியர் மெய்கண்டார் தக்கபொருள் கொண்டு

"ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா—மைம்பொறியிற்
காணுதேற் காணது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி"

இம்மதக் கொள்கையைக் கண்டித்து, சென்றிருப்பதை யாராய்ந் துணர்க.

நிற்க ஒடுங்கிய நிலையிலுள்ள ஒரு வித்தை ஒடுங்கிய நிலை பெறக்கூடிய ஒருவனுக்குக் காட்டுதலால் அவ்வுயிரும் (ஒருவனும்) கூடியமட்டில் இவ்வித்து போன்று ஒடுங்கிய நிலையுற வேண்டும். இவ்வித்து புறமறியு மாற்றலிருந்தும் புறமறியா நிலையுற்றிருக்கின்றது. அங்ஙனமே ஒருவனும் புறமறியாத நிலையை மேற்காட்டிய பயிற்சியால் பெறவேண்டும். ஆதலின் உயிர் தன் புலன்கள் வழியே புறமறியுமாதலால் அவ்வுயிர் இவைகள்வழிச் சென்று புறந்திரிந்து புறவுணர்ச்சியிலீடுபடாமல் தன்னைக் காத்துக் கொள்ளுதலையே இங்குக் குறிப்பதாகும். மாயையின் காரணமாய், தன் ஐம்புல வுணர்ச்சியில் என்று மீடுபடுமியல்புடைய வுயிர் தன்னை, தன்குணத்தால் தன் ஐம்புலவுணர்ச்சியின்வழி புறஞ்செல்லாது காத்துக்கொள்ளுமேல் அது மிகவும் மேன்மையுடையதாகும். இப்பொருள் கொண்டே ஒளவையாரும் தன் அகவலின் 'ஐம்புலக்கதவை யடைப்பதும் காட்டி' என்று கூறியுள்ளார்கள். நம்மணிவாசகரும்,

'மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புல னைந்தின் வழியடைத் தமுதே'

என்று கூறுவர். 'அங்ஙனம் காத்துக்கொள்ளினும், ஒருகால் அமையம் நேர்ந்துழி முன்வினைகொண்டு உயிர் தன்னிலைமாறித் தன் காப்புமீறிப் புறமறியச் செல்லவும் கூடுமென்றே, பின் அந்தக் குணமே உயிர்மாட்டு முழுதும் சுட்டறுக்க வேண்டி ஐந்தையும் அவிக்குமுறையைக் கூறினார். அவித்தல் என்றமையான் உயிரிடமுள்ள ஐம்புல வுணர்ச்சியைமட்டும் அவித்தலைக் குறிக்குமேயன்றி, உயிர் தன்னையே அவித்தலென்று குறிக்காது. மேல் வித்து என்று கூறினமையால் அதற்கிணங்க அவித்தலென்று கூறினர் போலும். ஒன்றையவிக்குங்கால் உள்ளுள்ள பல

பொருளில் சிலவற்றைக் கெடுக்கவும்; சிலவற்றை மாறுபடச் செய்யவும் முதலிய பல மாறுபாடுகள் நிகழும். இஃதை உலகில் பல வினைபொருள்களை யவிக்குங்கால் காணலாம். இங்ஙனம் திருவள்ளுவர் பிற்காட்டிய குறிப்புக்கொண்டுமாராயின் மேற் காட்டிய கருத்தே விளங்குகின்றது. இக் கருத்துக் கொண்டே திருவள்ளுவரும் ஐந்துமெனப் பொதுப்படமட்டும் கூறாது "ஓரைந்து"மெனச் சிறப்படைமொழியுடன் கூறியுள்ளார்.

உயிரின் ஒடுக்கமறியு மியல்புகாட்டல்

இவ்வுலகில் பல்லுயிரனைத்தும், ஒருகால் ஒடுங்கியும் ஒரு கால் தோன்றியும் காணப்படுகின்றன. அங்ஙனம் ஒடுங்கித் தோன்றுங்காலம், அவ்வவ்வுயிர்வகைக் கேற்றவாறு நீண்டோ குறுகியோ, நிற்கும். சித்தியாரில் "பயில்வித்தெல்லாம், காரிட மதனிற் காட்டுமங் குரங்கழியும் வேனிற், சீருடைத்துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்" எனக் காட்டிய வாறு, சிலவகை வித்து ஒருகாலத்தில் தோன்றியும், ஒரு காலத்தில் ஒருங்கே திரும்பியும் வித்தினொடுங்கி நிற்கும். காட்டாக, நெல், கம்பு, தினை முதலிய புல்லினங்கள் இங்ஙனம் காணுறும். பின்னும் கீழ்நோக்கின், 'பாக்டேரியா' முதலியன, சில மணிநேரங் களிலேயே ஒடுங்கியும் தோன்றியும் காணுறும். சில வுயிர் சின்னுளில் தோன்றி யொடுங்கும். காலமறிவற்ற சடமாகலான், அது நீங்க, உயிர் மாட்டு ஒடுங்கித்தோன்று மியலிருத்தல் நன்கு விளங்குகின்றது. உயிர்மாட்டுக்காணுறு மிப்பொது விலக்கணத்தைக் கண்ணுற்றித்து, நம் திருவள்ளுவர், பல்லுயிர் தொகுப்பில், ஒரு பெரும் வகுப்பாம். மரவகுப்பில் ஒடுங்கிய நிலையுற்ற ஒருவித்தை எடுத்துக்காட்டி, மற்றொரு விலங்கு வகுப்பில் சிறப்புற்ற மக்கள் ஐந்தையும் காத்து ஒடுக்கமறிய வேது கூறுகின்றார்.

உரமென்னு முயிர்குணங் காட்டல்

இங்ஙன மொடுங்கிய நிலையுற்ற ஒவ்வொருயிரும், தான், புறத்தில்இடையறாது மாறுபட்டுவரும் நிகழ்ச்சிக்கு,ஈடுபடுத்தப் படாமல் காத்துக்கொள்ள, பல்வேறு முறைகளை கையாளுவ தாய்க் காணப்படுகின்றது. அவைகளனைத்தையு மிங்காராய்வது மிகையாகும் அவைகளனைத்தையும் வகுப்பின், இரண்டு பெரும் முறைகளி லடங்கும். தாய் உயிரிடமிருந்து நேரே பெற்ற சில சிறப்புற்ற உறுப்புகளால், சில வுயிர், தான் ஒடுங்கிய நிலையில் தன்னைக் காத்துக்கொள்ளுகின்றது. காட்டாக, ஒரு வித்தின் அக, புறத்தோல்களால், மூலம், புறநிகழ்ச்சிக்கு ஈடு

படுத்தப்படாமல் காக்கப்படுகின்றது. இவ் விரண்டு உறுப்புகளும், தாய்மரத்தினின்று நேரே பெறப்பட்டன. சிலவுயிர், தான் ஒடுக்க நிலையுறுங்கால், தன்னகத்தில், மாறுபட்ட நிகழ்ச்சியேற்படுத்தி அதின் காரணமாய், தானே தன்னைக் காத்துக் கொள்ளப் புறவுறுப்புகள் ஏற்படுத்திக்கொள்ளும். காட்டாக, மேலேகாட்டிய தட்டாத்திப் பூச்சியின் புழு தன் புறவுறுப்புகளாகிய, கால்கள், கழுத்து, தலை, கண், வாய் முதலியவைகளைத் துறந்து, தன் அகநிகழ்ச்சியின் மாறுபாட்டால், தான் ஒடுங்கிய காலை தன்னைக் காத்துக்கொள்ள, சில புது வுறுப்புகள உண்டு செய்து கொள்ளுகின்றது. நாம் அணிந்து கொள்ளும் பட்டும் இங்ஙனம் பட்டுப்பூச்சியால் செய்த ஒன்றே, இவ்விரண்டு முறைகளையும் கீழ்தர உயிர்வகுப்பில் கண்டபடி ஆராய்ந்தன்னி, பல்லுயிர் தொகுப்பில், படிப் படியாய் மேன்மையுற்ற உயிரை ஆராய்ந்து சென்றால், எவ் வுயிரிடம் அந்தக்கரணங்கள் (மனம் முதலியன) தோன்றுகின்றனவோ அவ்வுயிரிடம, இவ்வுரமென்னும் உயிர்குணமும் தோன்ற வாரம்பிக்கின்றது. அங்கு காணப்படும் இக்குணம, உயிர் சிறப்புற்று மேன்மையுற்றோங்க, வளர்ந்து, மிகச் சிறப்புற்றமக்கள்பாற் சிறப்புற்று விளங்குகின்றது. மக்கள் ஒடுக்கம் பெறத் துணைக்கருவியாயிருக்கும இந்த உயிர்குணத்தையும், வித்தி னொடுக்கத்திற் கேதுவாகும் அகப்புறத் தோல்களையும் சீர்தூக்கியாராயின் பல்வேறு வேற்றுமைகள் காணக்கூடும். வித்தினின்று மூலம், இத்தோல்களைப் பொடித்து முளைத்தக்கால், பின் தாரகம், ஒடுக்கம் பெறவேண்டின் அத்தோல்கள் எவ்விதத்திலும் துணை விரியுமாற்றலற்றன. ஆகவே, முளைத்து வளரும் சிறுபோழ்து, புறத்தில் மாறுபட்டு நிகழும் வேற்றுமைக்கிணங்கியே தன் அகநிகழ்ச்சியையும் மாறுபடுத்தி நிகழ்த்தும். காட்டாக, மரங்கள் மாலையில் கதிரவன் மறைந்தவுடன் தங்கள் இலைகளை மூடிகொண்டு உறக்கத்திற்குச் செல்கின்றன. ஒருகால் கதிரவன் உண்டானகாலையில், ஏற்பட்ட சூடும் ஒளியும் நடுவிராத்திரியில் காணப்படின், இவைகள் தாங்கள் தாழ்ந்த வியக்கநிலையிலிருந்து மறுபடியும் மிகவும் சுறுசுறுப்புட னியங்கவாரம்பிக்கின்றது. ஆதலால் மரங்கள் புறநிகழ்ச்சியிலேயே தாங்கள் என்று மீடுபட்டு அந்நிகழ்சசிக்கேற்றவாறு தங்கள் நிகழ்ச்சியையும் நடத்துமென்பதும், புறநிகழ்ச்சிக்கு மாறுபட்டுத் தங்கள் நிகழ்ச்சியை நடத்து மாற்றலற்றன வென்பதும் நன்கு புலப்படுகின்றது. ஆனால் உரமென்னும் உயிர்குணம்பெற்ற உயிரோ, என்றும் தன்னிகழ்ச்சியைப் புற நிகழ்ச்சிக்கு உடன்பட்டோ அன்றி உடன்படாமலோ நடத்தும் ஆற்றலுடையது. காட்டாக, மக்கள், இரவு 3மணிவரையிலும் விழித்து நாடகம் பார்த்து விட்டு மறுநாட் காலை 10 மணி

வரையில் நித்திரைசெய்வது மக்கள்பால் ஏற்பட்ட உரனென்னு முயிர்குணத்தாலன்றோ? இக்குணமே, மக்களைப் புறநிகழ்ச்சியி லீடுபடாமல் காப்பதுமாகும். விசுவாமித்திரனை விளங்குறச் செய்ததும், பட்டினத்தடிகளைப் பதிபெறச் செய்தது மிக்குண மேயாகும். நிற்க நம் திருவள்ளுவர், புறநிகழ்ச்சியி லீடுபடாமல், உயிர்தன்னைக் காத்துக்கொள்ளும் முறைகள், பல்லுயிர்த் தொகுதியில் பல் வேறுபட்டுக் காணப்பட்டவைகளைத் தொகுத்தும், இரு பெரும் உயிர்வகுப்பில் காணப்பட்ட முறைகளை யெடுத்துக்காட்டியும், அம்முறைகள், மேற்காட்டிய வாராய்ச்சி யின்படி ஒடுங்கிய நிலையில் (வித்தில்) ஒத்திருப்பினும், தோன்றி வளரும் நிலையில் ஒத்திராமையை நோக்கி முதற்கண் காட்டிய குறளைக் கண்ணழித்து அதற்குப் புறனடை கூறுமுகத்தான்.

"உரமொ ருவற்குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு"

என்று காட்டியுள்ளார். இஃதொன்றே திருவள்ளுவரின் ஆழ்ந்த நுண்ணூ லாராய்ச்சியின் பெற்றியைத் தெற்றென விளக்கும்.

(தொடரும்)

கலித்தொகை

[இலங்கை, வழக்கறிஞர் வே. நாகலிங்கம்]

திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேள் மாக்கதையோ கொள்ளேம் நனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்.

அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியில் எட்டுத் தொகை யென்று அறிஞரால் நன்குமதித்துப் போற்றப்படும் தொகை நூலில் தலைசிறந்து விளங்குவது கலித்தொகை யென்னும் சீரிய நூலாகும். இஃது எட்டுத் தொகையுள் ஆறுவதென்பதைப் பின்வரூஉம் வெண்பாவால் அறிக.

"நற்றிணை நல்குறுந் தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் போற்றுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

இதைச் சார்ந்த ஏனைய தொகை நூல்களையெல்லாம் ஆன்றோர் வாளாகூறினர். "கற்றறிந்தார் போற்றுங்கலி" யென இதை மாத்திரம் சிறந்தெடுத்துரைத்தனர். இச்செழுஞ்சொற் சீரிய அடையொன்றே இதன் தனிப்பெருமாண்பை நனி விளக்குவ தாகும்.

இக் கலித்தொகையானது கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும், பாலை முப்பத்தைந்தும், குறிஞ்சி இருபத்தொன்ப தும், மருதம் முப்பத்தைந்தும், முல்லை பதினேழும், நெய்தல் முப்பத்துமூன்றும். ஆக நூற்றைம்பது செய்யுட்களையுடையது. இது பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந் திணைகளையுங் கொண்டது. இங்ஙனம் கூறப்பட்ட பாலைக்கலி முதலிய ஐந்தும் முறையே கடுங்கோன், கபிலர், மருதனிளநாக னார், சோழன் நல்லுத்திரன், நல்லந்துவனார் என்னும் நல்லிசைப் புலவர்களாற் பாடப்பெற்றன. இதனை

"பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுத்திரன் முல்லை நல்லந்துவ னெய்தல்
கல்விவலார் கண்ட கலி."

என்னும் வெண்பாவா லுணர்க.

இவ்விழுமிய நூலை ஆக்கி உலகுக்களித்த மாப்பெரும் புல வர்களே புலவர்கள். இவர்களே உண்மைப் பாட்டின் பெற்றி உணர்ந்த விழுமியோர். இவர்கள் தமிழ் இன்பக்கடலிலும் காதற் பெருவெள்ளத்திலும் திளைத்தாடினர். இவர்களது உள்ளப் பாங்கின் உயர்வும் ஆர்வமும் இந்நூற்பாக்கள் தோறும் மணி யொளி பரப்பி மிளிர்கின்றன. காதற்றேனையும் கன்னித்தமிழாம் கண்டையும் கட்டி கட்டியாய்த் திரட்டி உலவா இன்பம் பயக்கும் கலிப்பாவிலளித்த இத்தெய்வப் புலவர்களை என்சொல்லி வாழ்த் துவேன்! இவ்வையகத்திலே எமக்குத் துறக்கங்காட்டிய இத் தூயோர்க்கு எழுமையும் எம் நன்றி உரிமை செலுத்தி வழிபாடு செய்வேம். இவர்கள் வித்தகக் கல்வியும் முத்தமிழ்ப் புலமையும் நிரம்பிய நற்றமிழ்ப் புலவர். பொய்யும் புளுகும் புனைந்துரை யாது உள்ளதை உள்ளவாறுரைக்கும் தெள்ளியர். இவர்கள் இயற்கை வளங்களையும் நலன்களையும் பற்றிக் கூறுகின்றுழி, அவைகளை ஒரு சிறிதேனும் பொய்யும் புளுகும் விரவாது திறம் பட மொழிகுவர். இவர்கள் பல் கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியராகையால் இங்ஙனம் இயற்கை நலன்

களை வியத்தகுமுறையால் ஆராய்வர். இங்ஙனம் இயற்கை நலன்களை நுனித்தறிந்து கூறுந்திறன் எம் பண்டைப் புலவோர்பால் மட்டும் காணலாமேயன்றிப், பிற்றை ஞான்றிருந்த புலவோர்பால் காண்டலரிது. பிற்காலத்துப் புலவோர் உள்ளதை உள்ளவாறுரைக்கும் நீர்மையரல்லர். இதனுண்மை சங்க நூல்களையும் பிற்காலத்தெழுந்த நூல்களையும் ஒரு சிறிது ஆராய்வார்க்கும் நன்கு விளங்கும்.

இனி, இந்நூலின்கண்ணுள்ள பாக்கள் ஐம்பெரும் புலவர்களால் யாக்கப்பெற்றிருந்தாலும், இவற்றை நல்லந்துவனார் என்னும் நல்லிசைப்புலவரே தொகுத்தார். என்னை? "தொகை" யென்பதற்குத் தொகுக்கப்பட்டதென்பது பொருளாதலானும், கடவுள் வாழ்த்தின் உரை யிறுதியில் "ஆதலால் ஈண்டுப்பாலைத் திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தாரென்று கூறுக"வென்று உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலானுமென்க. ஆகவே ஆசிரியர் நல்லந்துவனார் நெய்தற்கலியைப் பாடி, இப்பாலைக்கலி முதலியவற்றைக் கோத்தாரென்பது பெறப்படுகின்றது. இதனுண்மையை மேற்போந்த "பெருங் கடுங்கோன்பாலை" யென்னும் வெண்பாவும் வலியுறுத்தும். இங்ஙனம் இந்நூலினுள்ள ஐந்து பகுதிகளும் தனித்தனி ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றும் பின் ஆசிரியர் நல்லந்துவனாரால் தொகுக்கப் பெற்றமையாற்றான் இதனை "நல்லந்துவனார் கலித்தொகை" யென்றுங் கூறுப.

இனி, இதன்கணுள்ள செய்யுட்களெல்லாம் கலிப்பாவினால் கவின்பெற யாக்கப்பெற்றிருக்கின்றன. இது கலித்தொகை யென்றும் கலியென்றும் வழங்கும். அகத்திணைக்குச் சிறப்புடையது இக் கலிப்பாவாகும். என்னை ?

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரியதாகு மென்மனார் புலவர்"!

என்று ஒல்காப்பெருமைத் தொல்காப்பியம் கூறுகின்றமையான் என்க.

இனி, எம் பழந்தமிழ்ப்புலவர் நூலியற்றும் முறையைப் பற்றி ஒரு சிறிது நோக்குவோம். எம் பண்டைத் தமிழ்மக்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்

பொருள் அடக்கியே நூல் செய்தனர். இந்நான்கு உறுதிப் பொருள்களைப் பற்றிக்கூறும் பொருளிலக்கணம் வேறெம் மொழிக்குமில்லாது எம் தமிழ்மொழிக்கே சிறப்பாக உரியது. இப்பொருளிலக்கணமே தமிழ் மக்களின் தனிப்பெருமாண்பை அறிவுறுத்துவது. இதுவே தமிழ் மக்கட்குச் சிறப்புரிமை நல்குவது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த பொருள் அகம், புறம் என இருவகைப்படும். "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்ப முறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" என்றும "இதனை ஒழிந்தன, ஒத்த அன்புடையார் தாமேயன்றி, எல்லார்க்கும் துய்த்துணரப்படுதலானும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறமெனப்படும்." என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியார் கூறியவாற்றால் அகம், புறம் இவை யென்பது இனிது விளங்குகின்றது. அகத்தே நிகழும் இன்பம்பற்றி அஃது அகமெனப்பட்டது. இஃது அகமும் பொருளும் ஆகும். புறத்தே நிகழும் அறமும் பொருளும்பற்றி இது புறமெனப்பட்டது. ஆகவே ஈண்டுக் கூறப்பட்ட அகப்பொருளும் புறப்பொருளும் அறம பொருளின்பங்களையே பற்றிக் கூறுதல் காண்க. இதன் விரிவைத் தொல்காப்பியம் பொருளதிகாரத்திற் கண்டு கொள்க.

இங்ஙனம் மேற்போந்த நான்கு உறுதிப் பொருள்பற்றி நூல் செய்யும் செவ்விய முறை எம் பண்டைப்புலவோர் பாற் காண்டலன்றி, வேறெம் மொழியாளரிடத்தும் காண்டல் இயலாது. வடமொழியாளரோ இம்முறை தமக்குரிய தனிப்பெரு முறை யெனப் பூசல் புரிவர். ஆனால் அவ் வடமொழிநூல்களைத் துருவியாராய்ந்தால் இம்முறை அதற்குரித்தன்றென்பது செவ்வனே புலப்படும். அன்னார் மிகமிகப் பழையதென்று புகழ்ந்து போற்றும் அவர்தம் இருக்கு மறையை ஆய்ந்தால், இந்நான்கு பொருள் பற்றிக்கூறும் நன்முறை ஆண்டுத்தானும் ஒரு சிறிதேனும் காண்டலரிது. மற்று, எம் திருக்குறளாகிய தெய்வத்திருமறையின் கண்ணே இச்சீரிய முறை அமைந்து ஒளிர்வதைக் காணலாம். எமது திருக்குறள் மாத்திரமன்று, ஏனைய தமிழ் நூல்களும இச்செவ்விய முறை பற்றியே யாக்கப்பெற்றன. இஃது எம் பண்டை மூதறிஞர் தம் கூரிய அறிவாற் கண்ட சீரிய முறையாயிருப்பவும், இதன் நுட்பமுணராது இதை வடமொழியாளரே முதன்முதற் கண்டனரென்றும், பின்னர் அவரிடமிருந்தே நமது தமிழ்மக்கள் கடன் வாங்கினா

ரென்றும் ஒரு சிலர் கூறுவர். இவர்தம் மதிநுட்பம் பெரிதும் இரங்கற்பாலது. எமது கூற்றி னுண்மை தமிழ்நூல்களை நுணுகி நுணுகி யாராய்ந்த நுண்மாண் நுழைபுல முடையார்க்கன்றோ புலப்படும்?

இனி, எம்தமிழ் நூல்கள் அறம் பொருள் இன்பங்களை விளங்கக் கூறுமாயினும், வீடுபேறு பற்றியும் ஒரு சிறிது கூறும், என்னை?

"காமஞ்சான்ற கடைக்கோட்காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே".

என்பது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம். இஃது உண்மைத்துறவறங்கூறும சூத்திரம் ஒத்த பண்புள்ள தலைவனும் தலைவியும் இன்பம் நுகர்ந்து இல்லறமென்னும் நல்லறம் நடாத்திப் பின்பு அருள்நெறிபற்றி வீடுபேறெய்துவர். துறவறமென்பது வீட்டை விட்டுக் காட்டுக்கோடிக் கண்ணை மூடிஇருப்பதன்று. இல்லின்கண்ணிருந்தே அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீயகுணங்களினின்றும் விடுதலை யடைந்து மனத்துக்கண் மாசிலனாதலே உண்மைத் துறவொழுக்கமாகும். பிற்காலத்தில் நமது தமிழ்மக்களின் இயற்கைச் செம்மையைக் கெடுத்து, செயற்கை வெம்மையைப்புகுத்தி, அவர்தம் செவ்விய இன்ப வாழ்வைக் கெடுக்க நம நாட்டிடை நுழைந்த போலித் துறவறமன்று. மனைவி மக்களுடன் இல்லின்கணிருந்தே அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றி, பின் அருள் நெறிபற்றி உள்நோக்கால் இறைமை நிலையுணர்ந்து எல்லா வுயிர்களினிடத்தும் ஒரே படித்தான அன்பு செலுத்தும் ஓர் ஒப்பற்ற நிலையே துறவென்பது. "சிறந்தது பயிற்றல்" என்பதும் அதுவே. "தனித்துறவு" என்னும் போலித்துறவு தமிழ் மககட்குரியதன்று. அது புத்தர் பெருமானல் ஒரு பெருநோக்கங்கொண்டு அவர் தம் அறநெறியைப் பரப்புதற்கு அக்காலத்தில் இன்றியமையாததெனக்கொள்ளப்பட்டதாயினும், அதைப் பிற்றைஞான்றுள்ளோர் அதன் நுட்பமுணராது ஞான்றும எக்காலத்தும் எம் மக்களாலும் கைக்கொள்ளவேண்டிய முறையென்றே பிழைபட உணர்ந்தனர். ஆகவே புத்தர் பெருமான் காலத்துக்குப் பின்னரே இத் 'தனித்துறவு' தமிழ் நாட்டில் பரவிற்று. இஃதை எம் தமிழ் மூதறிஞர் கண்டாருமல்லர், அல்லது மேற்கொண்டொழுகினருமல்லர். எமது நாட்டின்கண்ணிருந்த முனிவ

ரெல்லோரும் மனைவி மக்களோடு வாழ்ந்தோரேயாவர். இது வேயுமன்றி, எம் பண்டை மூதறிஞரின் வாழ்க்கையின் பெற்றி எம் தமிழ்மறையின்கண் பரக்கக்காணலாம், எமது தமிழ்மறை தெய்வப்புலவரின் உண்மை வாழ்க்கையின் பயனாய் எழுந்த தன்றோ? அஃது அவரது ஒப்பற்ற வாழ்க்கையின் நிலையமன்றோ? எம் திருக்குறளின் அதிகாரமுறை வைப்பே எமது கூற்றை வலியுறுத்தும்.

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன் பழிப்பதில்லாயி னன்று"

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற"

"அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்"

எனவரூஉம் மறைமொழிகளின் நுட்பங்களை உன்னுக.

இனி, எமது பண்டைத் தமிழ் மக்கள் மேற்கொண்டொழுகிய இல்லறத்தின் தன்மையை ஒரு சிறிது நோக்குவோம். இல்லறம் என்பதென்னை? இல்லறத்துக்குரிய தலைவன் தலைவியரின் பண்புகள்யாவை? "ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒதத கல்வியும் உடையராய்" என்றும் "அன்பினானுங் குணத்தினானுங் கல்வியினானும் உருவினானுந் திருவினானுந் திரிவிலர் ஒருவர் ஒருவரின்" என்றும் "எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்தானும் குணத்தானும் உருவினானுந் திருவினானும் பொருவிலன் தானே என்பது இவளும் அன்னளெனவெ இருவரும் பொருவிறந்தா ரென்பதனைப் பயக்கும்" என்றும் ஆசிரியர் நக்கீரனார் கூறுமாற்றான் அறிக. இல்லறம் என்பது ஆண் பெண்ணென்னும் ஈருடலைத் தாங்கும் ஒருயி ரென்றே சொல்லலாம்.

"காகத்திரு கண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பத் துன்பங்களே"

என்றும்,

"சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே"

என்றும் போந்த மணிவாசகனார் அமுதமொழிகளை ஓர்க.

இம்மணிவாசகங்களின் பொருள் என்னை? ஆண் பெண் என்னும் இருவரும் ஒருங்கு சேர்ந்து நடாத்தும் வாழ்க்கை யன்றோ உண்மை வாழ்க்கை? அவர்கள் ஒன்று கூடிவாழ்ந்தா லன்றோ இறைவன் படைப்பின் விழுமிய நோக்கம் நிறைவேறும்? எங்ஙனம் இறைவனும் இறைவியும் பிரிவற இணைந்து இவ்வுலகைக் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி வருகின்றார்களோ, அங்ஙனமே ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்து இறைவன் அருள்வழி நின்று வேறு உயிர்களையும் இவ்வுலகில் தோற்றுவித்து அவர்தம் ஏனைய தொண்டுகளையும் செய்து வரல் வேண்டும். இவ்வழகிய உலகம் யாண்டும் ஆண் பெண் வடிவாக வன்றோ காட்சிகொடுக்கிறது? எங்கணும் ஆண் பெண் பொலிவு!! அண்ட பிண்டங்கள் யாவும் ஆண் பெண் வடிவா யிருத்தல் போல, அவைகட்குக் காரணமாகவுள்ள முழுமுதற் பொருளும் ஆண் பெண் வடிவாய் இலங்குகின்றதன்றோ? சிவ மின்றிச்சத்தியில்லை: சத்தியின்றிச் சிவமில்லை. இதன்பெற்றி பின் வரூஉம் சிவஞான சித்தித் திருப்பாட்டுக்களான் உணர்க.

"சத்தியும் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியு மாகி
வைத்தனன் அவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்"

"அருளது சத்தி யாகும் அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்"

ஆகவே, ஆண் பெண் இருவரும் ஒருவர்க்கொருவர் இன்றியமை யாது வேண்டற் பாலரென்பதூஉம், அவர்கள் இருவரும் ஒருங் கியைந்து வாழும் வாழ்வே உண்மை யின்பவாழ்வென்பதூஉம், அங்ஙனமே உலகிற்கு முழுமுதற்பொருளும் ஆண் பெண் வடி வாய்ப் பொலிகின்ற தென்பதூஉம், இத்தன்மைத்தாய வாழ்வே இயற்கையோ டியைந்த வாழ்வென்பதூஉம், இத்துணைச்

சிறப்புவாய்ந்த வாழ்வே எம் பண்டை மூதறிஞர் நடாத்தினார்களென்பதூஉம், இச் செம்மை நெறியை விடுத்துச் செயற்கையின் கண்ணதாகிய 'தனித்துறவு' என்னும் போலித்துறவொழுக்கத்தை மேற்கொண்டாரலரென்பதூஉம், அச் செயற்கையின் பாற்படும் துறவு புத்தர் பெருமானின் பெருநோக்கமுணராது பின்னுள்ளோரால் உண்மைத் துறவெனப் பிறழ உணரப்பட்டதென்பதூஉம், அஃதே எம் தமிழ்நாட்டிடைப் புகுந்து எம் மக்களின் இயற்கைச் செம்மையைக் கெடுத்து அன்னார் வாழ்வைக் குலைத்துவிட்டதென்பதூஉம், அத்தகை வாழ்விற்கு எம பழந்தமிழ் நூல்களின்கண் தினைத்துணையேனும் சான்று கிடையாதென்பதூஉம், இன்னும் மனமாசுகளினின்றும் நீங்கி எல்லாவுயிர்களிடத்தும் அன்பு செலுத்தித் தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாய் இல்லின்கணிருந்தே இறைநிலையுணர்ந்து வாழும் வாழ்வே உண்மைத் துறவொழுக்கமாகுமென்பதூஉம், மற்று மனைவிமக்களை விடுத்து வீட்டை விட்டுக் காட்டுக்கோடி வாழ்தல் உண்மைத் துறவொழுக்கமாகாதென்பதூஉம் காண்க.

இனி, இக்கலித்தொகையானது யாம் மேற்கூறிப் போந்துள்ள எம் பண்டைத் தமிழ்மக்களின் விழுமிய நோக்கங்களையும் சீரிய கருத்துக்களையும் அணிபெற அலர்த்தி நிற்கும் செழுங்கொடியாய் இலங்குகின்றது. தமிழர் பழமை; நாகரிகம்; பெண்ணுரிமை; இவை இதழ். காதல் மணம் தீந்தமிழ்த்தேன்; இவையெலாம் நிறைந்த கவின்மலர்க் கலிப்பாக்கள் அலர்ந்து விளங்கும் இக் கொழுங்கொடியைக் கண்டு கண்டு என் உள்ளம் ஓவாது பூக்கின்றது. தண்டமிழ்த் தனியிளங்காவில் அழகலர்ந்து இன்பத்தேன் பிலிற்றி நிற்கும வண்பூங் கொடிகள் பலவுள. அவற்றுள் இதுபோற் சிறப்புடையன மற்றொரு சிலவே. அவை தாம் திருக்கோவையாரும், 'திருக்குறளும், தொல்காப்பியமும் என்க. எம் பழந்தமிழ் மக்களின் வாழ்வு நுட்பங்களையும் அவர்தம் உயர்மனப் பான்மையையும் தெரிப்பன எம் அகப்பொருள் நூல்களே. அவைதம்முள் மிகச் சிறப்புடையது இக் கலித்தொகை நூலே யென்றறிக. காதல் விளக்கும் களிநூல்களின் அரசியாய் இந்நூல் இலங்குகின்றதெனக் கூறல் மிகையாகாது. இந்நூல் நுட்ப முணர்ந்தார்க்கெல்லாம் இவ்வுண்மை புலப்படும். கடலமுதெடுத்துக் கரையில் வைத்தாற் போன்று, அகப்பொருட் பரப்பெல்லாம் திரட்டித்தரும இச் சுவை நூலைச் சுவைத்த ஒருவனுக்கன்றோ இதன் சுவை மாண்பு தெரியும்? கலித்தொகையைப் படிக்கும் ஒருவன் தனது புறத்தொழில்களை மறந்து இன்பத்தில் படிந்து அதனால் விழுங்கப்

பெறுவனென்பது திண்ணம். மணற்கேணி தோண்டத்தோண்ட எங்ஙனம் அதன் கண் நீர்சுரந்து பாயுமோ, அங்ஙனம் கலித்தொகை படிக்கப் படிக்க இன்பம் ஊற்றெடுத்துப் பாயும். யாண்டும் காதல் மணம்; எங்கணும் இன்பச்சுவை. இத்துணை இன்பம் பயக்க வல்ல நூலன்றோ நூல்? இத்தகையின்பம் பயக்கும் பான்மையுடைய நூலாகையாலன்றோ எம் பண்டைத்தமிழறிஞர் "திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன், விருத்தக் கவிவளமும் வெண்பேடம், - திருக்குறளோ, கொங்குவேள் மாக் கதையோ கொள்ளேம் நனியாரேவம், பொங்குகலி யின்பப் பொருள்" என்று கூறி இதைப் போற்றிப் பாராட்டினார்கள்? இத்துணை இன்பஞ் செறிந்த கலித்தொகையைப் போற்றிப் புகழ்ந்துவந்த எம் தமிழ்மக்களே, நம் இக்கால நிலைமைதான் என்னே!! நம் கலித்தொகை யென்னும் காதலின்பக்கடலெங்கே? திருக்கோவை என்னும் தீந்தமிழ்க்கடலெங்கே? வடநாட்டிலிருந்து குளிரால்வருந்தி உண்ண உணவும் உறங்க உறையுளு மில்லாது ஊர் ஊராய்த்திரிந்து ஆடு மாடு முதலிய விலங்குகளை மேய்த்து, அவற்றின் ஊனைச் சுவைப்பதற்காக 'வேள்வி' யென்னும் ஓர் இரக்கமிலாக் கொடுஞ்செயலைப் புரிந்து, சோமப் பூண்டின் சாறெனிய ஒருவிதக் கள்ளை ஆரப்பருகிக் களியாட்டயர்ந்து வந்த பண்பொன்று மில்லாப் படிறராகிய ஆரியரும் அவர்தம் வழித்தோன்றல்களென்று தருக்கித்திரியும் பார்ப்பனரும் இட்டமாய வலையிலும் அவர்தம் சூழ்ச்சிகளிலும் சிக்குண்டா கிடக்கின்றீர்கள்? எம்முடன் பிறந்த அருமைத் தமிழ் மக்களே? விழிமின்!! எழுமின்!! நுங்கள் பழையசிறப்பையும் நாகரிகத்தையும் உணர்மின்கள்!! அகப்பொருள் என்னவென்பது இவ்வாரியருக்கும் பார்ப்பனர்க்கும் தெரியுமா? அகப்பொருட்கும் இவர்க்கும் என்ன உரிமை? தமிழ்ப்பெரு மக்களே, அகப்பொருள் நுங்கள் அரும்பெரும் முதுசொற்பொருளன்றோ? இவ்வாரியர் தங்கட்குள் பாராட்டித்திரியும் நூல்களுள் எமது கலித்தொகை திருக்கோவை முதலிய நூல்களுக்கு இணையாக ஒன்றேனும் உண்டோ? கூறுமின்! எம் கலித்தொகை பெரியதோர் இன்பக்களஞ்சியம். பிறமொழிகளில் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாது இலக்கிய உலகில் இலங்கொளி பரப்பி நின்று மிளிர்கின்றது. பாருங்கள்! தமிழ்மலை முகட்டில் தண்கதிர் விரிக்கும் தனிமணியாய் இலங்கும் எம் ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்தையும் பாருங்கள்! மக்கள் வாழ்வை வளமுறுத்தும் நல்லாறுய்த் தென்தமிழ் வெற்பினின்றும் விழுந்தோடும் திருக்குறள் மணியாற்றை நோக்குங்கள்! மணிக்காட்சி! என்ன வனப்பு!! இம் மும்மணிகளை ஈன்றெடுத்த எம் அருமைத் தமிழ்த்தாயே? இன்னும் துயி

லுதியோ? நினக்கு ஒன்றுரைப்பேன் கேள். நின் அரும்பெறல் மணிகளாய்த் திகழும் நூல்களிற் சிலவற்றை இவ்வாரியப் பார்ப்பனர் அவர்தம் மொழியாகிய வடமொழிக்கணுள்ள நூல்களின் மொழி பெயர்ப்பென்று சொல்லித் தமக்குள் மகிழ்ந்து கொள்கின்றனர்கள். எமது பத்திக்களஞ்சியமாய "பெரியபுராணத்திற்குப் பக்தவிலாசம் முதனூலாம்! முற்றத் துறந்து முழுத்தவமெய்திய எம் திருமூல அடிகள் அருளிய 'திருமந்திரம்' 'மந்திரமாலிகா' வின் மொழிபெயர்ப்பாம்!! பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதன் அருளிச்செய்த தனிப்பெருந் தமிழ்மெய் முதல் நூலாகிய எம் 'சிவஞானபோத' மும் ரௌரவ ஆகமத்தின் வழி நூலாம்!! எம் அருமைத்தாயே, இப்பார்ப்பனரின் கொடுமையை என்னென்று இயம்புவேன்!! இவர்தம் மதிநுட்பம் இருந்தவாறென்னே!! இன்னும் சிலநாட்களில் எம் தேவாரம் திருக்குறள் முதலியனவும் வடமொழியினின்றும் வந்தனவென்பர் போலும்!! எமது தமிழ் மக்களுட் புராணப்பேய் பிடித்த சிலரும் இவ்வாரியர் தம் கூற்றுக்கு அணிந்துரை புரிகின்றனர். அந்தோ!! கொடுமை!! கொடுமை!! தமிழ்மக்களே, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரும் எம் அன்னையின் உண்மைத் தொண்டருள் ஒருவருமாகிய திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களின் பின் வரூஉம் அமுதமொழிகளை உணருங்கள். "தமிழில் பாட்டுருங் காவியங்களில்லையோ? பலப் பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு; இயற்கை இன்பக்கலம் கலித்தொகை; இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்; இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும்;இயற்கைத்தவம் சிந்தாமணி; இயற்கைப்பரிணாமம் கம்பராமாயணம்; இயற்கை அன்பு பெரியபுராணம்; இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள்; இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்ல இயலாது. அஃது அநுபவ நிகழ்ச்சியில் உறுவது" ஆகையால் எம் அருமைத்தமிழ் மக்களே, கலித்தொகையைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள். நுங்கள் உண்மைப் பெருமையை உணருங்கள், பண்டை மூதறிஞர் மாண்பை உன்னுங்கள். காதற்றேனைப் பருகுங்கள். களவு மனத்தைக் கொள்ளுங்கள். தண்டமிழ்ச் சுனையாடுவோம் வாருங்கள். தரணியெலாம் தமிழை வளர்ப்போம் வாருங்கள். இதுவே என் வேண்டுகோள்.

தெளிவு நலம்

[திரு. மு. அருளையரசு அவர்கள்]

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.　　(தமிழ்மறை)

ஈண்டுத் 'தெளிவு' எனப்பட்டது மொழிகளின் தெளிவான நடையே. சிறிது கற்றவரும், அதனைக் கேட்டவளவில், தெளிவாகப் பொருளுணரத்தக்க சிறந்த நடையே தெளிவான நடையாகும். இனி அதன் நலம் அல்லது நன்மையாவதென்னை? முதலாவது தெளிவான நடையால் ஒரு மொழியானது இனிமை வாய்ந்து, பலராலும் விரும்பிப் பயிலப்படும். அதனால் மொழி செழித்தோங்கி வளரும். இரண்டாவது தெளிவான அம்மொழியைப்பலரும் பயில்வதால் மக்கள் அம்மொழி யுணர்த்திய நன்னெறிக்கண் நிற்பர். இதனால் மக்கள் இறைவன் அருள் பெற்று உய்வர். இவற்றால் தெளிவான நடையின் பெருநலம் இருபாலதாகும். இது நிற்க.

இனி, இத்தெளிவு நலத்தை, முதலாவது பொதுவாக எல்லா மொழிகட்குஞ் சார்த்தியும், இரண்டாவது தமிழ் மொழிக்கு ஏற்றியும், மூன்றாவதாக, தற்கால வெளியீடுகளுக்கு இயைத்தும் எழுதத் தொடங்குகின்றேன்.

மொழியாவதியாது? மக்களால் மொழியப்பட்டுப் பொருளுணரப்படுவதே மொழியாகும். (ஊண் என்பதுபோல, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது என்க). ஆகலின் மக்களால் மொழியப்பட்டுப் பொருளுணரப்படாதது மொழியாமோ என ஐயுறற்பாலதேயாகும். இவ்வாராய்ச்சியின்கண்ணே இறந்தொழிந்து மக்களால் வழங்கப்படாத 'ஆரியம்' முதலாயின மொழியாகா என்னும் எண்ணம் எனக்குத் தோன்றுகின்றது. இதை வல்லார் நன்றெனின் போற்றுக. அன்றெனின் தூற்றுக. முன்னொரு காலத்தில் மொழியாயிருந்தது என்று கோடலுமாம். இவ்வாறு இறந்தொழிந்து மொழியாகாத தன்மைக்கும் தெளிவான நடைக்கும் தொடர்புண்டோ எனின், உண்டு. அதனை யாராய்வாம்.

ஓர் மொழி, தெளிவான நடையைக் கொண்டு இயன்றால் இனிமை வாய்ந்து ஓங்கும். அவ்வாறின்றி, பொருளுணர்தற்கரியதாய் இருப்பின், அதைக் கற்று வல்லாரே பயில்வர். அல்

லார் பொருளுணர்தற்கு முயன்றும் தம்மால் இயலாததால், அதைப் பயிலாதொழிவர். ஒழியவே, அம்மொழி பரந்திருக்குந் தன்மை கெட்டு, கற்று வல்லார் மாட்டே சுருங்கி நாளடைவி லழியும். ஏனையோர், தாம் பொருள் உணர்தற்கேற்றதாய் அதனி னும் சிறிது திரிந்ததாய், ஓர் மொழியை வழங்கத்தலைப்படுவர். இம்மொழி முன்னதின் வழிமொழி யெனப்படும். ஆகவே முன்னது இறந்தொழிந்து ஏட்டு வழக்கில் மட்டும் நிலவும். இவ் வாறு திரிந்ததே 'ஆரிய'மும் ஏனையவும் என்பது சிறியேன் உள்ளக்கிடக்கை. ஆகவே பொதுவாக எல்லா மொழிகட்கும் தெளிவு இன்றியமையாதது.

இனித் தமிழ் மொழியின் தெளிவை நோக்குவாம். இயல், இசை, நாடகம் என்னு முத்தமிழினுள்ளும், நாடகம் மக்கள் யாவ ரும் உணரும் பொருட்டது ஆகலின் தெளிவான நடை இன்றி யமையாதது. இசைத் தமிழுள் அத்துணைத் தெளிவு காணவிய லாது. பண்டைக் காலத்து இயற்றமிழுள் (முச்சங்க காலங்களில்) அக்காலத்து வழங்கிய சொற்கள் பல வழக்காறற்றுப் போயின. ஆதலால் அக்காலத் தமிழை நோக்குங்கால், பொருள் உணர்தல் சிறிது அருமையே. எனினும் தமது தெளிவு நலம் கெடாது செய்யுட்கள் பலவும் இன்னும் உலவுகின்றன. எடுத்துக் காட் டாக,

"நீரின்றண்மையுந் தீயின்வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரனுடன் கேண்மை
சாரச்சாரச் சார்ந்து
தீரத்தீரத் தீர்பொல்லாதே"

என்ற பழந்தமிழ்ச் செய்யுள் நட்பின் திறத்தை எத்துணை இனிமையாகவும், தெளிவாகவும் உணர்த்துகின்றது? இது போன்ற செய்யுட்கள் பல, தமிழ்ச் செய்யுட்களின் தெளிவான நடையை விளக்கும்.

தெளிவான நடை பெரும்பான்மையும் உரை நடைக்கே இன்றியமையாதது. அவ்வுரை நடையே மக்களால் மொழியப் பட்டுப் பொருளுணரப்படுதலின் செய்யுணடையிலும் தெளிவாக இயற்றப்பட்டவையே இனிமை பயக்குமன்றி ஏனைய அத்துணை யின்பம் பயவா என்பது திண்ணம். காட்டாக, திருக்குறள் கடவுள் வாழ்த்தில் என் சிற்றறிவிற் கெட்டியவளவில்,

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்னும் பா, ஏனைய ஒன்பதினும் மிக்க இன்பம் பயப்பதாகத் தோன்றுகின்றது.

(சங்க காலங்களுக்குப்) பின்னர்த் தோன்றிய நூல்களுள்ளும் சிலவே தெளிவான நடையை மேற்கொண்டுள. அவையே யினிமை யளிப்பனவாயிருக்கின்றன. பல அவ் வினிமையின்றி, பொருளுணர்தற்கு அருமையாயிருக்கின்றன. இவ்வாறு இருப்பதற்கு இரண்டு முதல் ஏது (காரணம்) என் சிற்றறிவிற்குத் தோன்றுகின்றன. அவையாவன: இந்நூல்களில் வடமொழிக்கலப்பு மிக்கிருத்தலும், சொல்லணிகளால் இயன்றுள்ளமையும் ஆகும்.

வடமொழிக் கலப்பால், அம்மொழியின் புதிய சொற்கள் புகுந்து, பொருளுணர்தற்கு அரிதாகிவிடுவதுமன்றி, தமிழின் இனிமையுங் கெடுகின்றது. இதை யாவரு முணர்வர். ஆகவே தெளிவின் போக்கிற்கு இடையூறு ஏற்படுகின்றது. இவ் வடமொழிக்கலப்பு, செய்யுள் நடை, உரை நடை புகுந்ததெனினும், உரை நடையின் இனிமையே அதனால் மிகுதியாக அழிந்தது.

எடுத்துக் காட்டாக ஓராண்டுக்கு முன்னர், யான் "நரி விருத்தம்" என்னும் ஒரு சிறு நூலைக் கண்ணுற்றேன். அந்நூல் திருத்தக்கதேவரால் மிக்க இனிமையோடு பாடப்பெற்றது. அதன்கண் ஒரு குறிப்புரையையுங் கண்டேன். அக் குறிப்புரையில் "ஸ்ரீ புராணம்" என்னும் நூலினின்றும் சில சிறு வரலாறுகள (கதைகள்) எடுத்தெழுதப் பெற்றிருந்தன. அவற்றில் ஒன்றை ஒரு முறை படித்தேன். இருமுறை, மும்முறை, பன்முறைபடித்தேன். பொருள் தெரிந்திலேன். பல நண்பர்களுக்குக் காட்டினேன். அவர்களும் பன்முறை படித்தனர். பொருள் தெரிந்திலர். இன்னும் ஒருமுறை படிக்கலாமெனின் அதன்கண் இனிமையுமில்லை, யாதொரு பயனுமில்லை. அவ்வுரை நடையை ஈண்டு எடுத்துக் காட்டலாமெனின், என்னுள்ளமும் கையும் எண்ணவும் எழுதவுங் கூசுகின்றன. ஆதலின் விட்டனன். இனி இவ்வாறு இனிமை குன்றிப் பொருள் உணர்தற்கு அருமையிலும் அருமையாய் உற்றது எதனால்? எவரேனுந் தாமாக அதைக் கண்ணுற்றால், பின்னர், வடமொழிக்கலப்பாலேயே என்று உறுதிபகர்வர். ஆதலால்தான் பல நூல்கள் தம்தெளிவு நலமிழந்து வருந்துகின்றன.

தெளிவு நலத்தை அழிப்பனவற்றுள் சொல்லணிகளும் மிக்குத் திகழ்வனவாகும். அவையாவன, அந்தாதி, யமகம், சிலேடை, சித்திரம் முதலியனவாகும். இவையெலாம் பிறமொழியாளர் கோள்களாம். இவை தமிழ் நூல்கட்கு உரியன அல்லவென்பதற்கு இறைவனருளால் அப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களா யமையாதிருத்தலே தக்க சான்றாகும்.

இச் சொல்லணிகளா லியற்றப்பெற்றுள்ள நூல்கள், அதற்குரிய ஆசிரியர்களாலேயே பொருள் கொள்ளுதற்கு அருமையென்றால், ஏனையோர்க்கு எத்துணைத் தெளிவும் இனிமையும் பயக்குமென்பதை வல்லோர் உய்த்துணர்க ! இவற்றால் இவ்வாசிரியர்கள் வல்லமை விளங்குமேயன்றி, ஏனையோர்க்கு யாது பயன் ? பொருட்டெளிவும் இனிமையும் இவற்றில் அமைதல் அருமை. ஆசிரியர் சொல்லணி யமைதலையே கருதுகின்றாரே யன்றி, பொருளமைதியைச் சிறிதுங் கருதுகின்றாரில்லை. கருத இடனுமில்லையாம். ஆதலின் தெளிவு நலத்திற்கு ஊறு பயக்கும் இவற்றைத் தமிழறிஞர் இனியேனும் தமிழ்நூல்களில் கலக்கக் கருதாராக! இவ்வாறு தமிழ் மொழிக்கு எவ்வாற்றானும் தெளிவான நடை இன்றியமையாதது என்பதும், பிறமொழிக் கலப்பாலும் சொல்லணிகளாலும் அந்நலம் அழியுமென்பதும் விளக்கப் பெற்றன.

இனி, தற்கால வெளியீடுகளைச் சிறிது நோக்குவாம். இவ்வெளியீடுகள் பெரும்பாலும் உரை நடையா லியற்றப்பெறுவனவாகும். இவ் வெளியீடுகள் எல்லாம், மக்கள் எல்லாரும் உணர்ந்துய்யும் பொருட்டே வெளியிடப் பெறுவனவாகும். அம்மக்களில் கற்றவர்கள் எல்லாரும் அவ்வெளியீடுகளைப் படித்துணர்வர். கல்லாதார், கற்றவர் படிக்கவாதல், அல்லது அவர்கள் படித்துக்கூறவாதல் தாங்களுணர்ந்து கொள்வர். ஆதலால் இவ் வெளியீடுகள் எல்லா மக்களுக்கும் பொதுவானவையாகும். சிறிது கற்றவர்க்கும் இவ் வெளியீடுகள் பயன்படவேண்டும். ஆதலின் இவைகள் தெளிவான நடையால் இயற்றப் பெறுவது இன்றியமையாததாகும். இவ்வாறு தெளிவான நடையால் இயற்றப் பெறாது, பொருளுணர்தற்கு அரிதாகிவிடின், சிறிது கற்றோருங் கல்லார். கல்லாதாருங் கேளார். பெரும்புலவர் மாட்டேயே சுருங்கியழியும். அன்றியும் இவ்வெளியீடுகள் எல்லாராலுந் தழுவற் பாலன. இவ்வாறு எல்லாரும் அவற்றைத் தழுவுதற்கு, அவற்றின்கண் இனிமை மிக்குளவாதல் வேண்டும். அவ்வினிமைக்குத் தெளிவான நடை யின்றியமையாததாகும்.

ஆகவே யிவ்விரண்டாற்றானும் வெளியீடுகட்குத் தெளிவு நலம் வேண்டுமென்பது துணிவு. அந்நலத்திற்கு ஊறு செய்வன சிலவுள. முதன்மையானது முற்கூறிய வடமொழிக் கலப்பும் பிறமொழிக் கலப்பும் ஆகும். சிலர் இக் கலப்புக்களின்றித் தெளிவான நடை இயலாதென்பர். அவர் கூற்றுப் பொய்யென்பது "தனித்தமிழ்க் கட்டுரைகள்" என்னும் சீரிய செந்தமிழ் நூலைக் கற்பார்க்குத் தெள்ளிதின் தோன்றும். அந்நூலைப் போலவே இக்கால வெளியீடுகள் பலவும் செந்தமிழாலியன்று, பொருள் மிகவும் தெளிவாக உணர்தற்பாற்றாய்ப் பிறமொழிக் கலப்புச் சிறிதுமின்றி யியற்றப்பெற வேண்டுமென்பது எனது அன்பார்ந்த வேண்டுகோளாகும். ஆறு திங்கள்களாக அக்கலப்புச் சிறிதும் இன்றி யியற்றப்பெறுவதால், **செந்தமிழ்ச் செல்வி**யாகிய இத்திங்கள் வெளியீடு எவ்வளவு இனிமை பெற்றுள்ளது என்பதை உய்த்துணர்ந்து இனி யெழுதும் உரை நடைகளில் அக் கலப்புக்களை நீக்கி, தனித்தமிழால், எல்லா வெளியீடுகளையும், பிறரும் எழுதுவார்களாகில் தனித்தமிழ் தனிநலம் அடையு மென்பது திண்ணம்.

"செந்தமிழ்" என்று செம்மையாய்ப் புகழப்பட்ட இத்தமிழ்க்குச் செம்மை ஆயது இனிமையாலன்றோ? இவ்வினிமை ஆயது தெளிவினாலன்றோ? தெளிவினாற்றான் தமிழ் இனிமை எய்திச் செந்தமிழ் எனப்பட்டது மன்றித்"தண்டமிழ்" என்றும், "வண்டமிழ்" என்றும் 'செம்மொழி' என்றும் புகழப்பெற்றது. முதற்பெருங்கடவுளை யன்றி வேறெவற்றையும் ஒரு பொருளாக எண்ணாதவராகிய **மாணிக்கவாசகப் பெருமா**னாரும் இத்தமிழைத்

"தண்ணார்தமிழ்............"

என்று ஒரு பொருளாக வெண்ணிப் புகழ்ந்தது மிதனாலன்றோ!

தமிழ் இறைவனை ஒத்து, இறைவன் தன்மை வாய்ந்ததென்று பலராலும் புகழப்பட்டது. இறைவனைக்

"கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே"

என்று ஆன்றோர் புகழ்ந்துரைத்துள்ளனர். தமிழும் அவ்வாறே கற்றவர்களுக்குங் கல்லாதவர்களுக்கும், தன் இனிமையாகிய களிப்பை, அருளும்பொருட்டு இவ்விரு திறத்தார்க்கும் பொருள்படும் படியாக, தெளிவு நலத்தை மேற்கொண்டிருப்பது இன்றியமையாததாகும். ஆதலின் தமிழ்மொழி தெளிவு நலத்தொடு திகழ இறைவன் தண்ணருள் தழைக்க!

காதல்*

[காழி. சிவ. கண்ணுசாமி, B.A.]

ஆடரங்குகளிற் பெரும்பாலும் நடித்துக் காட்டப் படுவது மக்கள்தம் உண்மை வாழ்வன்று; மற்றவர்தங் காதற் பகுதியேயாம். இடையீடற்ற காதலே பொருளாக நாடகத்திற் பெரும்பாலன உள்ளங் கவர்ந்து இறுதியில் இன்ப முடிவெய்துகின்றன; அவ்வாறன்றிக் காதற்போக்கு இடையீடுபட்டுக் காதலர் துன்பமுழந்து உயிர் விடுதலைப் பொருளாக் கொண்டு நடித்துக் காட்டப்படும் நாடகங்கள் ஒரு சிலவேயாகும். உண்மை வாழ்விலோ காதல் இடையறு வின்பமளித்தல் யாண்டு மில்லை; வீரர மகளென நிலைமை கெடுத்தோ சூரர மகளெனத் துயரை விளைத்தோ அஃது இடையூறெய்துவிக்கும் பான்மைத்து. தாமிறந்தும் தம் பெயரிறவாத் தன்மையோராக விருந்து மடிந்த தகை மாண்ட முன்னோரிலெவரும் காதற் பித்தேறிக், கலக்குண்டதாகக் கண்டோ மில்லை. என்னை! பேராண்மையும் கருமமுனைப்பும் கழிபெருஞ் சால்பும் காதற் பித்தைக் காதலிப்பதில்லை போலும்! உரோமா புரியின் தவப் பெருந் தலைவரொருவரும்[1], அந்நாட்டுச் செங்கோலேந்தி நின்ற மற்றொருவரும்[2], இப் பித்தேறி நின்றனராலோ வெனிற் கூறுதும். முன்னவர் பெரும் புகழ் படைத்த பேரறிவாளராயினும் பிறர் மனை நயக்கும் இழிதகைமையை இயல்பா யுடையோர்; மற்றவரோ வெனின் அவ்வாறின்றி அகன்ற அறிவும் அவ்வறிவுக் கேற்ற நல்லொழுக்கமும் கட்டுத் திட்டமும் வாய்ந்த பெரியோர். ஆற்றுயின் அவர் வரம்பிகந்தது எற்றுக்கோ வெனின் அவல நெஞ்சம் படைத்தோரையே யன்றி ஒரோவிடத்து நிறை நெஞ்சு படைத்த நேர்மையாளரையும் காப்புக் கைம்மிக்கவழி இப் பித்துப் பற்றுது விடுவதில்லை போலும்! கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்களாலாம் பயனென் என்றும், கால் கண்டார் காலே கண்டார் தோள் கண்டேன் தோளே கண்டேன் என்றும் மக்கள் பிதற்றித் திரிவது பேதைமையன்றோ? இரை கண்டாற் குரைக்கும் நாயுங் கட்டுண்ணும் என்பது உலக வழக்கு. எனவே நாயனைய மாக்கள் தத்தம் வாயினாற் கேடுறுகின்றன வெனலாம். ஆனால் வடிவெழுத வருமையரான மடமங்கையின் சிற்றுருவத்தின் முன் மண்டியிட்டுப் போர்முனையில் நண்ணாரும் உட்கும் பெற்றியதாய்த் திகழ்ந்த, தம் பீடுடைத்து

* பேக்கன் பிரபுவின் கட்டுரைகளினின்றும் மொழிபெயர்க்கப் பட்டது.

நிற்கும் மக்கள் கண்ணாற் கேடுறுகின்றன ரென்றே கூறல் வேண்
டும். என்னே இவர்கள் அறிவிருந்தவாறு! உறுப்புகள் யாவற்
றினுஞ் சிறந்ததாய்க் கருதப்படும் கண்களானாய பயன் பொன்
னுந் துகிலும் புனைந்த ஊன் பொதியைக் கண்டு களித்தற்கோ?
விச்சதின்றியே விளைவு செய்வானை நச்சித் தொடர்ந்து நலந்
துய்த்தற் கன்றோ?

இனி, காதல் கைம் மிக்கவழிக் காதலர் உரையாடும் வெற்
றுரையும் பகட்டுரையும் விந்தை யெய்துவிக்கும். காதலரிருவ
ரும் ஒருவரை யொருவர் அணங்கு கொல் ஆய்மயில் கொல் என்
றும் மால் கொல் மாரன் கொல் என்றும் உண்மையைத் திரித்து
ஒன்று பலவா வானமளாவப் புகழ்ந்து கூறுவன வெல்லாம்
அவர்க்கின்பம் பயப்பனவேயன்றி மற்றையோர்க்குப் பயனில்
கூற்றாகவே தோற்றும். எனினும் காதலர் இவ்வாறு வெறும்
உரையளவான் மட்டும் புகழ்ந்து கொள்கின்றனர் எனக் கருதல்
வேண்டா; நெஞ்சார ஒருவரொருவரை மதித்திருப்பதும் அவ்
வாறே. “தோன்றாத் தோற்றித் துறை பல முடிப்பினுந் தான்றற்
புகழ்தல் தகுதி யன்”றென மறை சாற்றினும், அத் தற்புகழ்ச்
சித் துறையில் முதன்மைப் பரிசுபெற்று நிற்பது ஒவ்வொருவ
ரது “தான்” என்னும் தன் முனைப்பேயன்றோ? மகனெனப்
பட்ட எவனும் தற்புகழ்ச்சித் துறையில் முற்றும் பயின்றவ
னெனின், காதற் பித்தேறிய ஒருவன் அதனினூங்கு அத்துறை
யில் கற்றுக் கடைபோயவன் என்பதைக் கூறவும் வேண்டுமோ?
தாம் வீழ்வார் மென்றோள் தாமரைக் கண்ணானுல கென்றும்,
தம்மாற் காதலிக்கப்பட்டாரது வாலெயிறூறிய நீர் பாலொடு
தேன் கலந்தற்ற தென்றுந் தம்மாற் காதலிக்கப் பட்டாரது
பெருமையைத் திரித்துயர்த்திக் கூறி அதனால் தாம் பெருமை
யெய்துவதாகக் கருதும் பேதைமை மக்கட்கே அமைந்தது
போலும்! காதன் மிக்க விடத்துக் கருத்தழியும்; கருத்தழியவே
அறிவு ஓர்ப்பு கடைப்பிடி யென்றவை யகன்றோடும். இதனா
னன்றோ கைம்மிக்க காதலும் புலமிக்க நல்லறிவும் ஒருதுறை
போகா வென அறைந்தனர் பெரியோர்?[3]

இனி “இரும்புங் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாயுருகி யொன்றாந் தன்மை” பெறி
னன்றிக் காதலால் இன்ப மெய்துமாறில்லை. அன்றி யவ்வாறு
கருத்தொருமித்த நிலைமை பெறாவிடத்துக் காதலர் துன்பமுழத்
தல் ஒருதலை. எனவே யாவற்றையும் இழக்கச்செய்து தன்னையு
மிழக்க நிற்கும் இச்சீர் கேட்டைக் குறிக்கொண்டு காக்க
வேண்டாவோ? ‘யாவற்றையும்’ என்று மேற்கூறியது கண்

ணுக்கினிய காதலியைக் கைக்கொள்ள நினைந்து பொருளையும் புகழையும் ஒருங்கே வெறுத்தொதுக்கிய பலர்4 வரலாறு நோக்கின் நன்கு விளங்கும்.

இத்தகையதோர் பித்து பெரிதுங்கைம்மிக்கு நிற்பது செல்வம் மட்டுமீறி வந்துற்ற காலையிலும், எறும்புக்கும் ஈயப் புகுதகையற்று வறுமையுற்றிருக்குங் காலையிலுந்தான்; அவ்வாறு வறுமையுற்றக்கால் பெருகும் பித்துப் புறத்தார்க்குப் புலனுதலரிது. எனினும் அவ்விரு காலையிலுந்தான் காதல் காமப்பித்தென மாறிக் கட்டழித்து நிற்கும். அற்றேல் அதைப் பெருந்தவறெனக் குறிப்பதிற் பிழையேது முண்டோ? எனவே காதற் பற்றை யறவே யொழித்து நிற்க முடியாத விடத்து ஒருவன் தான் மேற்கொண்ட பணிக்கும் செயற்கும் இடையூறெய்துமாறு அதன்பாற் கட்டுண்டு கருத்தழிந்து நிற்காமல் அதை ஒருவழிப் படுத்தி யடக்கிவைக்க முயறல் சால்புடைத்தாகும். இன்றேல் பணிக்குப் பணியுங்கெடும்; அதனுலுறு பயனுங் கெடும்; அவன் தன் உண்மை வாழ்வே தலை தடுமாறிவிடும்.

போர்த்திறம் படைத்த விறலோர் இக் காதற் பித்திற் பெரிது மீடுபட்டிருக்கக் காணலாம். ஒரு கணமும் உயிர் வாழ்வதறியாத போர்ச் செயலி லென்றென்றும் கலந்து நிற்க வேண்டியிருப்பதால், அப் போர்ச் செயலொழிந்த காலத்துக் கள்ளையொப்பக் காமத்தையும் அள்ளி அள்ளிப் பருக நினைத்தல் இயல்பே போலும்!

இனி, மகனின் உயிரது இயற்கையே அன்பு வடிவிற்றாதலின் அஃது இவ்வாறு ஒரு மடநல்லாளிடத்தோ, அன்றி யொரு சில காமக் கிழத்தியரிடத்தோ சென்று செலவுறுதவழி பலர் மாட்டும் பரவி அருளும் அறமுஞ் செறிந்த உளப்பான்மையை அளித்தல் இயல்பாகும். மக்கட் குழூஉவைப் பெருக்குவது காதல்; அதற்கு நிறைவூட்டி உயர்வளிப்பது அன்பு; அதன் பண்பைக்கெடுத்து மாண்பை யழிப்பதே காமம்.

பொருளின் பிண்டக் கருத்து

உண்மை வாழ்வையன்றிக் காதற்றிறப் பகுதியை மட்டும் நடித்துக் காட்டலே ஆடரங்கிற் பெரிதுங் காணப்படுவதாகும்.

ஆன்ற கேள்வி யறிவுடைச் சான்றோர் காதல் வயப்பட்டுக் கலங்கியதில்லை.

காதல் என்பது மூட உருக்கம்; உண்மை திரிக்கும் வஞ்சக முகமன்; கருத்தை யழித்துக் கைப்பொருள் போக்குங் கருவி.

பெரும் பொருள் படைத்த காலத்தும் வறுமையுற்ற காலத்துந்தான் அது கைம்மிக்கு நிற்கும். அதை யறிந்து அது மேற்கொண்ட பணிக்குஞ் செயற்கும் கேடு பயக்காவாறு அதை யடக்கி ஒருவழிப் படுத்தலே சால்பு.

இறப்பையே நாடி நிற்கும் போர்வீரர் இடையிடையே இன்ப மளிப்பதாய காதற்பித்து கொண்டு நிற்றலியல்பே.

ஒருவர் மாட்டுக் காதலாகச் சென்று அடங்காத வழி அப் பண்பு பலர் மாட்டும் பரவி அருளினும் அன்பாக மாறுகிறது.

மக்கட் குழுவைப் பெருக்குவதே காதல்; அதற்கு உயர் வளிப்பதே அன்பு; அதன் பண்பைக் கெடுத்து மாண்பை யழிப் பதே காமம்.

மேற்கோள்

"இல்லறமென்பத னல்லுயி ரேயாய்
நின்ற காதலி னிலைமை நினையி
லிரும்புங் காந்தமும் பொருந்துந் தன்மைபோ
லிருவர் சிந்தையு மியல்பா யுருகி
யொன்றுந் தன்மை" மனோன்மணீயம்

"சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடப—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும் பியில்" நீதிநெறிவிளக்கம்

"உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்காற்
றுள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுடை ருங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்து முன்னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி

உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்" பட்டினத்துப் பிள்ளை

குறிப்பு :—

1. உரோமாபுரியில் தனியரசு செலுத்தி வந்த ஜூலியஸ் ஸீஸர் என்பாரது நண்பனாயிருந்து அவர் கொலையுண்டபின் தன் வாக்கு வன்மையினாலும் போர்வலியினாலும் அந் நாட்டுக்குத் தலைமை யெய்திய மார்க் ஆன்டனி என்பார், அவர் எகிப்து நாட்டரசியான கிளியோபாட்ரா என்ற பெண்ணரசிமீது கடுங் காதல்கொண்டு அவள் பொருட்டுத் தன் தலைமைப் பதவியையும் உயிரையும் ஒருங்கே இழந்தார்.

2. உரோமாபுரியின் புகழ்பெற்ற பன்னிரு சட்டங்களைப் பிறப்பித்த அப்பையஸ் கிளாடியஸ் என்பவர், அவர் வர்ஜினியா என்ற பெண் மணியிடங் கொண்ட தொடர்பை யறிந்து அப் பெண்ணின் தந்தை அவளை அவைநடுவே குத்திக் கொல்லவே கிளாடியஸ் தன்னுயிரையும் மடித்துக் கொண்டனர்; நாட்டாண்மைப் பதவியையு மதனால் இழந்தனர்.

3. பப்ளியஸ் ஸிரியஸ் என்ற பெரும் புலவர் எழுதிய நூலிற் காணப்பட்டது.

4. பாரீஸ் என்ற வீரரை யொத்த பலர். பெலியஸ், தீட்டிஸ் என்ற இரு கன்னியர்களுக்கு மன்றல் நிகழ்ந்தபோது எல்லாக் கடவுளர்களும் அழைக்கப் பட்டிருந்தனர்; ஆனால் போர்க் கடவுள் மட்டும் விடுபட்டுப் போயினள். அதனால் சீற்றங்கொண்ட அவள் மன்றலின் நடுவே போந்து "இஃது அழகிற் சிறந்தாளுக்கு" என்றுகூறி ஒரு பொன்னிலந்தைக் கனியை எறிந்து போயினள். யூனோ, மினர்வா, வீனஸ் என்ற மூன்று அணங்குகளும் தாம் தாமே அழகிற் சிறந்தவளென்றுகூறி அக்கனியைக் கைப்பற்ற முயன்றனர். அது கண்ட ஜூபிடர் என்னும் கடவுள் பாரீஸ் என்னும் கோவலனிடம் சென்றால் இவ்வழக்கைத் தீர்ப்பானென்று கூறினர். அவ்வாறே அவர்களவனிடஞ் சென்றனர். யூனோ ஆசியா கண்ட முழுவதையும் அவன் அடிப்படுத்திக் கொடுப்பதாக உறுதி கூறினாள்; மினர்வா பல போர்களிலும் வெற்றி பெற்றுவைப்பதாக உறுதி கூறினாள்; ஆனால் வீனஸ் என்பவளோ உலகிலுள்ள பெண்மணிகள் யாவரினும் அழகிற் சிறந்த ஒருத்தியை யளிப்பதாகக் கூறினாள். பாரீஸ் என்பவன் உடனே அப் பொற்கனியை வீனஸ் என்பாளுக்குக் கொடுக்கத் தீர்ப்பளித்தான். பின்னர் வீனஸின் ஏவலின்படி அவன் கிரீஸ் நாட்டிற்குச் சென்று அந்நாட்டு மன்னனாயிருந்த மெனிலேயஸ் என்பவரின் மனைவியான ஹெலன் என்னும் அழகிற் சிறந்த பெண்மணியைச் சிறையெடுத்துச் சென்றதே பெயர்போன ட்ராய்ப்போர் ஆகும்.

புகழேந்தி—செந்தமிழ் நாடகம்

[திரு. அ. நடராஜபிள்ளை அவர்கள்]

பாயிரம்

குரு வணக்கம்

நேரிசை வெண்பா

தமிழை முழுதுணர்ந்து தந்தகந்த சாமி
அமிழ்தே யுனைப்பணிய வல்லற்—றிமிரம்
கடிந்தோடச் செய்வினைகள் கட்சியுறச் செய்வாய்
படிந்தென்றன் நெஞ்சகத்தின் பால்.

தமிழ்த்தாய் வணக்கம்

நேரிசையொத்தாழிசைக் கலிப்பா

இது நான்கடித்தரவு

திருவாரும் பாரதமா தேவியின்றன் றிகழ்முகமாம்
உருவாரும் தெக்கணத்தி லுலவிடுமைம் மொழிகளுமே
புலனொரு மைம்பொறியாம் புகன்றவற்றுள் கண்களைப்போல்
வலனொரு மெண்ணெழுத்தாய் வதிந்திடுமென் றமிழ்த்தாயே!

இவை மூன்றும் தாழிசை

திருக்குறளின் கருத்தினையே தெரிந்தவர்கள் தமிழ்மொழியில்
விருத்திமறை யிலையெனவே விளம்பிடமுன் வருவாரோ?

அகப்பொருளும் புறப்பொருளும் அமைந்ததொரு விலக்கணத்தைச்
சகத்தினிலே யெம்மொழியுந் தான்காணு விதுவியப்பே!

இலக்கியங்க ளின்பழமை யெழிலாதி குறையாமல்
விலக்கியதொல் காப்பியத்தின் வீறென்னல் விளம்பவற்றோ?

எனவாங்கு, தனிச்சொல்

ஆசிரியச் சுரிதகம்

நிற்புகழ்ந் தேத்து நெறியுடைச் சிறியேன்
பற்பல ருனக்குப் பழந்தொண்டு பூண்டு
ஆராய்ச்சி செய்ய வறிந்தவென் னுசை
பேராசை யாகப் பிடர்பிடித் துந்த

அடியேன் கடமையா யமைத்தவிந் நாடகம்
படியினின் மிகவும் பருப்பொருட் டாயினும்
பைந்தமிழ்ச் செல்வியே பார்த்தருள்
மைந்தனின் தேட்டென மனத்திடைக் கொண்டே.

அவையஞ்சின நெஞ்சோடு கிளத்தல்

நேரிசை வெண்பா

புகழேந்தி நாடகத்திற் புக்கிருத்த லால்நீ
இகழேந்து மென்றிரங்காய் நெஞ்சே—அகழேந்தும்
நீர்க்கடலை யூர்க்குருவி நீதமுற வேவென்ற
தார்க்குந் தெரிந்ததல்ல வா?

பாயிரம் முற்றிற்று.

முதலங்கம்—முதற் காட்சி

இடம்:—பாண்டியன் கொலுமண்டபம், காலம்-முற்பகல்.

நடர்:—சண்பகமாறன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், வெல்வாயன் முதலியோர்.

(சண்பகமாறன் முதலியோர் கொலுவிருக்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

ஒட்டக்கூத்தர்:—மண்புகழ் சண்பக மாறனும் வேந்தே!
விண்புகழ் நின்னவை விளங்குக வூழி!
வந்தவென் காரியஞ் சிந்தையிற் சேர்த்துக்
கடைக்கணித் திடுக வடுத்திட மணமே.

சண்பகமாறன்:—மணமா! யாதிது? வந்ததென்? புகல்வீர்.

ஒட்டக்கூத்தர்:—குணமாம் வையைக் குளிர்புனற் றுறைவ!
குவலய நனிபுகழ் குலோத்துங்க வள்ளல்
தகப்பனு ரந்திய சமயம் புகன்ற
சுபச்செய்தி யொன்று சொல்லவுஞ் சமூக
தெரிசனஞ் செய்யவுந் தேடியே வந்தனன்.

சண்பகமாறன்:—ஓகோ! ஆயின், ஒன்றினை முடித்தீர்;
மற்றொன் றினையே வகுத்திட லாமே.

ஒட்டக்கூத்தர்:—அரசர் பெரும! அவரெம தரசனை
நோக்கியே, 'நமது நூல்புரை கதிரவன்
குலத்தினைச் சந்திர குலத்தினிற் பழமைபோல்,
சேர்த்திடு முறையைச் செல்வ,நீ கைவிடேல்'

என்றறைந் தேகினர், ஆகலின் வென்றிசேர்
மன்னவர் பெரும,நின் மகளாங் கற்பக
வல்லியை யெங்கள் மன்னவர் பெருந்தகை
புல்லியே வாழப் புகன்றேன் திருமணம்.

சண்பகமாறன் :—மாப்பெரும் புலவர் மதித்திடுந் திலகமே!
(புன்னகையுடன்) பாண்டவர் வம்சம் பாண்டிமா குலத்திற்
காண்டகு கன்னிநங் கற்பக வல்லியைத்
தீண்டிடச் சோழன் சிறப்புக ளென்னே?

வெல்வாயன் :—சிறப்புக ளென்ன வரப்புகள் மிகுதி.

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

ஒட் :—கோரத்துக் கொப்போ கனவட்ட மம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானே
ஆருக்கு வேம்புநிக ராகுமோ வம்மானே
ஆதித்த னுக்குநிக ரம்புலியோ வம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ வம்மானே
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ வம்மானே
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே.

வெல்வாயன் :—போட்டார்! நல்ல போடுநங் கூத்தர்!
சோழ னிவருங் கோரம் பாண்டியன்
கனவட் டப்பரி காட்டினு மிகுமாம்,
காவிரி வையையைக் காட்டினுஞ் சிறப்பாம்,
ஆத்தி மாலையைப் பார்க்கினுஞ் செழியன்
வேப்ப மாலை மிகுதியுங் கசக்குமாம்,
கதிரவ னெதிரிற் கவின்மதி வெளுக்குமாம்,
புவிதனில் வீரன் புகழ்குலோத் துங்கனும்,
காட்டுப் புலிக்குக் கடல்மீ னஞ்சுமாம்,
கொற்கைக் குறையூர் குணத்தின் மிக்கதாம்,
பாண்டிமா நாடு பழஞ்சோ ணாட்டை [லாஞ்
வேண்டுமாம் பல்வளம் வெகுபேஷ்! இவையெ
சிறப்பெனும் வரப்பு,நீர் தேக்கிடும் வரப்பே.

புகழேந்தி :—ஒட்டக் கூத்தரா முயர்கவிப் புலவீர்!

(எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளித்த தம்மானே
யொப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானே
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானே
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானே
கரையெதிரல் காவிரியோ வையையோ வம்மானே
கடிப்பகைக்குந் தாதகியுங் கண்ணியோ வம்மானே
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ வம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே.

வெல்வாயன் :— கொடுத்தார் புலவர் குடையுங் கொடையே,
விடுத்தார் நல்ல விளக்கமாம் விடையே.

ஒட்டக்கூத்தர்:— ஆமாம் புலவீர் ! அழகமர் பாண்டியன்
பராக்கிரமம் பகரப் பாரினி லிலையே
குலோத்துங்க சோழனே,

(நேரிசை வெண்பா)

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகிற் கிடான்கவசம் - துன்றும்

(சிறிது யோசிக்க)

வெல்வாயன்:— குஷாலாய்ப் படுத்துத் தூங்கும்;
கனவிற் றோன்றும் யாவும்.

புகழேந்தி:— வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று.

(ஒட்டக்கூத்தர் முகஞ்சுளிக்க)

வெல்வாயன் :— அப்படி ! அப்படி ! அதுதான் சரியே.
இப்புவி யதனி லியல்புடைப் பெரியார்,
'அவன்கை கொண்டு அவன்கண் குத்தல்,
என்ப திதுவே! இதுவே! சரி, சரி.

சண்பகமாறன் :— போதும், போதும், புகழ்வெல் வாயா !
போதும் விகடம். புலவீர்! உமது
போருங் கண்டோம், புகழ்ந்தோம், நும்மை;
வாரும் நமது மங்கள வதுவை
சேரும் வகையைச் சிந்தனை செய்வோம்;
கூத்தப் புலவீர் ! கொண்டநுங் கருத்தைக்

கேட்டே மகிழ்ந்தேம்; கேடில் வாழைப்
பழமது நழுவிப் பாலில் விழுந்த
தன்மையாய்க் கொண்டோம்; தமது விருப்பப்
படியே விவாகப் பத்திரம் நமது
அரண்மனைச் சோதிட ரமைத்துக் கொடுப்பர்
வாங்கியே சென்று நும் மன்னரை விரைவிற்
பாங்காய்ப் புறப்படப் பகருவீர்.

ஒட்டக்:— பாண்டியர்
பெரும! அங் ஙனமே பிழையறச் செய்வல்
வருகின் றேனின் திருவடி தொழுதேன்.
(போக.)

வேல்:— ஆம்சுபம் சீக்கிர மல்லா விடிலோ
போங்குட்டுக் கெட்டுப் போய்வரு வேணிதோ.
(போக.)

(கொலுக்கலைந்து காட்சி முடிகிறது)

முதலங்கம்—இரண்டாங் காட்சி

இடம்—பாண்டியன் அரண்மனையி லந்தப்புரம்.

காலம்—பிற்பகல்.

நடர்—கற்பகவல்லி, செந்தாமரையாள், வெண்டாமரையாள்.

(கற்பகவல்லி தோழிகளோடு அம்மானையாட)

(இவையாறும் கலித்தாழிசை)

செந்தா:—வெள்ளப் பெருக்குமிகு மேலான காவிரிக்கு
உள்ளப் பெருக்குவையை யொவ்வாதா மம்மானை
கற்பக— உள்ளப் பெருக்குவையை யொவ்வாதே யாமாகில்
பிள்ளையின் கையேட்டாற் பிறங்கியதே னம்மானை
வெண்டா:— பிறங்கியது சிவன்முடியிற் பிறந்ததா லம்மானை (க)

செந்தா:— ஆருக்கு வேம்புநிக ராகுமோ வென்றொருவர்
ஊருக்குள் வந்தின் றுரைத்தார்கா ணம்மானை
கற்பக:— ஊருக்குள் வந்தின் றுரைத்தாரே யானாலும்
பேருக்கு மாலையன்றிப் பேயோட்டா வம்மானை
வெண்டா:—பேயோட்டா வென்றூர் பெரும்புலவ ரம்மானை (உ)

செந்தா:—ஆதித்த னுக்குநிக ரம்புலியோ வென்றொருவர்
வாதித்து நம்மவையில் வழக்குரைத்தா ரம்மானை

கற்பக:—வாதித்து நம்மவையில் வழக்குரைத்தா ராலும்
ஆதிசிவன் றன்முடியி லமர்ந்ததுகா ணம்மானை
வெண்டா:— அமர்ந்ததென்றூர் புகழேந்தி யாம்புலவ ரம்மானை (௩)

செந்:— புலிக்கொடிக்கு மீன்கொடியும் புல்லியதென் றின்றொருவர்
வலித்துரைத்தார் நம்மவையில் மாயமோ வம்மானை
கற்பக:—வலித்துரைத்தார் நம்மவையில் மாயமா யாலும்
புலியுருவோ திருநெடுமால் புரிந்தெடுத்த தம்மானை
வெண்டா:— புரிந்ததுவும் மீனெனவே புகல்வீர்கா ணம்மானை (௪)

செந்தா:—ஊருக்கு றந்தைநகர் கொற்கையோ வென்றொருவர்
போருக்கு நம்மவையிற் புகுந்தார்கா ணம்மானை
கற்பக:— போருக்கு நம்மவையிற் புகுந்தாரே யாமாகில்
ஊருக்குள் திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானை
வெண்டா:— உறந்தையன்று கொற்கையென வுரைப்பீர்காணம் மானை (௫)

செந்தா:—வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வென்றொருவர்
மாறர்க்குத் தீங்குரைக்க வந்தார்கா ணம்மானை
கற்பக:— மாறர்க்குத் தீங்குரைக்க வந்தாரே யாலும்
மாறனையே பெரும்பரவை வழிபட்ட தம்மானை
வெண்டா:— வழிபட்ட தல்லாமல் மணங்கொண்டா ரம்மானை (௬)

(நேரிசையாசிரியப்பா)

கற்பக:— ஏதடி வெண்டா மரையே! அம்மனைப்
(முகஞ்சிவந்து) போதும் விடாயோ புகலுங் கேலி?

வெண்டாமரை:—கேலியன் றம்ம! கிளர்பூ ரிப்பால்
வேலியா மடக்கம் விண்டது தாயே,
குலோத்துங்க வள்ளல் கொள்கையிற் பெரியர்,
வலோத்துங்க வீரர், வண்மையிற் புயலே;
ஆட்சியில் வலியர்; ஆயினும், கூத்தர்
சூழ்ச்சியில் லாமற் றுருமபும் பிறழா.

செந்தாமரை:—கூத்தர்தா னென்ன குறைபா டுடையர்?
சாத்திரங் கண்டார், தவப்பெரு மதியர்,
கவிக்களி றுகைக்குங் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவரு மாவர்.

வெண்டாமரை:—ஆயின், முன் கோபி; அதிகப் பதற்றம்;
கூறிய தொன்மையே கொள்வர் பெரிதாய்
இன்றுமன் னவையில் மன்றலை வேட்டுச்
சோழ வரசர் தொல்புகழ் கூறப்
பாண்டியர் குலத்தினைப் பழித்தனர் பலபடி.

கற்பகவல்லி:—பழித்தன ரல்லர்; பாவாய்! புலவரின்
மொழித்திற மதுவே, அன்றியு மொன்றினைத்
தாழ்த்தலே மற்றதின் வாழ்த்தலா மென்பது
புலவரிற் சிலர்கொள் புந்தியாம்; விடு, விடு;
செந்தா மரையாந் தெரியிழாய்! நீபோய்ப்
பந்தா டுதற்குப் பாங்கிகள் தம்மை
உய்யா னத்தி லொருங்குட னழைத்துவை
வந்தோ மிருவரும்.

செந்தாமரை:— வழுத்திய படியே
சென்றனன். (செல்ல)

வெண்டாமரை:— கொன்றையைத் திருமுடி யணிந்தோன்
மன்றினிற் பணிந்தது வாய்த்தது நமக்கே.

கற்பகவல்லி:—ஆமாம், தோழி! அடியேன் பிரார்த்தனை
வாமமாம் சித்திரம் வந்தது முதலா
வென்ப தறிகுவை இன்றது முடிந்தது
மன்பதை யாவும வகுத்தவ னருளால்;
ஆயினும் இருபுற வகனமர் காதல்
வாய்த்ததோ வெனவே வருமோ ரையம்.

வெண்டாமரை:—பூரணச் சந்திரன் பொலிவாற் பொங்கிய
பாரணி பாண்டியர் குலமாம் பயோததி
வந்திடு கற்பக வல்லியாந் திருவே!
உந்திடு காத லின்றியே யெவரும்
வந்திடல் மணத்தினைக் கொண்டிட லென்பது
நெருப்பின்றி யேபுகை நின்றிட லொக்கும்;
ஆகலின், இருபுற வகனமர் காதலில்
பாகின் மொழிசேர் பாவா யையுறேல்.

கற்பகவல்லி:—கண்டெனு மொழிசேர் வெண்டா மரையே!
வண்டமிழ்க் கூத்தர் வழுத்திய தென்கொல்?
'தந்தையார் முன்னர்ச் சாற்றிய மாற்றமே
வந்திடச் செய்ததிம் மணத்தினைப் பேசிட'
என்றன ரன்றோ? இதற்கு ளயர்த்தனை;

வெண்டா:—அன்றெம் பொற்கொடி! அயர்த்தன னல்லேன்;
ஆயினும் மணக்கினை யறைவோர் பலவித
வாயில்கள் கூறன் மகிதலத் தியல்பே;
அன்றியு முன்னு மனுப்பிய கூனி
தென்றமிழ்ச் செல்வி! நின் சித்திரங் காட்டிக்
காதலுங் கூறிய பின்னரே கூத்த
ரோதற் கெழுந்தன ரொழுங்கா யீண்டே
ஆதலிற் காதலி லணங்கே யையுறல்;

கற்பகவல்லி:—வெண்டா மரைவாழ் வண்டமிழ் வாணியைக்
கண்டா லொத்த காரிகாய்! உரைத்தன
வனைத்துஞ் சரியே; அம்பிகா பதியின்
மனக்கருத் தினைநாம் மன்றலிற் காண்குவம்.
செந்தா மரையாள் தென்றலஞ் சோலை
வந்துமே யிருப்பள் வாவா
செந்தளிர்க் கையாற் பந்தினை யுந்தவே.

(செல்ல.)

(காட்சி முடிகிறது)

மனிதனும் சமயமும்*

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

மனிதன், சமயம், மனிதனுக்கும் சமயத்துக்கு முள்ள தொடர்பு என இந்தச் சொற்பொழிவு மூன்று பிரிவுகளை யுடையது. மனிதன் கடவுளால் படைக்கப்பட்டான் என்று கிறிஸ்தவ சமய முதலிய சில சமயங்கள் கூறுகின்றன. மண்ணினால் ஓர் உருவம் செய்து அதற்குள்ளே கடவுள் தமது உயிர்ப்பை ஊதினதனால் ஒரு ஆண் மகன் முதலாவது உண்டானான் என்றும், அந்த ஆண் மகனுடைய விலா வெலும்பிலேயிருந்து ஒரு பெண் மகள் உண்டானாள் என்றும் கிறிஸ்து சமயம் கூறுகின்றது. சைவ சமயம் உயிர்கள் அநாதியே உள்ளன என்றும், அவை புல், பூண்டு, தாவரம், விலங்கு உருவங்களாய்ப் பூமியிற்

---

* சென்ற ஆனித் திங்கள் ௨௭-ம் நாள் செவ்வாய்க்கிழமை யன்று மாலையில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமையில், சென்னை 'நவசக்தி' பத்திராசிரியர் திருவாளர் வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் செய்த சொற்பொழிவு.

பிறந்து பின் மனிதன் உருவில் பிறக்கின்றன என்றும், மனித உருவில் வருகிற உயிர்கள் சிறப்பான ஆறு அறிவுகளை உடையன என்றும் கூறுகின்றது மேற்கு நாட்டு இயற்கை நூலறிவாளர் டார்வின் கூறுகிற உருவ வளர்ச்சி வழக்கும் சைவ சமயக் கொள்கைக்கு அரண் செய்கின்றது. மனித உயிர் களுக்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்து உலகில் வாழும்படி செய்தலே கடவுளுடைய படைப்பாகும். உலகப் பொருள்களைப் பகுத்து அறியும் அறிவே மக்களை விலங்கு களாகிய மாக்களிலிருந்து பிரிக்கிற சிறப்புப் பண்பாகின்றது.

சமயம்

உயிர்கள் மக்கட் பிறப்புக்கு வந்து பன்னூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் அறிவு விளங்கித் தாங்கள் கண்ணுற் காண் கின்ற உலகப் பொருளைப் பார்த்து ஆராய்ச்சி செய்யத்தொடங் கினார்கள் முதலாவது அவர்களது குறைந்த அறிவிற்கு உலகந் தான் புலப்படுகின்றது. ஆதலின் அவர்கள் உலகம் தவிர வேறு பொருள்கள் இல்லை என்று சொன்னார்கள். அவர்கள்தாம் சார்வாகர் அல்லது நாஸ்திக சமயத்தார்கள். மக்கள் பின்னும் பனனூறு ஆண்டுகள் உலகில் வாழ்ந்து அநுபவம் அடைந்த பொழுது அவர்கள் தங்கள் ஆராய்ச்சியால் உயிர் உண்டு என்று கண்டார்கள். அவர்கள் உலகத்தையும் உயிரையும் உள என்று ஒப்புக் கொண்டார்கள். கடவுளை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் கள் சமண சமயத்தார்கள் முதலியவர்கள். பின்னும் மக்கள் அறிவில் மிக்க வளர்ச்சி அடைந்த பொழுது அறிவில்லாத உலகத்தையும் அறிவறியாமைகளையும இன்ப துன்பங்களு முடைய உயிர்களையும் இயக்க வல்ல ஒரு முழு அறிவும் முழு இன்பமுமுள்ள பொருள் இருத்தல் வேண்டும் என்று உய்த் துணர்ந்து கண்டார்கள். அந்தப் பொருள்தான் கடவுள் என்று கூறப்படுவது. அவர்கள் உலகம் உயிர் கடவுள் என்று மூன்று பொருள்களும் உள என்று கூறினார்கள். உலகி லுள்ள சமயங்களெல்லாம் உண்டு என்ற கொள்கையிலும், உலகமும் உயிரும் உள என்ற கொள்கையிலும், உலகம் உயிர் கடவுள் இம்மூன்றும் உள என்ற கொள்கையிலும் அடங்கும். உலகம் உயிர் கடவுள் என்ற இந்த முப் பொருள்களிலும் ஒன்றுக் கொன்று உள்ள தொடர்புகளைப் பற்றிய வேறுபாடுகள் கூறும் சமயங்கள் பல உள. தமிழர்கள் உலகில் முதலாவது உண்டான மக்கள் என்றும், அவர்கள் முதலாவது வாழ்ந்து வந்த லெமூரியா என்ற (கடல் கொண்ட) நாட்டிலே முதலாவது மக்களது நாகரீகம் தொடங்கியது என்றும் எக்கல் (Heckel) முதலிய வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

இந்தத் தமிழர்கள் கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள்களும் உண்டு என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கண்டு பிடித்திருந்தார்கள். இடைக் காலத்தில் இந்த உண்மைகளை மக்கள் மறந்து விட்டதனால் ஆசிரியர் மெய்கண்டார் தோன்றிச் சிவஞானபோதம் என்னும் நூல் செய்து மக்களுக்கு அறிவுறுத்தினர். ஐரோப்பா நாடுகளிலும் முன்னே காண்ட் முதலிய சில உண்மை நூலாளர்கள் (தத்துவ சாஸ்திரிகள்) ஏகான்ம வாதக் கொள்கையைக் கூறிக் கொண்டு வந்தார்கள். இக் காலத்தில் டாக்டர் சில்லர் முதலிய உண்மை நூலாளர்கள் தோன்றிக் கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள்களும் உள என்று கூறுகின்றார்கள். தமிழர்கள் கூறும் சமயம் சைவ சமயம் என்றும் அவர்கள் கூறும் உண்மை (தத்துவம்) சைவ சித்தாந்தம் என்றும் கூறப்படும். இந்தச் சமயத்தில் புலாலூண் முற்றிலும் நீக்கப்பட் டிருத்தலன்றி எவ்வுயிர்களிலும் கடவுள் உளன் ஆதலின் அவைகளுக்குச் சிறிதும் துன்பஞ் செய்தல் கூடாது என்ற ஒழுக்கம் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த உண்மைகளைக் கடைப் பிடித்து ஒழுகுகின்றவர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் அவர்கள் சைவர்களே. திருநீறு தரித்தல் முதலியவை குறியீடுகள். அவைகளை அணியாதவர்களிலும் சைவமக்க ளிருக்கலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சாக்கிய நாயனாரே அதற்கு எடுத்துக் காட்டாய் விளங்குகிறார். சைவ சமயத்தில் கடவுள் தமது இடது கூற்றில் ஒரு பெண்ணை வைத்திருப்பதாகக் கூறியிருத்தலை அதன் உண்மை அறியாதவர்கள் எள்ளி நகையாடுகின்றார்கள். உலகமெல்லாம் ஆண் பெண்களாய் விளங்கும் பொழுது அதற்குக் காரணமா யிருக்கிறதை அவர்கள் அறியாமல் அவ்வாறு கூறுகின்றார்கள். சைவ சமயம் கூறுகிறபடி இல்வாழ்க்கை மிக்க சிறப்புடையது. பெண்களிடத்துள்ள காதலை நினையாது காமத் தன்மையை மாத்திரம் நினைந்து சிலர் அதனை இகழ்ந்து கூறுகிறார்கள்.

3. * மக்களுக்கும் சமயத்துக்கு முள்ள தொடர்பு (சம்பந்தம்):—இதனைப் பல சமயங்கள்பலவாறாகக் கூறுகின்றன. இந்தத் தொடர்புதான் அத்துவிதத் தொடர்பு என்று கூறப்படும் என்றும், கடவுள் உயிர்களுடன் பொருளால் வேறாயும கலப்பிலே ஒன்றாயும் செலுத்துதலினால் உடனாயும் இருத்தலே அத்துவித மாகும் என்று சைவ சமயம் கூறுகின்றது. இந்தத் தொடர்பு அநாதியா யுள்ளது. உயிர்கள் ஒரு காலத்தில் முழு இருளிலும் முழுத் துன்பத்திலும் இருந்தன. உலக வாழ்வுக்கு வந்த பின் அவை இருளிலும் ஒளியிலும் துன்பத்திலும் இன்

பத்திலும் உழல்கின்றன. இந்த உழற்சி நிலையி லிருந்து மக்கள் நீங்குதற்குக் கடவுளை எப்பொழுதும் நினைந்து உணர்தல் வேண்டும். இந்தத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்தவன் கடவுள் என்றும், அதன் உதவி யின்றி ஒரு கணமும் வாழ்தல் முடியாது என்றும் உணர்ந்து மக்களாகிய நாம் அவனிடத்தில் அன்பு செய்து அந்த அன்பு மேன் மேலும் வளர்ந்து வருதல் வேண்டும். இவ்வாறு மக்களுக்கும் கடவுளுக்கும் உண்டாகும் தொடர்பு உணர்ச்சியே சமய உணர்ச்சியாகும். இந்த உணர்ச்சி யில்லாத மக்கள் உருவில் மக்களாயிருந்தாலும் உண்மையில் மாக்களே. இந்த உணர்ச்சியை நாம் எத்துறை வாழ்க்கையிலும் உடையவர்களா யிருக்கலாம். அரசியல் வாழ்க்கையி லாயினும் வணிக வாழ்க்கையிலாயினும் வேறு எந்த வாழ்க்கையி லாயினும் நாம் கடவுளிடத்துள்ள தொடர்பு உணர்ச்சியுடன் ஒழுகுதல் வேண்டும். இந்த உணர்ச்சியுடன் ஒழுகினால் நாம் தூய உள்ள முடையவர்களாவோம். நமது வாழ்க்கை தூய வாழ்க்கை யாகும். தன்னலம் பற்றி மாத்திரம் வாழாமல் எல்லா உயிர்களுடைய நலத்தையும் கருதி வாழ்வோம். நமது நாடும் நலம் அடையும்.

புனிதவதியார்

[T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B.A.]

(சகஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி ஆசிரியர் சேக்கிழார் புனிதவதியாரின் வரலாற்றை எங்ஙனம் கூறியுள்ளார் என்று ஆராய்தல் தகும். இவ்வழகிய சரிதத்திற்குக் குன்றை முனிவர் காரைக்காலம்மையார் புராண மெனப் பெயர் சூட்டி யருளினர். தொண்டர் புராணத்தின் ஓதப் படும் புராணங்களின் பெயர்களை ஆராயின் அப்பெயர்கள் நாவலாரூரர் திருத்தொண்டத்தொகையில் ஓதியுள்ள அடியார் பெயர்களோடு பெரிதும் ஒப்புமை யுடையன ஆதலைக் காணலாம். இப்புனிதவதியாரைத் திருத்தொண்டத்தொகையில் எப்பெயர் கொண்டு போற்றியுள்ளார் என நோக்குதல் வேண்டும். சுந்தரர் அவரைப் புனிதவதியார் என்று போற்றவில்லை. செம்மை சேர் ஒரு மொழியாம் அம்மை யென்னும் அழகிய பெயரால் அடியணிந்திலர். பேயார் என்னும் பெரும் பெயர் கொண்டு "பேயார்க்கு மடியேன்" எனப் போற்றியுள்ளார். அங்ஙன மிருப்பவும் ஆசிரியர் சேக்கிழார் அம்மை என்னும் ஒரு

மொழியை அவர் பிறந்தருளப் பேரருள் பெற்ற பேரூராம் காரைக்காலொடு ஒருங்கு சேர்த்துக் "காரைக்காலம்மையார் புராணம்" எனப் பெயரிட்டுப் புராணம் செய்துள்ளார். வன்றொண்டப் பெருந்தகையார் "பேயார்க்கு மடியேன்" எனக் கூறின சொற்றொடரின் நோக்கத்தைக் கலை தோய்ந்த நெஞ்சினரெல்லாம் கண்டு களிக்கின்றனர். பேயார் என்பது வடிவிற் சிறிய தோர் மொழி. ஆயினும் அம்மொழியில் ஆழ்ந்து கிடக்கும் பொருளழகை ஆராய்தல் வேண்டும். புனிதவதியார் தூய்மையில் மிக்கார். கட்டழகிலும் மிக்கார். இறைவன் திருவடிக்கண் பதித்த அன்பினு மிக்கார். கட்டழகாவது உடல் நலத்தோடு மட்டும் அமைவது ஒன்றன்று. உறுப்புநலம் பலரும் அடைந்திருக்கலாம். அப்புற அழகிற்கு அசப்பண் பொழுகும் அழகுடையார் மிகச்சிலரேயாவர். உறுப்பு நலமாம் அழகொடு குணமென்னும் குன்றேறி நின்றாரே கட்டழகுடையார். அவ்வுடல்தான் ஒழியினும் ஒருவர்க்கு உள் நலம் ஓங்கப்பெற்றிருபபின் அவரே பெருவனப்புடையராவர். அக நலம் எல்லாவற்றுள்ளும் அண்டர் பிரான் திருவடிக்கீழ் அன்பே சிறந்த நலமாம். புனிதவதியார் வயதில் மிக இளைஞராக இருக்கும் போதே இறைவன் திருவடிக்கீழ் அன்பு வைத்தார். வயதோடு அன்பும் முதிர்ந்தது. வயதோடு அன்பு முதிரும் அச்செவ்வியை அன்புடன் அழகின் கொழுந்தெழுவது என உவமித்துள்ளார். கட்டழகு மிக்க அப்புனிதவதியார் கணவனார் தம்மை அணங்கெனக் கருதிய போது உடல் நலத்தைவிட்டுவிடத் துணிந்தார். முதுமைப்பருவத்தை அடைவதற்கு எவர்க்கும் விருப்பம் உண்டாவதில்லை. இளையராயிருப்பார்க்கு என்றும் இளமையுடனிருக்க எண்ண முண்டு. வயது முதிர்ந்து நரைத்தார்க்கும் அந்நரையைப் போக்க மருந்துண்டெனின், அதனைத் தேடியுழல்வார் பலர். உடனுறையாது வாழ்ந்து மூப்படைந்த திருநீலகண்டரையும் அவர் மனைவியாரையும் கண்டு ஆற்றாது சிவபெருமான் அவர்கட்கு மீண்டும் இளமையைக் கொடுத்தருளினர். புனிதவதியார் இளமையும் யாக்கை நலனும் ஒருங்கு வாய்க்கப்பெற்றாராயினும் தம் கணவனார் தம்மை அணங்கெனக் கருதி நீத்தார் என அறிந்தபின் பொன்போலழகிய தமதுடம்பைப் 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை' எனும் பொய்யா மொழிக்குப் பொருள் செய்வார்போல் அப்பருவுடலை நீத்துக் கண்டார் நடுங்கும் தகையதாம் பேயுருவம் வேண்டிப் பெற்றார். பெண்ணுருவம் போக்கிப் பேயுருவம் பெற்றது என் கருதியோ என்றெண்ணலாம். பெண்ணுருவம் பெற்றதால் ஆம் பயன்கொண்ட கொழுநனை மகிழ்வித்தல் அமையாத போது அதனை வேண்டாம் என்று நீத்தார். 'அவரோடுடன்

பிறந்து வளர்ந்த ஆதிதேவன்பால் அன்பு அப்போது மிக முறுகி வளரத் தலைப்பட்டது. அவ்வன்புதான் அப்பேயுடம்பை விரும்பச் செய்ததும் அடைவித்ததும். ஆதலின் அவ்வன் பேயுருவமே அன்பே உருவமென்னலாம. என்புருவம் என் றெள்ளினர் அறிவிலார்; அன்புருவம் எனக் கண்டு அகமகிழ்ந் தார் அறிவுடையார். ஆதலின் பேயுருவத்தை ஒருவர் எண்ணி ஞல் புனிதவதியாருக்கு இறைவன்பாலுள்ள பேரன்பும், அவ் வன்பு காரணமாக அவர் பெற்ற பேயுருவத்தின் பெருமையும் விளங்கும். (தொடரும்)

இறைவன் எங்குளன் ?*

[திரு. M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

என் உயிருக்குயிரே! நீ என்னை எஞ்ஞான்றும் விடாது பிடித்துக்கொண்டிருக்கின்ருயென்பதை யறிந்து, என் யாக்கை யைத் தூய்மையாய் வைத்துக்கொண் டிருப்பேன்.

என் நெஞ்சிற் பகுத்தறிவை மிளிரச் செய்த மெய்யறிவு நீயே யென்பதை யுணர்ந்து, என் நினைப்புக்களினின்றும் பொய் மைகளை அகற்றிவிட முயலுவேன்.

நீ என் நெஞ்சத்தையே கோயிலாய்க் கொண்டு உறைகிருய் யென்பதை யுணர்ந்து, என் நெஞ்சத்தினின்றும் அழுக்காயுள்ள வைகளை யெல்லாம் ஒழித்து, என் அன்பை வளர்த்துக்கொண் டிருப்பேன்.

என் உழைப்புக்கெல்லாம் திறன் நீயே அருள்கிருயென் பதை யுணர்ந்து, என் செயல்களிலெல்லாம் உன் புகழ் விளங்கு மாறு முயலுவேன்.

II

நின் மலரடிகளைத் தாங்குமிடம் இதோ விருக்கின்றது. ஏழை மக்களும், தாழ்ந்தவர்களும், திக்கற்றவர்களும் பதியு மிவ் விடத்திலேயே நின் மலரடிகளுமிருக்கின்றன.

உன்னை வணங்க நான் முயலுகின்றேன். ஏழை மக்களிடை யும், தாழ்ந்தவர்களிடையும், திக்கற்றவர்களிடையும் நீ கோயில்

---

* திரு. ரவீந்திரநாத தாகூர் இயற்றிய "கீதாஞ்சலி"யி லிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

கொண்டுள்ளாய், என் வணக்கம் அத்துணை ஊடுருவ முடிய வில்லையே.

ஏழை மக்களிடையும், தாழ்ந்தவர்களிடையும், திக்கற்றவர்களிடையும், நீ எளியாரது ஆடையுடன் உலவும்போது, மதம்பிடித்த நான் உன்னைப் பற்றிக்கொள்ள முடியாது.

ஏழை மக்கள், தாழ்ந்தவர்கள், திக்கற்றவர்கள் முதலானவர்கட் குற்ற தோழனாய் அவர்களிடையே நீ இருக்கையில் என் நெஞ்சம் ஒருகாலும் உன்னை யடையமுடியாது.

III

'செபம்' பண்ணுதலையும், பாடுதலையும், மணிகளை யெண்ணுதலையும் விட்டொழி. கதவுகளனைத்தும் மூடப்பட்டுள்ள கோயிலில், இருண்ட, தனிமையான வோர் மூலையிலிருந்து, நீ எவரை யடையத் தொழுதுகொண் டிருக்கிறாய்? உன் கண்களைத் திறந்து, நின் இறைவன் உன்னெதிரில் இல்லாமையைக் காண்.

நிலத்தைப் பண்படுத்திப் பயிரிடுவோனிடையும், பாதைகளைச் செப்பனிடக் கற்களைத் தகர்த்துக்கொண் டிருப்போனிடையும் இறைவனிருந்துகொண்டிருக்கின்றான். அவன் அவர்களிடையே வெயிலில் காய்ந்துகொண்டும், மழையில நனைந்துகொண்டு மிருக்கின்றான். அவனுடைய ஆடைகள் அழுக்குப் படிந்திருக்கின்றன. உன் உயர்ந்த ஆடையைக் களைந்துவிட்டு, இறைவனைபோன்று, அழுக்குப்படிந்துள்ளவனாய் வெளியில் வா.

விடுதலையா? இவ்விடுதலையை எங்குக் காண்பது? நமது இறைவனே மகிழ்ச்சியுடன், பிறப்பிக்கும் தொழிலை மேற்கொண்டு, அவ்விலங்கால் தன்னைப் பிணைத்துக்கொண்டுள்ளான். அவன் என்றென்றும் நம்முடனேயே யிருக்கின்றான்.

நீ வணங்குதலினின்றும் வெளியேறு. மலர்களையும், நறும் புகைகளையும் புறத்தே யொதுக்கு. உன் ஆடைகள் கிழிந்து அழுக்கடைந்துவிட்டால் என்ன கேடு சூழ்ந்துவிடும்? வியர்வை சிந்தப் பாடுபட்டு, இறைவனை யடைந்து அவனுடனிரு.

...வயிற்பிரிவு

குக்கூடத் தலைவி அறத்தொடு நின்ற பின்னரே அது தெரியுமானமை யாலும், அங்ஙனந் தலைவி தனக்கு அறத்தொடு நிற்குமாற்றால் தோழி உண்மையறியும் வகையை இறையனார் களவியல் கிளந்தோதுமானமை யாலும்* பிறர் கூறுகின்றாரென்பதற்கன்றிப் பிறவி யுணர்ச்சியினாற் கற் பொழுக்கம் மேற்கொள்ளலே நற்பெண்டிர்க்குச் சிறந்த ஒழுக்கமா மானமையாலும் அவருரை ஈண்டுச் சிறந்து தோன்றுமாறில்லை. தலைவி யின் கற்பினை, மழையை வேண்டினாலும் அதனைத் தரவல்ல கற்பு என்று சிறப்பித்தாள். பெண்டிர்தங் கற்புக்கு நினைந்தாங்கு மழைபெய்வித்தலை ஓரடையாளமாகப் பழந்தமிழ் நூல்களெல்லாம் ஒருங்கே கூறுகின்றன.

> "மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
> பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்"†

என்று மணிமேகலை கூறுதலுங் காண்க. 'பாடின்றிப் பசந்தகண்' என் னும் பாலைக்கலி யுள்ளும் 'வான்தருங் கற்பினாள்'‡ என்று வருதல் நினைவு கூரற்பாலது.

தலைவன், தோழி தலைவியரின் வேண்டுகோட்கிணங்கி ஊரவர் அலர்மொழி அடங்குதற்பொருட்டு ஒருவழித்தணந்து தனது இல்ல கத்தே இருந்தமையின், தலைவி ஆற்றாளாய் வேறுபட்டாள். கற்புடைப் பெண்டிர்க்குக் கணவனைப் பிரியும் ஒவ்வொரு நொடியும் ஒவ்வோரூழி யாய் நின்று மிக்க வருத்தத்தினை விளைத்தலால், அவர்க்கு அவ் வருத் தத்தாலான வேறுபாடு உடனே பொள்ளெனப் புலப்பட்டுத் தோன்றி விடும்.

> "தன்வயிற் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்
> அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்
> மடனொடு நிற்றல் கடனென மொழிப"$

என்னுந் தொல்காப்பியப் பொருளியனூற்பாவிலே தலைவன் பரத்தை யர் மாட்டுச் சென்றொழுகும் புறத்தொழுக்கத்தைக் கரந்து கூறுங் காலத்திலல்லாமல் மற்றக்காலங்களில் அவன்பாலுற்ற தனது வேட்கை நிலையினைப் புறத்துக் காட்டாது நிற்றலே தலைவிக்குக் கடனென்று ஆசிரியர் தொல்காப்பியனார் கட்டளையிட்டுரைத்தலின், ஈங்குத் தலை வன் ஒருவழித் தணந்து நிற்றலாற் காப்புக் கைம்மிக்குத் தன்னகம் நிற்குந் தலைவி தன் காதலன் வேட்கையினைப் பிறர்க்குப் புலப்படுத்திக் காட்டினாளென்றல் என்னையெனின், அவள் தன்னாற்றலுக்குள் அடங்கி நின்று அங்ஙனம் புறத்தார்க்குப் புலப்படுத்திக் காட்டினாள் அல்லள். ஆசிரியர் தொல்காப்பியனார் மேல்நூற்பாவிற் கூறினமையெல்லாம் தலைவி தன்னுணர்ச்சியோடு நின்று மகிழ்ச்சியின் கண்ணளாய்த் தன் தலைவனை மணந்து கற்பொழுக்கத்தில் நின்ற ஞான்று நேர்வனவே யல்லாமல், அவள் தன் தலைவன் பிரிவாற்றாமையினால் தன்னுணர்ச்சி

---

* இறைய, உக. † மணி; உஉ:சரு-சு. ‡ பாலைக்கலி, கரு.
$ தொல், பொருளியல், கக.

யிழந்து துன்பத்தின் கண்ணளாய் நாண்கெட்டு நிறையழிந்து மணம் பெற வியலாது மயங்கிக் களவொழுக்கத்தில் நிற்குனொன்று நேர்வன வல்ல. ஆதலாற் பிரிவுகாலத்தில் தலைவியை யறியாமலே அவள் களவொழுக்கத்தினலான காதலன்றன் ஆற்றுமையுணர்ச்சி

"அடுத்தது காட்டும் பளிக்குப்போல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்"*

என்னுந் திருவள்ளுவர்தம் திருவாய்மொழிக் கருத்திேெ டொப்ப வெளிப்பட்டுப் புறத்தார்க்குப் புலனுவதாயிற்றென்க.

இங்ஙனம் புலனுயது கண்ட தோழி, 'எனக்கிவ்வாறு புலப்பட்டாற் போலவே இனித் தாய்மார்க்கும் இது புலப்பட்டொழியு மாதலாலும், அவர்க்குப் புலப்படுமாயின் அவர் மிகவும் வருந்தி, உண்மையறியாமையான் அந் நோட்டந் தெரியும் பிறரை விஞவத் தொடங்கி அங்ஙனம் விஞவுதற்குமுன் யான் எப்போதுந் தலைவியின் பொறுப்பு மேற்கொண்டு அணுக்கமாய் நிற்றலால் என்னை விஞவுவா ராதலாலும், அதற்கு யான் தக்காங்கு மறுமொழி பகருங் கடப்பாடுடையே ஞதலாலும், அற்றுயின் அஞ்ஞான்று என்னை மறுமொழி பகர்வேன் ' என்று இங்ஙனம் நினைந்து அவள் ஆராய்ச்சி மிக்க நுணுகிய நல்லறிவுடைய ளாதலால் ஆராய்ந்துகொண்டிருப்பாள். இருந்த நிலையில். அவள் நினைந்த வண்ணமே அவட்குத் தாயான செவிலியும் ஒரு வேலை மேற்கொண்டு ஆண்டுப்போந்து தலைவியை நோக்கிச் சிறிது வேறுபாடுணர்ந்தாளாய் ஐயுற்றுப் பின்னும் அவளை அடிமுதல் முடிகாறும் உற்றுநோக்கி வேறுபாட்டுண்மையை முற்று முணர்ந்து அருகுநின்ற தோழியை விளித்து, 'என்னே இவட்குற்ற வேறுபாடு?' என்று கேட்பாள். தோழி மிக்க ஆராய்ச்சியோடும் விழிப்போடுங் கெடுதியுந் துன்பமும் எவர்க்கும் நேராதபடி மேலே தலைப்பிலெடுத்துக் கொண்ட செய்யுட்கருத்தை அச் செவிலிக்கு உரைதருவாள். இங்ஙனம் இவள் உரை தருதலையே 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்ற' லென்ப.

இனித் தோழி இவ்வாறு உரைதரற்கு 'அறத்தொடு நிற்ற' லென்பது என்னை யென ஆராய்தல் வேண்டும். 'அறத்தொடு நிற்ற' லென்பது தானுந் தன் தலைவியும் இதுகாறும் அறத்தொடு பொருந்தவே நடந்திருப்பதாகத் தோழி காட்டிநிற்ற லென்று பொருள்படும். அறம் என்பதை இங்கு முறை, தக்கது என்று கொள்ளல்வேண்டும். இறையனுரகப்பொரு ளுரையாசிரியரும் 'அறமென்பது தக்கது, தக்கதனைச் சொல்லிநிற்றல தோழிக்கும் உரித்தென்றவாறு; அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு, கற்பின்றலை நிற்ரலென்பதூஉமாம்' † என்று இவ்வாறே உரைகிளந்தா ரென்க. தலைவனுந் தலைவியும் முதன் முதல் இயற்கைப் புணர்ச்சி ஞான்று ஒருவரை யொருவர் தலைப்பட்டுப் புணர்ந்த களவொழுக்கச் செய்தி தம்மேற் குற்றந்தீர்ந்த அறச்செய்கையே யாகு மென்று இவ்வாறு தோழி கூறுதலே அறத்தொடு நிற்றலா மென்பது

---

* திருக்குறள், குறிப்பறிதல், ௬. † இறைய, உ௯.

குக்கூடத் தலைவி அறத்தொடு நின்ற பின்னரே அது தெரியுமானமையாலும், அங்ஙனந் தலைவி தனக்கு அறத்தொடு நிற்குமாற்றால் தோழி உண்மையறியும் வகையை இறையனார் களவியல் கிளந்தோதுமானமையாலும்* பிறர் கூறுகின்றாரென்பதற்கன்றிப் பிறவி யுணர்ச்சியினாற் கற்பொழுக்கம் மேற்கொள்ளலே நற்பெண்டிர்க்குச் சிறந்த ஒழுக்கமாமானமையாலும் அவருரை ஈண்டுச் சிறந்து தோன்றுமாறில்லை. தலைவியின் கற்பினை, மழையை வேண்டினாலும் அதனைத் தரவல்ல கற்பு என்று சிறப்பித்தாள். பெண்டிர்தங் கற்புக்கு நினைந்தாங்கு மழைபெய்வித்தலை ஓரடையாளமாகப் பழந்தமிழ் நூல்களெல்லாம் ஒருங்கே கூறுகின்றன.

“மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்”†

என்று மணிமேகலை கூறுதலுங் காண்க. ‘பாடின்றிப் பசந்தகண்’ என்னும் பாலைக்கலி யுள்ளும் ‘வான்தருங் கற்பினாள்’‡ என்று வருதல் நினைவு கூரற்பாலது.

தலைவன், தோழி தலைவியரின் வேண்டுகோட்கிணங்கி ஊரவர் அலர்மொழி அடங்குதற்பொருட்டு ஒருவழித்தணந்து தனது இல்லகத்தே இருந்தமையின், தலைவி ஆற்றாளாய் வேறுபட்டாள். கற்புடைப் பெண்டிர்க்குக் கணவனைப் பிரியும் ஒவ்வொரு நொடியும் ஒவ்வோரூழியாய் நின்று மிக்க வருத்தத்தினை விளைத்தலால், அவர்க்கு அவ் வருத்தத்தாலான வேறுபாடு உடனே பொள்ளெனப் புலப்பட்டுத் தோன்றி விடும்.

“தன்வயிற் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்
மடனொடு நிற்றல் கடனென மொழிப”$

என்னுந் தொல்காப்பியப் பொருளியனூற்பாவிலே தலைவன் பரத்தையர் மாட்டுச் சென்றொழுகும் புறத்தொழுக்கத்தைக் கரந்து கூறுங் காலத்திலல்லாமல் மற்றக்காலங்களில் அவன்பாலுற்ற தனது வேட்கை நிலையினைப் புறத்துக் காட்டாது நிற்றலே தலைவிக்குக் கடனென்று ஆசிரியர் தொல்காப்பியனார் கட்டளையிட்டுரைத்தலின், ஈங்குத் தலைவன் ஒருவழித் தணந்து நிற்றலாற் காப்புக் கைம்மிக்குத் தன்னகம் நிற்குந் தலைவி தன் காதலன் வேட்கையினைப் பிறர்க்குப் புலப்படுத்திக் காட்டினாளென்றல் என்னையெனின், அவள் தன்னாற்றலுக்குள் அடங்கி நின்று அங்ஙனம் புறத்தார்க்குப் புலப்படுத்திக் காட்டினாள் அல்லள். ஆசிரியர் தொல்காப்பியனார் மேல்நூற்பாவிற் கூறினமையெல்லாம் தலைவி தன்னுணர்ச்சியோடு நின்று மகிழ்ச்சியின் கண்ணளாய்த் தன் தலைவனை மணந்து கற்பொழுக்கத்தில் நின்ற ஞான்று நேர்வனவே யல்லாமல், அவள் தன் தலைவன் பிரிவாற்றாமையினால் தன்னுணர்ச்சி

* இறைய, உக. † மணி; உஉ:சகூ-சு. ‡ பாலைக்கலி, கடு.
$ தொல், பொருளியல், கக.

யிழந்து துன்பத்தின் கண்ணளாய் நாண்கெட்டு நிறையழிந்து மணம் பெற வியலாது மயங்கிக் களவொழுக்கத்தில் நிற்குஞானறு நேர்வன வல்ல. ஆதலாற் பிரிவுகாலத்தில் தலைவியை யறியாமலே அவள் களவொழுக்கத்தினுலான காதலன்றன் ஆற்றாமையுணர்ச்சி

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்"*

என்னுந் திருவள்ளுவர்தம் திருவாய்மொழிக் கருத்தினே டொப்ப வெளிப்பட்டுப் புறததார்க்குப் புலனுவதாயிற்றென்க.

இங்ஙனம் புலனுயது கண்ட தோழி, 'எனக்கிவ்வாறு புலப்பட்டாற் போலவே இனித் தாய்மார்க்கும் இது புலப்படாதொழியு மாதலாலும், அவர்க்குப் புலப்படுமாயின் அவர் மிகவும் வருந்தி, உண்மையறியாமையான் அந் நோட்டந் தெரியும் பிறரை வினவத் தொடங்கி அங்ஙனம் வினவுதற்குமுன் யான் எப்போதுந் தலைவியின் பொறுப்பு மேற்கொண்டு அணுக்கமாய் நிற்றலால் என்னை வினவுவா ராதலாலும், அதற்கு யான் தக்காங்கு மறுமொழி பகருங் கடப்பாடுடையே னுதலாலும், அற்றுயின் அஞ்ஞான்று என்னை மறுமொழி பகர்வேன்' என்று இங்ஙனம் நினைந்து அவள் ஆராய்ச்சி மிக்க நுணுகிய நல்லறிவுடைய ளாதலால் ஆராய்ந்துகொண்டிருப்பாள். இருந்த நிலையில், அவள் நினைந்த வண்ணமே அவட்குத் தாயான செவிலியும் ஒரு வேலை மேற்கொண்டு ஆண்டுப்போந்து தலைவியை நோக்கிச் சிறிது வேறுபாடுணர்ந்தாளாய் ஐயுற்றுப் பின்னும் அவளை அடிமுதல் முடிகாறும் உற்றுநோக்கி வேறுபாட்டுண்மையை முற்று முணர்ந்து அருகுநின்ற தோழியை விளித்து, 'என்னே இவட்குற்ற வேறுபாடு?' என்று கேட்பாள். தோழி மிக்க ஆராய்ச்சியோடும் விழிப்போடுங் கெடுதியுந் துன்பமும் எவர்க்கும் நேராத படி மேலே தலைப்பிலெடுத்துக் கொண்ட செய்யுட்கருத்தை அச் செவிலிக்கு உரைதருவாள். இங்ஙனம் இவள் உரை தருதலையே 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்ற' லென்ப.

இனித் தோழி இவ்வாறு உரைதரற்கு 'அறத்தொடு நிற்ற' லென்பது என்னை யென ஆராய்தல் வேண்டும். 'அறத்தொடு நிற்ற' லென்பது தானுந் தன் தலைவியும் இதுகாறும் அறத்தொடு பொருந்தவே நடந்திருப்பதாகத் தோழி காட்டிநிற்ற லென்று பொருள்படும். அறம் என்பதை இங்கு முறை, தக்கது என்று கொள்ளல்வேண்டும். இறையனுரகப்பொருு ளுரையாசிரியரும் 'அறமென்பது தக்கது, தக்கதனைச் சொல்லிநிற்றல தோழிக்கும் உரித்தென்றவாறு; அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு, கற்பின்றலை நிற்றலென்பதூஉமாம்' † என்று இவ்வாறே உரைகிளந்தா ரென்க. தலைவனுந் தலைவியும் முதன் முதல் இயற்கைப் புணர்ச்சி ஞான்று ஒருவரையொருவர் தலைப்பட்டுப் புணர்ந்து களவொழுக்கஞ் செய்தி தம்மேற் குற்றந்தீர்ந்த அறச்செய்கையே யாகுமென்று இவ்வாறு தோழி கூறுதலே அறத்தொடு நிற்றலா மென்பது

* திருக்குறள், குறிப்பறிதல், க.　　† இறைய, உக.

ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துமாம். அவர்க்கு இக் கருத்துண்மை, தோழியின் கூற்றுக்களை யெல்லாந் தொகுத்துக் கூறுமிடத்து,

"முன்னிலை அறனெனப் படுதலென்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்" *

என்று அவள் அறத்தொடு நிற்குங்காற் கூறுங் கூற்றினை யெடுத்து அவர் கூறுதற்கண் மிகவுந் தெளிவாய்ப் பெறப்படுகின்றது. இந்த நூற்பாத் தொடரினை ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'அறனெனப் படுதல் இருவகைப் புரை தீர் முன்னிலையென்று கிளவி தாயிடைப் புகுப்பினும்' என்று உரை நடைப்படுத்தி, 'அறனென்று சொல்லப்படுந் தன்மை இருவர்கண்ணுங் குற்றந்தீர்ந்த எதிர்ப்பாடு என்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்துஞ் செலுத்தினும்' என்று அதற்கு விளக்கமான உரையுங் கூறுமாற்றான், தலைவிக்கு நிகழ்ந்த களவொழுக்கம் அவள்மேற் குற்றந் தருவதன்று என்று குற்றமில் வகையாய்க் கூறுதலே அறத்தொடு நிற்ற லாம் என்னும் ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்து இனிது புலப்படுதல் காண்க. தொல்காப்பியனார் அறத்தொடு நிற்றலைக் குற்றமில் வகை யாய்க் கூறும் 'புரைதீர்கிளவி' யென்று கூறியதனையே இறையனாரும் மாறில் வகையாய்க் கூறும் 'மாறுகோளில்லா மொழி' யென்று,

"தோழிக் குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோ ளில்லா மொழியுமா ருளவே" †

என்று தமது களவியலுட் கூறினர். ஈங்குப்போந்த இம் 'மாறுகோ ளில்லா மொழி' யென்பதற்கு அதன் உரையாசிரியர் நக்கீரனார் மிக அழ கான விளக்க வுரையினைத் தந்திடுகின்றார். அது: 'எற்றினொடு மாறு கொள்ளாமையோ வெனின், தாயறிவினொடு மாறு கொள்ளாமையுந் தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாமையுந் தலைமகளது கற்பி னொடு மாறு கொள்ளாமையுந் தோழி தனது காவலொடு மாறு கொள் ளாமையும் நாணினொடு மாறு கொள்ளாமையும் உலகினொடு மாறு கொள்ளாமையு மெனக் கொள்க' என்பது. தலைவிக்கு வாய்ந்த கள வொழுக்க நிகழ்ச்சியினால் தம்மேற்படுவதான குற்றம் ஏது மில்லை யென்று இவ்வாறெல்லாம் இவையனைத்திற்கும் மாறு கோளில்லாத வகையாய் அதாவது குற்றமில்லாத வகையாய்த் தோழி ஆராய்ந்து கூறு மாற்றை அவள் அறத்தொடு நின்று கூறிய கூற்றின்கண் வைத்து உற்று நோக்கினானுந் தெள்ளிதின் விளங்கும்.

தோழி செவிலிக்கு அறத்தொடு நின்று கூறுஞ் செய்தி முதன் முதலில் தலைவியால் தோழிக்கு அறத்தொடு நின்று கூறப்படுதலால், அவள் கூறுமாறே வைத்து இவ்வுண்மையைக் காண்பாம். தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்குங் கூற்றினை இறையனாரகப்பொரு ளுரை யாசிரியர் தமது அழகுவாய்ந்த இனிய உரை நடையினாற் செவ்விதின் இயம்புகின்றமையால், அவர் நடையுரையினையே இங்கு எடுத்துக்

---

* தொல், களவு, உ௩. † இறைய, ௧௪.

கொண்டு தாயறிவினோடு மாறு கொள்ளாமை முதலிய மேலுண்மை முடிபினை ஆராய்ந்து தெளிதல் நன்று. அது பின்வருமாறு:

'இன்னவிடத்து ஒருஞான்று நீயும் ஆயங்களுந் தழையுங் கண்ணியுங் கோடற்கு எண்ணிச் சிறிது நீங்கினாய்; யான் நின்று ஒரு மணிச்சுனை கண்டேன்; கண்ட அம்மணிச்சுனைதான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப் பூக்களால் மயங்கி மேதக்கது கண்டு வேட்கையான் ஆடுவான் இழிந்தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன்; புக்குத் தோழியோ வென, நீ அங்ஙனங் கேளாயாயினாயாக, ஒரு தோன்றல் தோன்றிவந்து எனது துயர் நீக்குதற்காகத் தன் கை நீட்டினவிடத்து மலக்கத்தான் நின்கையெனப் பற்றினேன்; பற்ற வாங்கிக் கரைமேனிறீஇ நீங்கினான்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேனாயினேன்; நீ எவ்வெல்லைக் கண்ணுங் கைவிடாதாய் அஞ்ஞான்று கைவிடலினையாக்கிற்று விதியாகாதே; இனிப் பிறிதொன்றுங் கொல்லோவெனக் கலங்கி வேறுபட்டேனென்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நிற்கும்' என்பது. இவ்விளக்க உரையின்கட்போந்த கருத்துரைப் பொருளையே தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்குமிடத்து மேலே தலைப்பிலெடுத்துக் காட்டியவாறு கூறுவாளாயினாள். புனலின்கண் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டமையின் இதனைப் புனல்தருபுணர்ச்சி யென்று அகப்பொருணூல்கள் கூறா நிற்கும். இங்ஙனமே பூத்தருகின்ற ஏதுவால் முதன்முதல் அவர்தமக்குள் எதிர்ப்பாடு நேருமாயின், அதனைப் பூத்தருபுணர்ச்சி யென்றும், தலைமகள்மேற் சினந்தேறிவந்த களிற்றினைக் கொன்றுநீக்கி அவளை அவ்விடுக்கணின்றும் பாதுகாக்கும் ஏதுவால் முதன்முதல் அவர் தமக்குட் கூட்டம் நிகழுவதாயின், அதனைக் களிறுதருபுணர்ச்சி யென்றும் ஆசிரியன்மார் கூறுவர். இன்னும் பிறபல ஏதுக்களால் அம்முதற் புணர்ச்சி நிகழுமாயின், அவையெல்லாம் அவ்வவ்வேதுக்களால் நிகழும் புணர்ச்சிகள் என்று கூறப்படும். இவற்றையும், இவற்றுக்கெல்லாம் 'ஏதீடு' என்னும் பெயருண்மையையுந் தொல்காப்பியப் பொருளியலுரையுள்* ஆசிரியர் நச்சினார்க்கினியர் தெளிவாக எழுதியிருக்கின்றார்.

இனிப் புனல்தரு புணர்ச்சியை அறத்தொடு நின்று கூறும் வகையில், தாயின் விருப்பத்துக் கிணங்கவே தோழியுந் தலைவியும் பொழிற்கண்சென்று விளையாடச் சென்றாராதலின், அப்புனல்தரு புணர்ச்சி நிகழ்ச்சித் தாயறிவினோடு மாறுகொள்ளாதாயிற்று. 'புக்குத் தோழியோவென' வென்றமையால் தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாதாயிற்று. 'நீட்டினவிடத்து மலக்கத்தான் நின்கையெனப் பற்றினேன்' என்றமையால், தலைமகள் கற்பினோடு மாறுகொள்ளாதாயிற்று. 'நீ எவ்வெல்லைக்கண்ணுங் கைவிடாதாய் அஞ்ஞான்று கைவிடலினையாக் கிற்றுவிதியாகாதே' யென்றமையால் தோழி காவலொடு மாறுகொள்ளாதாயிற்று. 'நீ அன்று கவலுதியெனச் சொல்லேனாயினேன்' என்றமையால் தலைமகள் நாணினொடு மாறுகொள்ளாதாயிற்று. 'இனிப் பிறிதொன்றுங் கொல்லோவெனக் கலங்கி வேறுபட்டே'னென்றமையால் உலகினொடு மாறுகொள்ளாதாயிற்று. எனவே, மறைவில் நிகழ்ந்த களவு நிகழ்ச்சியை அறமெனக் காட்டுமாறும் அங்ஙனங்காட்டி நிற்றலே அறத்தொடு நிற்றலாமாறும் இதனால் நன்கு விளங்கும்.

---

* தொல், பொருளியல், ௧௩.

இறையனாரகப்பொருளுரையிற் கூறப்படும் இப்புனல்தரு புணர்ச்சியைவிட,

"வண்டலுற் றேமெங்கண் வந்தொரு தோன்றல் வரிவளையீர்
உண்டலுற் றேமென் றுநின் றதொர்போழ் துடையான்புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர எம்முயிர் கொண்டுதந்து
கண்டலுற் றோர்நின்ற சேரிச்சென் றனெனோர் கழலவனே."*

என்று திருச்சிற்றம்பலக் கோவையாரிற் கூறப்படும் புனல்தருபுணர்ச்சி, தலைவி தானே நீர்க்கண் இறங்காது வாளா கரைக்கண் நின்றிருந்த போதே திடீரென்று கடல்நீர் அலைபெருகி மேல் வந்தமையால் ஆங்கு நின்ற தோன்றலொருவன் கைப்பிடித்துத் தொட்டெடுக்க நேர்ந்ததென்று விளக்குதலின், அது தலைவியின் களவு நிகழ்ச்சிக்கட் சிறிதுமே பிழைதரா வகையாய் நிற்கின்றது. இன்னும் இவ்வறத்தொடு நிற்குமாறு பலப்பல வகையாகவும் அகப்பொருணூல்களிற் கூறப்படுகின்றன. அவற்றையெல்லாம் ஈங்கெடுத்துக் காட்டி ஒவ்வொன்றும் மாறுபடாத குற்றமில் வகையாய் நிற்குமாற்றை விளக்கப்புகின் இது மிக விரியுமாதலால், அவற்றையெல்லாம் விரிந்த நூல்களிற் கண்டு அவை அறத்தொடு பொருந்துமாற்றைக் கண்டுகொள்ளல் வேண்டும். அவ்வறத்தொடு நின்று கூறும் உரைகளிலெல்லாம், இக்களவொழுக்க நிகழ்ச்சியினால் எவரும எவரிடத்துங் குற்றங்காணு வகையாயும், இவ்வாறு நிகழ்ந்ததும் ஒரு நல்வினைப் பயனேயாமென்று மகிழ்ந்தேற்றுக் கொள்ளும் வகையாயும் படைத்து மொழியுந் திறம் அறிந்து வியத்தற்பாலது.

அற்றாயினும், இவ்வகையாலெல்லாம் அறத்தொடு நின்று கூறுங் கூற்றுகள் உண்மைக் கூற்றுகளாயிராமல், தலைவியாலுந் தோழியாலும் படைத்து மொழிவதான வெறும் பொய்ம்மொழிகளா யிருக்கின்றமையின், அங்ஙனமவர் பொய் புணர்த்துக்கூறுதல் அறத்தொடு பொருந்துவதோவென்றால், இறைவன் திருக்குறிப்போடு முழுதொத்து நிற்கும் இந் நிகழ்ச்சிவினை நிகழ்ந்தவாறே வெளிப்படையாய்க் கூறப்புகுந்தால் நற்றாய் முதலிய சுற்றத்தார் அதனை மாறுகொள நினைந்து கடைப் பிடியாது விடுத்து, கூறுவாரையும் உண்மையறியாமையான் வெகுள்வராதலாலும், இறைவன் அருட் குறிப்புக்கு இயைந்து எவர்க்குங் கெடுதி பயவாத நிலையில் நன்மையே பயக்கும் நற்செய்கையாமாறால் அதனை ஒளித்துரைத்தேனும் பாதுகாத்து நிற்பது நன்றேயாமாதலாலும் அறத்தொடு நிற்குங் கூற்றுக்கள் அவை உண்மையல்லாவிடினும் பொய்யுரைகளாக மாட்டாவென் றறிதல்வேண்டும். இதுவே ஆசிரியன்மார்க்குங் கருத்தாதல், 'அஃதேதெனின், நிகழ்ந்த ஒழுக்கம மறைத்துக் களைந்து படைத்து மொழிந்தமையாற் பொய்யுரைத்தவாறும் பிறவெனிற், பொய்யுரைக்கப்பட்டதாகாது; என்னை? பழியும் பாவமும் அதனால் வாராமையின்; என்னை?

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"†

---

* திருச்சிற், ௨௧௰. †திருக்குறள், வாய்மை, ௨.

என்றாராகலிற் குற்றமின்றென்பது’ என்று தெய்வப் புலமை வாய்ந்தா ரென்று பெரிது பாராட்டப்படும் ஆசிரியர் நக்கீரனாரே நிறுத்துரைக்கு மாற்றால் தெளியப்படும். ஆனால் தலைவியின் களவொழுக்க நிகழ்ச்சி இறைவன் திருக்குறிப்போடு முழுதொத்துத் தீமை பயவாத நிலையில் நிகழ்வதா யிருந்தால் மட்டுமே, அஃதிவ்வாறு ‘வாய்மையிடத்த வென்று பாராட்டி யெடுத்துக் கொள்ளப்படுமென்றும், இன்றேல் ‘பொய்மை’ யென்று பழித்துரைக்கப்படுமென்றும் ஈன்றாய்க்கருத்திருத்தல்வேண்டும்.

இனி,

“காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்
அவனூ றஞ்சுங் கால மாயினும்
அந்நா லிடத்தும் மெய்ந்நா ணொரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக் குரித்தே”*

என்னும் இறையனாரகப்பொருணூற்பாக்கொண்டு இவ்வறத்தொடு நிற்ற லென்பது நான்கிடங்களில் நிகழுமென்பதும்,

“எளித்தல், ஏத்தல், வேட்கை யுரைத்தல்,
கூறுதல் உசாதல், ஏதீடு, தலைப்பாடு,
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்”†

என்னுந் தொல்காப்பியப் பொருளிய னூற்பாக்கொண்டு அஃது ஏழு வகைகளாய் நிகழுமென்பதும் அறியப்படும். இவற்றுள் நிகழுமிடங்கள் நான்கனுள்ளும் ஒருவழித் தணத்தலால் நேர்ந்த ஆற்றாமையினால் நிக ழும் இவ் வறத்தொடு நிற்றலென்பது ‘காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகினும்’ என்பதன்கண் அடங்கு மென்றும், புனல்தரு புணர்ச்சி முதலான ஏதுக்கள் காட்டித் தன் தலைவிக்கு நிகழ்ந்த களவொழுக்கத் தினைத் தாய்மார்க்குப் புலப்படுத்திக் காட்டுவதான இவ்வறத்தொடு நிற்றல், நிகழும் வகைகள் ஏழனுள்ளும் ‘ஏதீடு’ என்னும் வகையுள் அடங்குமென்றுந் தெளிதல் வேண்டும். இவற்றை அவைதம்மின் உரைகளைவைத்துக் கண்டுகொள்க. இனி மேற்காட்டியவாறே,

“தோழி செவிலிக் கறத்தொடு நிற்றல்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றல்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்ற லென்ப நெறியுணர்ந் தோரே”

---

* இறைய, ௨௧. † தொல், பொருளியல், ௧௨.

என்னும் விதிப்படி, செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தந்தை தமையன் மார்க்கும் அறத்தொடு நின்று தலைவியின் திருமணத்தை முடித்துவைப்ப ரென்க.

மதிப்புரை

ஒட்டக்கூத்தர் வரலாறு:— இது கோயமுத்தூர் திருவாளர் சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களால் தொகுக்கப்பட்டது. இவர் இவ்வரலாற்றைப் பகுதி பகுதியாகப் பகுத்தெடுத்து விளக்குந் திறம் மிகச்சிறந்ததா யிருக்கின்றது. மேலும், வரலாற்று முறை வழுவாமலும், வேண்டுங் கல்வெட்டுக்களைச் சான்றாகக் கொண்டும் எளிய நடையில் நன்கு விளக்கப்பட் டிருத்தலால், இஃது ஒட்டக்கூத்தர் உண்மை வரலாறு காணப்புகுவார்க்கு ஒரு பெருங்கருவியா யிருக்கு மென்பது திண்ணம். இந்நூல் பள்ளிக்கூடங்களிலும் பாடமாக வைத் தற்குரியது. ௨௨௪ - பக்கங்கள் உள்ளது. விலை ரூபா ௧.

படிக்காசுப் புலவர் சரிதம்.—இஃதும் கோயமுத்தூர் திருவாளர் சி. கு. நாராயணசாமி முதலியா ரவர்களாலேயே தொகுக்கப்பட் டிருக்கின்றது. இந்நூலும் கால வாராய்ச்சி முதலியன விளங்கச் செவ்வையாக எழுதப்பட் டிருக்கின்றது. தமிழ்ப்புலவர் வரலாறுகளைத் தொகுத் தெழுதுவதில் இவ்வாசிரியர் ஊக்கமுந் திறமும் பெற்றுத் திகழ்கின் றமைக்குத் தமிழ்நாடு நன்றி செலுத்துங் கடப்பாடுடைய தாகின்றது. பள்ளிக்கூடங்களிற் பாடமாக வைத்தற்கு இது மிகவும் உரியது. விலை அணா ௮.

வேண்டுவோர் இவ்விரண்டு நூல்களையும் மதுரை, புத்தக வியாபாரம் திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கட்கு எழுதுக.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்:—இதனை இயற்றினவர் திருவாளர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. அவர்களாவர். சுந்தரமூர்த்திகள் வரலாறு இதன்கண் பல தலைப்புகளுடன் தக்க அகப் புறச் சான்றுகளோடு எளிய இனிய நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. வரலாற்று முறை யாராய்ச்சியும் இந்நூலிற் சிறந்தவகையாய் விளங்குகின்றது. நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் இட்டிருக்கும் அடிக் குறிப்புகளும், இறுதியிற் சேர்க்கப்பட் டிருக்குஞ் சுந்தரர் தேவார ஆராய்ச்சி சுந்தரரைப்பற்றிப் பிறர் கூறியிருக்குங் குறிப்புகள் கொண்ட அநுபந்தம் முதலியவைகளும் வரலாறு கற்பார்க்கு மிக்க உதவியா யிருக்கும். சுந்தரரைப் பற்றிய ஏனை வரலாற்று நூல்களை வைத்திருப் பவர்க்கும் இஃது இன்றியமையாதது. விலை அணா—௬. வேண்டுவோர் ‘292, லிங்கசெட்டி தெரு, சென்னை’ யென்று இதன் ஆசிரியர்க்கு எழுதுக.



அப்பர் பெம்மான் அப்பூதியடிகளது திருமகனை உயிரெழுப்பியது.